தொல்காப்பியம்

மக்கள் வாழ்வின் இலக்கணம்

ஆசிரியர்

நெல்லை. இரா. சண்முகம்

கோலாலம்பூர்

ர் தமிழ் நிலைய வெளியீடு

தொல்காப்பியம்

மக்கள் வாழ்வின் இலக்கணம்

ஆசிரியர்

நெல்லை. இரா. சண்முகம்

கோலாலம்பூர்

தொல்காப்பியர் தமிழ் நிலைய வெளியீடு


இந்நூல் கிடைக்குமிடம்:

தொல்காப்பியர் தமிழ் நிலையம்,
அங்கமங்கலம்,
குரும்பூர் அஞ்சல்,
திருநெல்வேலி.

1957


விலை] உரிமை ஆசிரியர்க்கே. [ரூ. 2

ரத்தினம் (கிளை) அச்சகம், 65, திருப்பள்ளி தெரு, சென்னை-1



பாண்டியன் அவையில், அதங்கோட்டாசான் தலைமையில்
தொல்காப்பியம் அரங்கேற்றுதல்.

உள்ளுறை



இந்நூலாசிரியர் : இரா. சண்முகம்

முன்னுரை

நிலந்தரு திருவிற் பாண்டிய மன்னன் - தமிழ் கூறும் நல்லுலகின் மன்னன். பாண்டியன் அவையத்தில் - மன்னன் அவையத்தில் அரங்கேற்றப்பட்ட நூல் தொல்காப்பியம். தொல்காப்பியம் தோன்றிய காலம் ஐயாயிரத்து அறுநூறு என்கின்றனர் ஆராய்ச்சியாளர்.

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்"

என்று தொல்காப்பியம் மரபியல் தொண்ணூற்று நான்காம் நூற்பா கூறுகிறது. இந் நூற்பாவுக்கு உரை எழுதிய பேராசிரியர் இதுகுறித்து விரித்துக் கூறியுள்ளார். பேராசிரியர் கருத்து நம்மைப் பெரிதும் சிந்திக்கவைக்கிறது; உய்த்துணருமாறு தூண்டுகிறது; உண்மை காண நம்மை ஈர்த்துச் செல்கிறது.

பேராசிரியர்:—

"கடைச் சங்கத்தாருட் களவியற் பொருள்கண்ட கணக்காயனுர் மகனுர் நக்கீரர், இடைச் சங்கத்தார்க்கும் கடைச் சங்கத்தார்க்கும் நூலாயிற்றுத் தொல்காப்பியம் என்றுராகலானும், பிற்காலத்தார்க்கு உரை எழுதிேனாரும் அது கூறிக் கரிபோக்கினுராகலானும், அவர் புலவுத் துறந்த நோன்புடையராகலாற் பொய் கூறுராகலானும் என்பது." தொல்காப்பியம், மரபியல் நூற்பாக்கள் அனைத்திற்கும் பேராசிரியர் எழுதிச் செல்லும் உரைகள் தொல்காப்பியம் முதல் நூலா? அன்றி வழி நூலா? என்று மயங்குவார்க்கு நல்ல விடையளித்திருக்கிறது. ஆராய்ச்சியாளர் இதுகுறித்து ஆராய்தல் பெருநலன் விளையுமென்று நம்புகிறேன்.

பாண்டிய மன்னன் - மன்னனைச் சார்ந்தோர், அவைகளப் புலவர், தமிழறிவு சான்ற பல்லோர் கூட்டம், அதங்கோட்டா சிரியர், தொல்காப்பியர், தொல்காப்பிய நூல் அரங்கேற்றம், இவை யெல்லாம் சிந்திக்கத் தக்கன; ஆராய்தற்குரியன; இது ஒரு தனிப் பெருஞ் சிறப்பை நல்கும் பெற்றிவாய்ந்த அரிய நிகழ்ச்சியாகும். நிலந்தருதிருவிற் பாண்டியன் நாட்டிற் களித்த - தமிழுக்களித்த - தமிழக மக்களுக்களித்த ஒரு தனிப் பெருமையாகும்; செய்தற்கரிய ஒரு தனிச் செயலாகும்; ஆற்றுதற்கரிய அரும்பணியாகும்.

பாண்டிய மன்னன் தமிழ் தோன்றிய நாட்டில் தோன்றி யவன்; நாட்டினை ஆண்டவன்; தமிழ் வளர்த்தவன்; சங்கம் நிறுவியவன்; புலவர்களைப் போற்றியவன்; தொல்காப்பியரை ஆதரித்தவன்; பாதுகாத்து ஓம்பியவன்; நாட்டு மக்களின் நலனில் கண்ணுங் கருத்துமாய் வாழ்ந்தவன்; ஆட்சி நடாத்தியவன்.

தொல்காப்பியர், தமிழின் தொன்மையைப் பாதுகாத்தவர்; தமிழ்கூறும் நல்லுலகம் முழுமையும் சுற்றியவர்; மக்கள் வாழ்வு நிலை அறிந்தவர்; நாட்டு வழக்கு அறிந்தவர்; உலக வழக்கு அறிந்தவர்; செய்யுள் வழக்கு அறிந்தவர்; மக்களின் பேச்சொலி அறிந்தவர் - வாய்ப் பேச் சொலி அறிந்தவர். ஒலிக்கு மாத்திரை கண்டவர்; எழுத்துஞ், சொல்லும், பொருளும் அறிந்தவர்; அறிந்து முதல் நூல் செய்தவர்; தொல்காப்பிய நூல் செய்தவர்; வழி நூலன்றி, முதல் நூல் செய்தவர்; வினையினீங்கி விளங்கிய அறிவின ராய்த் திகழ்ந்தவர்; புலவர்கள் போற்றும் முதற் பேராசிரிய ராய் வாழ்ந்தவர்.

அகத்தியர் இயற்றிய அகத்தியம் முதல் நூல் என்று சொல்லப்படுகின்றது. அகத்தியம் முதல் நூல் இருக்கும்

போது, இன்னொரு நூல் ஏன் தோன்றுதல் வேண்டும்? ஏன் வழி நூல் தோன்றுதல் வேண்டும் ? தொல்காப்பியம் வழி நூல் என்பதற்கு எவ்விதச் சான்றும் தொல்காப்பியத்துட் காண முடியவில்லை. முதல் நூல், வழி நூல், சார்பு நூல் என்று இவைகளுக்கு இலக்கணம் கூறிச் செல்கின்றாரேயன்றி, 'தான் அகத்தியத்தின் வழி நூலாகத் தொல்காப்பியம் செய்தேன்' என்று தொல்காப்பியர் குறிப்பிடவே இல்லை. அகத்தியம் விரிந்து பரந்த ஒரு முறையற்ற - தமிழின் இயற்கை நெறிக்கு மாறுபட்ட - வேறுபட்ட விதிகள் பல இருந்தன என்பதற்குச் சில அறிஞர்கள் ஆராய்ந்து முடிவு கட்டியுள்ள குறிப்புக்கள் உணர்த்துகின்றன.

தொல்காப்பியம் வழி நூலாயின், நிலந்தருதிருவிற் பாண்டியன் அவையத்தில் அரங்கேற்றம் வேண்டுமா ? அவைக்களப் புலவர் வேண்டுமா ? அதங்கோட்டாசிரியர் வேண்டுமா ? தொல்காப்பியருக்கும், தொல்காப்பியத்திற்கும் நிலந்தருதிருவிற் பாண்டியன் முதன்மை வழங்கியதன் அடிப்படைக் கருத்தென்னை ? எவரேனும் இதற்கு விடையிறுப்பாரோ ? பனம்பாரனார் அருளிய தொல்காப்பிய சிறப்புப் பாயிரச் செய்தி மெய்யா ? பொய்யா ? உண்மை காண வேண்டுமன்றோ ?

முந்து நூல்கண்டு முறைப்பட எண்ணிப் புலந் தொகுத்தார் (புலம் - இலக்கணம்) தொல்காப்பியர் என்று பனம்பாரனார் கூறுகின்றார். முந்து நூல் எது ? அகத்தியமா ? நூலுட் பல இடங்களில் தனக்கு முன்னுள்ள பல புலவர்கள் இலக்கண விதிகுறித்துக் கூறியவைகளைப்பற்றிக் குறிப்பிடுகின்றாரேயன்றி, அகத்தியர் இயற்றிய அகத்தியம் என்று குறிப்பிடவேயில்லை. அகத்தியம் ஒன்றுதானா முந்து நூல் ? எத்தனையோ புலவர்கள் இருந்திருக்கின்றார்களே ! அவர்கள் எல்லாரும் செய்து வைத்துள்ள நூல்களையே முந்து நூல் கண்டு என்று

குறிப்பிடுகின்றார் பனம்பாரனார். தமிழ் இலக்கண நூல் விதிப்படி அகத்தியம் வரம்பு மீறிய - மாறுபட்ட - குறை யுடைய நூல் என்பது அக்காலப் புலவர்களின் முடிவு போலும்! 'அகத்தியம் விரிந்து பரந்து கிடந்தமையான்' என்றொரு குறிப்புக் காணப்படுகிறது. இதுபற்றியே முந்து நூல் கண்டார்; முறைப்பட எண்ணினார்; நூல் செய்தார் தொல்காப்பியர் என்பதை நாம் அறிய முடிகிறது.

வடக்கே இருந்து வந்த அகத்தியர், தெற்கே வந்து தமிழ் கற்றார் எனின், ஆம்! அதனை ஏற்றுக் கொள்வோம். தமிழுக்கு இலக்கணம் செய்தார் எனின், அதனையும் ஏற் போம்! அகத்தியர் இயற்றிய நூல் ஏன் அழிந்தது? முதல் நூல் ஏன் மறைந்தது? அகத்தியம் ஏன் ஒழிந்தது? அழியக் காரணம் என்ன? முதல் நூல் அழிந்து வழிநூல் வாழ்ந்து வருவது—நின்று நிலவிவருவது எனின் அதன் கருத் தென்னே? இது பெரும் வியப்பன்றோ? அகத்தியம் மக்களின் ஆதரவின்றேல் அது மறைய வேண்டுமன்றோ? குறையுடைய நூலாயிருத்தல் வேண்டும்; அஃது அழிந்து—ஒழிந்திருத்தல் வேண்டும். அது கண்டு தொல்காப்பியர் எழுத்துஞ், சொல் லும், பொருளும் ஆராய்ந்து, முறைப்பட எண்ணி, மயங்கா மரபு காட்டி முழு நிறைவுடைய தொல்காப்பியம் இயற்றி யிருத்தல் வேண்டும். ஒரு மன்னன் அவையில் முதன்மை பெற்றுத் தொல்காப்பியம் அரங்கேற்றப் பட்டிருக்கும்போது, அது வழிநூலெனக் கூறுதல்முறையா? அகத்தியரை நிலந்தரு திருவிற் பாண்டிய மன்னன் அறியானா? அகத்தியத்தை மன்னன் அறியானா? அகத்தியம் முதல் நூல் இருக்கும்போது வழி நூலை அவன் ஏன் ஆதரித்தான்? வழிநூலுக்கு முதன்மை வேண்டுவதில்லையன்றோ? இதனையெல்லாம் அறிஞர் சிந்தனைக்கு விட்டு விடுகிறேன்; சிந்தித்துப் பாாக் கட்டும்; சிந்தித்து ஒரு முடிவிற்கு வரட்டும் என்பது எனது வேண்டுகோள்.

அகத்தியரும், தொல்காப்பியரும் ஆசிரியரும் மாணவரும் ஆயிற்றன்றோ? அகத்தியர்க்கும் தொல்காப்பியர்க்கும் பிணக்கு உண்டாகக் காரணம் என்ன? அகத்தியர், 'தொல்காப்பியா உனக்கு வீடு பேறில்லை—துறக்கம் புகாப்பீர்' என்று தீமொழிகள் அள்ளி வீசியதும், தொல்காப்பியர், 'அகத்தியரே உமக்கு வீடுபேறில்லை' என்று வைததும்; அகத்தியர், அதங்கோட்டாசிரியரை நோக்கி, 'நீ தொல்காப்பியன் செய்த நூலை கேளற்க' என்று தடை செய்ததும்; தொல்காப்பியரும் பல்காலுஞ் சென்று 'யான் செய்த நூலை நீர் கேட்டல் வேண்டும்' என்று அதங்கோட்டாசிரியரை வேண்டிக்கொண்டதும்; இருவருடைய பகைமைக்கும் ஆளாகாமல் தான் நடுவுநிலை நின்று தொல்காப்பியரின் நூலுக்குக் குற்றங்கூறித் தொல்காப்பியரை மட்டந்தட்ட நினைந்த அதங்கோட்டாசிரியரின் முறையற்ற போக்கும், இதனை அறிந்த தொல்காப்பியர், பாண்டியன் அவையில் புலவர்கள் முன்னிலையில், தொல்காப்பிய பரீட்சையில் வெற்றி பெற்றதும் எதைக்காட்டுகிறது? இதிலிருந்து நாம் விளங்கிக் கொள்ள வேண்டுவது என்னை? இருவருள்ளும் தமிழின் பெயரால் ஏதோ புகைச்சல் இருந்திருத்தல் வேண்டுமென்பதை யன்றோ இது காட்டுகிறது? அகத்தியர்—தொல்காப்பியர் காலத்துள்ளும் தமிழின் பேயரால் பொராட்டங்கள் நிகழ்ந்தே வந்திருக்கின்றன என்பதற்கு இந் நிகழ்ச்சிகள் நமக்குத் தெற்றெனை அறிவுறுத்துகின்றன. வடமொழி—தென்மொழி போர் தொல்காப்பியர் காலத்திலேயே தமிழ்கூறும் நல்லுலகில் மூண்டெழுந்துள்ளது. இதன் காரணமாகவே தொல்காப்பியர் தனித் தமிழ் இலக்கணம் செய்தார். வடமொழிக்கும் புகலிடம் கொடுத்துள்ளார். சொற்களின் வகையில் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் எனக்கூறி, வடசொல்லைக் கடைசியில் ஒதுக்கினர். அது தனித் தமிழ் இலக்கணத்திற்கு உடன் பாடற்றது; மாறுபட்டது என்று அப்பொழுதே விரட்டியடித்திருக்கிறர்.

" வடசொற் கிளவி வட்வெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே "

என்று நூற்பா செய்தார்.

வடமொழி என்னுஞ் சொல் எழுத்தும் பிறவும் வேறு பட்ட தமிழ்மொழி. இது வட தமிழ் என்பர் இளம்பூரணர். இந்நூற்பாவுக்கு உரைகூறும் இளம்பூரணரும் பிறரும் இயற் சொல், திரிசொல், திசைச்சொல் என்னும் மூன்றும் தென் றமிழ் வகையினைச் சேர்ந்தன. வடக்கின்கண் வழங்கும் அவ் வெழுத்துக்களினின்று நீங்கிச் செந்தமிழ் எழுத்துக்களால் ஆகியவை என்றும், " வட சொற்கிளவி என்று சொல்லப் படுவது ஆரியத்திற்கே உரிய எழுத்தினை ஒரீஇ இருதிறத் தார்க்கும் பொதுவாய் எழுத்தினையுறுப்பாக வுடையவாகும் சொல் " என்று கூறுகின்றார் இளம்பூரணர்.

சேனாவரையர் இது பற்றிக் கூறுகையில் " வடசொற் கிளவியாவது வட சொற்கே உரிய வெனப்படுஞ் சிறப் பெழுத்து நீங்கி இருசார் மொழிக்கும் பொதுவாகிய எழுத் தானியன்ற சொல்லாம்;" என்றனர்.

சேனாவரையர்க்குப்பின் வந்த நச்சினார்கினியர் " வட சொல்லாகிய சொல் உரப்பியும் எடுத்தும் கனைத்தும் கூறும் வடவெழுத்துக்களின் நீங்கி, இருசார் மொழிக்கும் பொது வாகிய எழுத்தான் இயன்ற சொல்லாம் " என்று உரை கூறினர்.

நச்சினார்க்கினியர் காலத்திற்கும் சிறிது பின் தோன்றி சொல்லதிகாரத்திற்கு உரைகண்ட தெய்வச்சிலையார் என்னும் புலவர் இது பற்றிக் கூறுகையில்

" வடசொல்லாகிய சொல்லாவது வடமொழிக்கே யுரிய வாகிய எழுத்தை நீக்கித் தமிழ் மொழிக்குரிய எழுத்தோடு புணர்ந்த சொல்லாகும் " என்று குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு புலமையிற் தலைமை சான்ற நான்கு பேரறிஞர்களும் கூறிய உரைகளின் அடிப்படைக் கருத்துக்களை உற்று நோக்கி உண்மை காணுமாறு அன்பர்களை வேண்டுகின்றேன்.

தொல்காப்பியத்திற்கு உரையெழுதிய உரையரசிரியர்களும் சில இடங்களில் எது வடசொல் எது தென்றமிழ்ச் சொல் என்பது கூடக் கருத்தூன்ருது சில சொற்களை வட சொல் என்றும், சில சொற்களைத் தென்றமிழ்ச் சொல் என்றும், ஒன்றினை மற்ருென்ருக மாற்றிப் பொருள் கூறியுள்ளனர் என்பதை உரைகளைப் படிக்கும்போது விளங்குகிறது.

இதுபற்றியே பேராசிரியர் திரு. ச. சோமசுந்தரபாரதியார் எம். ஏ., பி. எல்., அவர்கள்; "தொல்காப்பியத்திற்கு இப்பொழுதுள்ள உரைகள் எல்லாம் மயக்க உரைகள்; இந்த உரைகளைப் படித்தால் தொல்காப்பியர் உள்ளத்தை உணர வியலா. தொல்காப்பிய மூலத்தைப் படித்துத் தொல்காப்பியரின் உள்ளத்தைக் காணமுயலுங்கள்" என்று அறிவுறுத்துகின்ருர்.

அக்காலத்திலேயே உரையாசிரியர்கள் ஒருவர் பின் ஒருவராகப் பல உரையாசிரியர்கள் தொல்காப்பியத்திற்கு உரை கண்டுள்ளார்கள் எனின், தொல்காப்பியத்தின் பெருமை குறித்து நாம் கூறுந்தகையதாமோ ;? அத்தகைப் பெருமை வாய்ந்த ஒரு நூல் தமிழர்களின் கையில் இன்று கிடைக்கும் பேறு பெற்றது கிடைத்தற்கரிய பெரும் பேருகும்.

இனி, இக்கால நிலையினைச் சிறிது உற்று நோக்குவோம். தமிழ் நாட்டில் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிப் பல ஆண்டுகள் கிளர்ச்சி நடந்து வந்துளது. இதனைத் தமிழ் நாடு நன்கு அறியும். 1929-ஆம் ஆண்டில் காரைக்குடியினின்றும் வெளிவந்து கொண்டிருந்த "குமரன்" வார இதழில் இது பற்றிய செய்தி அப்பொழுது வெளிவந்துளது. அதன் பின்

னர் திருச்சியினின்றும் வெளியான "நகரதூதன்" என்ற வார இதழில், எழுத்துச் சீர்திருத்தம் என்பதன் பெயரால் திரு. வ. ரா. எழுதிய ஒரு கட்டுரையில், திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல்., அவர்களைக் குறித்துத் தாக்கி எழுதியிருந்தார். அதற்கு மறுப்புரையாக, 1934-ஆம் ஆண்டில் கோலாலம்பூரில் திரு. வே. ஏ. சந்திரராசன் அவர்களை ஆசிரியராகக்கொண்டு வெளியான "தமிழ்ச் செல்வன்" என்ற வார இதழில் "தனித்தமிழ் ஆசிரியர்களும் வ. ரா. அவர்களும்" என்ற தலைப்புடன் ஒரு கட்டுரை சிறியேனால் எழுதப்பட்டது. சிறியேனது கட்டுரையை ஆதரித்து அதன் ஆசிரியர் "தமிழ்க் கொலைஞர் குழாம்" என்ற தலைப்புடன் தலையங்கமும் எழுதியிருந்தார். சிறியேன் எழுதிய அக் கட்டுரை இதில் முதலிடம் பெற்றுளது. விவரம் கட்டுரையைப் படித்து பார்க்க.

இரண்டவதாக 1951-ஆம் ஆண்டில் எழுத்துச் சீர்திருத்தம் என்ற கிளர்ச்சி எழுந்தது. சிங்கப்பூர் "தமிழ் முரசு" ஆசிரியர் திரு. கோ. சாரங்கபாணி அவர்கள், "தமிழ் முரசு" நாளிதழ் நேயர் பகுதியில்; "எழுத்துச் சீர்திருத்தம்" பற்றித் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை எழுத விரும்புவோர், எழுதி அனுப்பினால் 'முரசில்' வெளியிடப்படும் என்று அறிவித்திருந்தார்கள். இதனைக் கண்ணுற்ற சிறியேனது உள்ளம் இப்போர்க்களம் புகுந்தது.

அதன் காரணமாக "தமிழ் பாண்டிய மன்னர்களின் சொத்து" என்ற தலைப்புடன் ஒரு கட்டுரை எழுதியனுப்பி, அதனை 'முரசில்' வெளியிடுமாறு அஞ்சல் எழுதி 'முரசு' ஆசிரியரை வேண்டிக் கொண்டேன். ஆசிரியரவர்கள் அன்புடன் அதனை வெளியிட்டு, அக்கட்டுரை வெளிவந்துள்ள 3—10—1951 இதழை எனக்கு அனுப்பி, கட்டுரை மிகவும் பயனுடைய தென்றும், கட்டுரையைப் பத்திரமாக வைத்

திருங்கள் எனவும், ஒரு காலத்தில் பயன் படும் என்றும் குறிப்பிட்டு சிறியேனுக்கு அஞ்சல் எழுதியிருந்தார்கள். அஃதுடன் அந்த அஞ்சலில், தொல்காப்பியம் சம்பந்தமாய் கட்டுரைகள் எழுதி அனுப்பும்படியும், அனுப்பினல் " தமிழ் முரசு " நாளிதழில் வெளியிடுவதாகவும் சிறியேனுக்கு எழுதியிருந்தார்கள்.

அதனைத் தொடர்ந்து " தொல்காப்பியம் மக்கள் வாழ்வின் இலக்கணம் " என்னும் தலைப்புடன் பதின்மூன்று கட்டுரைகள் எழுதியனுப்பினேன். தொடர்ந்து வாரந்தோறும் எட்டுக் கட்டுரைகள் வெளியிட்டு உதவினர்கள். அதன் பின்னர் பிற்பகுதி ஐந்து கட்டுரைகள் வெளிவராது தடைப்பட்டது. சில திங்கள் கழிந்தன. கட்டுரைகள் வெளிவராத காரணம் என்னவென்று ஆசிரியரவர்களுக்கு அஞ்சல் எழுதிக் கேட்டிருந்தேன். ஆசிரியரவர்கள் எனக்கு எழுதிய பதில் அஞ்சலில் " வெளிவரவேண்டிய உள் நாட்டு வெளி நாட்டுச் செய்திகள் காரியாலயத்தில் எவ்வளவோ நிறைந்து கிடக்கின்றன. இட நெருக்கடியால் வெளியிட முடியவில்லை தங்களின் தொல்காப்பியக் கட்டுரைகளைக் கையில் பத்திரமாக வைத்திருக்கின்றேன். நாள்தோறும் வெளிவரும் உலகச் செய்திகளையும் பிற நிகழ்ச்சிகளையும் தாங்கள் " தமிழ் முரசி"ல் பார்த்திருக்கலாம். காலம் வரும்போது இடங் கிடைத்ததும் தங்கள் கட்டுரைகளை வெளியிடக் காத்திருக்கிறேன் " எனுங் கருத்துப்பட எழுதியிருந்தார்கள்.

ஆசிரியரவர்களுக்கு யான் எழுதிய பதில் அஞ்சலில்:—

" தங்களின் அன்பும், நண்பர்களின் அவாவும் என்னைத் தொல்காப்பியக் கட்டுரைகள் வரையும் முயற்சியிற் பெரிதும் ஊக்கியது. தொடர்ந்து எனது தொல்காப்பியக் கட்டுரைகளைப் படித்த சிங்கப்பூர், பினங்கு, ஈப்போ, கோலாலம்பூர்

முதலிய ஊர்களிலுள்ள நண்பர்கள்—தமிழறிவும் தமிழன்புமுடைய அன்பர்கள்—இன்னும் பல கட்டுரைகள் எழுதி வருமாறு என்னைத் தூண்டினர். இன்னும் பல கட்டுரைகள் 'முரசி'ல் வெளிவருமென்றே பல நண்பர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர், சென்ற ஆண்டு யான் பினங்கு சென்றிருந்த போதும், சிங்கப்பூர் வந்திருந்த காலையும், சென்ற திங்கள் யான் ஈப்போ சென்றிருந்தபோதும் என் கட்டுரைகளைப் படித்தின்புற்ற அன்பர் சிலர் 'முரசி'ல் தங்கள் கட்டுரைகள் எப்பொழுது வரும் என்று பெரும் அவாவுடன் கேட்டார்கள். "தமிழ் முரசு" ஆசிரியரவர்கள் அன்பு காட்டினுல் எனது கட்டுரைகளை நீங்கள் படிக்க முடியும் என்று அந் நண்பர்களுக்குப் பதில் கூறி வந்தேன்" என்று குறிப்பிட்டு எழுதியிருந்தேன்.

பின்னர், அதன் பிற்பகுதி ஐந்து கட்டுரைகள் வெளியிடப்படாதிருந்தன. ஆசிரியரவர்கள் அக்கட்டுரைகளைப் பத்திரப்படுத்திவைத்திருந்தார்கள். அவைகளைத் திரும்ப எனக்கு அனுப்புமாறு ஆசிரியரவர்களுக்கு அஞ்சல் எழுதியிருந்தேன். 8—8—1953-ல் திருச்சி நண்பர் திரு. சி. முத்துசாமி அவர்கள் வாயிலாக எனக்குக் கிடைக்குமாறு அக்கட்டுரைகளை அனுப்பியிருந்தார்கள். ஏறக்குறைய ஓராண்டிற்குமேல் "தமிழ் முரசு" அலுவலகத்தில் பாதுகாப்புடன் வைத்திருந்து அக்கட்டுரைகளை மீண்டும் எனக்குக் கிடைக்குமாறு செய்த ஆசிரியரவர்களுக்கு யான் பெரிதும் நன்றி செலுத்துகிறேன். அக்கட்டுரைகள் எவ்வளவு பயனுடையது என்பதை அன்பர்கள் அதனைப் படித்து அறியலாம். ஆசிரியரவர்கள் சிறியேன் மீது அளவற்ற பற்றும் அன்பும் உடையவர்கள். அந்த அன்பு அவர்களை அவ்வாறு செய்யுமாறு உந்தியது.

அதன் பின்னர், ஆசிரியரவர்களும் சிறியேனும் மூன்று நான்கு தடவைகள் கூடியது உண்டு. எனது தொல்காப்பியக் கட்டுரைகளை நூல் வடிவாக வெளியிடவேண்டுமென்று யான் விரும்பியதை ஒரு தடவை ஆசிரியரவர்களிடத்து நேரில் தாழ்மையுடன் அறிவித்துக்கொண்டேன். வெளியிட்டுக் கொள்ள அன்புளங்காட்டி உரிமை அளித்தார்கள். அன்புக்கும், ஆன்ற பெருந் தகைமைக்கும் உறைவிடமாய்த் திகழும் ஆசிரியரவர்களின் அன்பினை என்னுள்ளம் என்றும் மறப்பதற்கில்லை. ஆசிரியரவர்களுக்கும் சிறியேனுக்கும் ஏற்பட்டுள்ள அன்புத் தொடர்பு அன்புத் தமிழின் பெயரால் உள்ள தொடர்பு என்பதை இங்கு மகிழ்ச்சியுடன் கூறுகின்றேன். ஆசிரியரவர்கள் தமிழிடத்தும், தமிழர்களிடத்தும் பேரன்பு கொண்டவர்கள். அவர்கள் ஆற்றிவரும் தமிழ்த் தொண்டு உலகம் நன்கறியும்—தமிழ் அறிஞர் உலகம் நன்கு அறியும். இது இன்று நம் கண்முன் கண்டறியும் உண்மை நிகழ்ச்சியாகும். ஆசிரியர் அவர்களைத் தமிழ்த்திரு. என்றே இங்கு யான் குறிப்பிடவிரும்புகிறேன்.

தமிழ்த்திரு. கோ. சாரங்கபாணி அவர்கள் தமிழின் பெயரால் தமிழர் வாழ்வினை உருவாக்கி, தமிழ் வளர்ச்சிக்கு வித்தூன்றி, "தமிழ் எங்கள் உயிர்" என்னும் உயர்ந்த குறிக்கோளை மக்களிடையே வேரூன்றச் செய்துள்ளனர். அவர்களின் தமிழ்த் தொண்டு எல்லையற்ற பெருமை வாய்ந்தது; வரலாற்று ஏடுகளிற் பொன்னெழுத்துக்களால் பொறித்தற்குரியது. திரு. கோ. சராங்கபாணி அவர்கள் தமிழ் வளர்ச்சிக்கு ஆற்றி வரும் அரும்பணி கண்டு போற்றுதற்கு இந் நாளில் ஒரு நிலந்தருதிருவிற் பாண்டியன் இல்லையே என்று வருந்துகிறேன். இந் நாளில் ஒரு பாண்டிய மன்னன்—ஒரு தமிழ் மன்னன் இல்லையே என்று என்னுள்ளம் எண்ணி எண்ணி வருந்துகிறது. இன்று நிலந்தருதிருவிற் பாண்டியன்

இருந்திருப்பனேல், திரு. கோ. சாரங்கபாணி அவர்களை அரசு கட்டில் ஏற்றிப் பொன்னுடை போர்த்துப் போற்றிப் புகழ்மாலை சூட்டியிருப்பன். நிலந்தருதிருவிற் பாண்டிய மன்னன் மீண்டும் தோன்றுதல் வேண்டும் என்பது எனது அன்பார்ந்த அவா.

1951, 1952-ல் வெளி வந்த கட்டுரைகள் ஒன்பதும் வெளிவராத கட்டுரைகள் ஐந்தும், 1934-ல் என்னால் எழுதப் பட்ட கட்டுரை ஒன்றும் ஆகப் பதினைந்து கட்டுரைகளைக் கொண்டது இத்தொகுப்பேடு. சில கட்டுரைகளின் தொடர்பா யுள்ள தலைப்புக்களை ஒன்று சேர்த்து இப்பொழுது பத்து தலைப்புக்களாக அச்சிடப்பட்டுளது. கட்டுரைகளின் உட் பொருள் உள்ளுறை காண்க.

இது பற்றி யான் எடுத்துக்கொண்ட எனது ஆராய்ச்சி இன்னும் முற்றுப்பெறவில்லை ; இடையில் நிறுத்தப்பட்டது. இது குறித்து எனது முயற்சி தடைப்பட்டது பற்றி எனதுள்ளம் மிக மிக வருந்துகிறது. சில நண்பர்களின் கூட்டுறவும், எதிர்பாராவகையில் நிகழ்ந்த பிற பொது நிகழ்ச்சிகளும் எனது முயற்சிக்குப் பெருந் தீங்கிழைத்தன. ஏழையேன் அமைதி யாக இருந்து தமிழை ஆராய்ந்து எழுதி வந்த எனது எழுத் துத் தொண்டு இடையிற் தடைப்பட்டது. நண்பர்களின் கூட்டுறவு, யான் அமைதியாக இருந்து ஆராய்ந்து தமிழின்பம் பருகி வந்த எனது அரிய முயற்சியினைத் தகைந்தது என்றே கூறுகின்றேன்.

அமைதியாக இருந்து உயர்ந்த நூல்களை ஆழ்ந்து படித் தல், ஆராய்தல், எழுதுதல் முதலிய அறிவுத் தொண்டிற்கு உள்ளத்தில் அமைதி வேண்டும்; நிறைய ஓய்வு வேண்டும்; நிறையச் சிந்தித்தல் வேண்டும். அறிவு ஆராய்ச்சியுலகம் வேறு; மடமை உலகம் வேறு. நண்பர்களின் கூட்டுறவும்,

எதிர்பாராவகையில் நண்பர்களின் பொருட்டு வலிந்து தேடிக் கொண்ட இடர்ப்பாடுகளும், நடைபெற்ற நிகழ்ச்சிகளும் என்னைப் பெருஞ்சோதனைக் குள்ளாக்கின. இனியும் அவ்வாறன இடர்ப்பாடுகளுக்கு என்னை ஆளாக்காது காக்குமாறு செந்தமிழ் அன்னையை வேண்டுதல் செய்கிறேன்.

எப்பொழுதும் அமைதி வாழ்வையே வேண்டி நிற்கும் எனதுள்ளம் அடக்கமாகவும், அமைதியாகவும் தமிழ்த் தொண்டு செய்து வாழவே பெரிதும் விழைகின்றது. அமைதியாக—ஆடம்பரமின்றிப் பயனை எதிர்பாராது தமிழ்த் தொண்டு—பொதுத் தொண்டு செய்து வாழவேண்டுமென்பது எனது உள்ளக் கருத்து. அமைதியில், அறிவாரய்ச்சியில், அறிவின்பம் ஊற்றெடுத்து ஓடுவதை—இன்ப உணர்வு எழுவதை என் வாழ்விற்கண்டு துய்த்து வருகின்றேன். இதைத் தகைய வரும் சூழ் நிலைகள் எவற்றையும் என்னுள்ளம் முற்றும் வெறுக்கிறது.


30—10—1955-ல் மலைநாட்டிலிருந்து யான் தமிழ் கூறும் நல்லுலகம் செல்லும்போது, இக்கட்டுரைகளைக் கையில் எடுத்துச் சென்றேன். 2—3—1957-ல் தமிழ் கூறும் நல்லுலகினிடத்து விடைபெற்று மலை நாடு நண்ணும் வழியில் 3—3—1357-ல் சென்னை சென்றேன். பிறங்கு அன்பர் திரு. கே. ஏ. பண்டிதரவர்கள் சென்னையிலிருந்தார்கள். எனது கட்டுரைகளை வெளியிடுமாறு பெரிதும் விரும்பினர் கள். அன்பரவர்களின் விருப்பத்தை என்னல் மீற முடிய வில்லை. முன்னர் விரும்பி வேண்டிக்கொண்ட பல அன்பர் களின் எண்ணம் ஒன்றன் பின் ஒன்ருகத் திரு. பண்டிதரவர் களின் வழி தூண்டுவது போன்ற பழைய எண்ணம் என்னுள் ளத்தின் அடிப்படையினின்றும் எழுந்தது. சென்னை, அகத் தியர் சித்தவைத்திய நிலையத் தலைவரும் எனக்கினிய அன்பரு

மான பண்டிட் வி. குப்புசாமி அவர்களும், திரு. கே. ஏ. பண்டிதரவர்களும் அச்சிடும் வேலையைக் கவனித்துக் கொள்வதாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். இரு அன்பர்களும் இக்கட்டுரைகள் நூல் வடிவில் வெளிவரத் துணைபுரிந்தவர்கள். இரு அன்பர்களுக்கும் என்றும் யான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவன். அச்சுப்பிழை திருத்துவதில் பேருதவி அளித்தவர் கோலாலம்பூர் அன்பர் திரு. சி. வீ. குப்புசாமி அவர்கள். கிழக்காசியாவில் நடைபெற்ற இந்திய உரிமைப் போரில் பெருந் தொண்டு செய்தவர்கள். அப்பொழுது நடைபெற்ற "சுதந்தர இந்தியா" என்ற நாளிதழுக்கு ஆசிரியராயிருந்தவர்கள். போர் முடிந்த பின்னர் "தமிழ் முரசு"க்கு சில ஆண்டுகள் உதவி ஆசிரியராக இருந்தார்கள். இக்கட்டுரைகள் 'முரசில்' வெளிவரும்போது உதவி ஆசிரியராயிருந்து தமிழ்ப்பணி செய்தவர்கள். அவர்களின் உதவி மீண்டும் இவ்வெளியீட்டுக்குக் கிடைத்தது பெரு நலன் ஆகும். அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றி உரியதாக.

தமிழ்த் தொண்டிற்குத் தகுதியற்ற என்னைத் தட்டி எழுப்பி ஊக்க மூட்டி, தொல்காப்பியக் கட்டுரைகள் எழுதுமாறு தூண்டி ஆதரவு தந்து, அதனை இன்று அன்பர்களிடை ஏட்டுருவில் தவழச் செய்தற்கு உரிமை வழங்கி எனக்கு பேருதவியளித்த தமிழ்த்திரு. கோ. சாரங்கபாணி அவர்களுக்கு எனது அன்பார்ந்த நன்றி.

கோலாலம்பூர்,
20—11—1957 } நெல்லை : இரா. சண்முகம்

குறிப்பு—இந்நூலில் நிகழ்ந்துள்ள அச்சுப் பிழைகளுக்கு அன்பர்கள் பொறுத்தருள்க.



ஆசிரியர் : தொல்காப்பியனார்

தொல்காப்பியம்

மக்கள் வாழ்வின் இலக்கணம்

1

தனித்தமிழ் ஆசிரியர்களும் "வ. ரா." அவர்களும்

"தமிழ்" என்னும் சொல் எனதுள்ளத்தைக் கவர்ந்ததுபோன்று, வேறு எச்சொல்லும் எனது உள்ளத்தைக் கவரவில்லை.

"தமிழ்" என்பதுபற்றி யார் எழுதினும், அதனைப் படித்து இன்புறும் இன்பத்தினும் பிறிதொரு இன்பம் எனக்கில்லை.

பழந்தமிழ் நூல்களையும், பெருந்தமிழாசிரியர்களால் எழுதப்பட்ட தனித்தமிழ் நூல்களையும் எனது உயிருள்ளமட்டும், உடம்பில் உயிர் நீங்கும் வரையும்—யான் மரணம் உறினும் மீண்டும் தமிழகத்திற் பிறந்தாதல் தமிழின்பம் பருக வேண்டுமென்பது எனது பேரவா.

தமிழின் இயற்கை இயலை ஒரு சிறிதும் அறியாத சிலர், தமிழின் உயிர் நூலாகிய "தொல்காப்பியம்" எனும் அருந்தமிழ் நூலைக் கையாற்றொட்டும், காதாற்கேட்டும் அறியாத பத்திராசிரியர்களும், நூலாசிரியர்களும் மலிந்த இந்நாளில், தமிழ் எழுத்துக்களைச் சீர்திருத்த முற்பட்டிருக்கிறார்கள். தமிழ் எழுத்துக்களைச் சீர்திருத்த முற்பட்டிருக்கும் இவர்களின் நிலை பெரிதும் இரங்கத்தக்கதன்றோ!

ஏறக்குறைய ஐந்து ஆண்டுகட்கு முன்னர்,* ஆசிரியர் சொ. முருகப்பா அவர்களின் "குமரன்" "தமிழ் எழுத்துக்களில் திருத்தம்" என்பது பற்றி முதன் முதல் எழுதிற்று.

அவ் எழுத்துக்களின் புதிய திருத்தங்கள் இன்னின்ன வாறிருத்தல் வேண்டும் என்று குறிப்பிட்டு, சில எழுத்துக்களின் உருவத்தை மறைத்தும், வெட்டியும், வலிந்து கூட்டியும், குறைத்தும் சிலதடவை அப்பத்திரிகை எழுதிவந்தது. "குமரன்" வாயிலாக தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தம் என்பது பற்றியும், தமிழ் எழுத்துக்களைப் பயன்படுத்தும் முறையும், அதன் கருத்துக்களும் என்பதுபற்றியும் வெளிவந்த கட்டுரைகளைத் தமிழுலகம் நன்கறிந்திருக்குமென நம்புகிறேன்.

தமிழிலே பிறந்து, தமிழிலே வளர்ந்து, தமிழிலே தோய்ந்து கிடக்கும் பெருந்தமிழாசிரியர்களும், தமிழ்ப் பத்திராதிபர்களும் "குமரன் கருத்தைப் பற்றி என்ன கூறுகின்றனர் என்பதைப் பலகாலும் கவனித்து வந்திருக்கிறேன். ஆனல் புதிய முயற்சியும், புதிய வளர்ச்சியும் வேண்டும், வேண்டும் என்று வாய்ப் பேச்சளவில் எழுத்தளவில் அடங்கிக் கிடப்போரின் கூச்சல்தான் தோன்றியதேயன்றி உண்மையில் "குமரனின்" கருத்தை ஆதரித்தோருமில்லை; எழுதினேருமில்லை; பேசினேருமில்லை.

---

*இக் கட்டுரை கோலாலம்பூர் "தமிழ்ச்செல்வன்"; என்ற வார இதழில் 1934-ல் எழுதப்பட்டது. 1929-ல் "குமரன்" பத்திரிகை சீர்திருத்தம் பற்றி எழுதியது.

'தமிழ் எழுத்துக்களின் திருத்தம்' என்பது வெறுங் கூற்றென்பது தமிழ் வாணர் கருத்துப்போலும்!

சென்ற திங்களில் திருநெல்வேலியில் நடைபெற்ற தமிழர் மகாநாடும் இவ்வுண்மையை நிறுவிக் காட்டி விட்டது. தமிழைத் திருத்த முற்பட்டோர் இனி என் செய்யப்போகின்றனரோ தெரியவில்லை.

பற்பலர் பற்பல கூட்டங்களில் "தமிழ் எழுத்துக்களின் திருத்தம்" என்பது குறித்துப் பேசினரேயன்றி அத்திருத்தங்கள் இன்னின்னவாறிருத்தல் வேண்டும் என்று யாரும் வரையறுத்தாரல்லர். பேசுதல் யார்க்கும் எளிது. அதன்படி செய்து காண்பித்தலே அறிவுடைமை. இவர்களின் கூற்று வெற்றுரை என்பதை அறிவுடையுலகம் நன்கறியும்.

ஒரு சில தமிழ் மக்களிடையே பரவிவந்த இவ்வியக்கம் பலதிறக் கருத்து வேற்றுமைகளையும் உட்பிணக்குகளையும் விளைவித்துக்கொண்டிருந்ததென்பது எனக்குத்தெரியும். தமிழின் பெயரால் இரண்டொரு மகாநாடுகளும் நடைபெற்றன. அம்மகாநாடுகளில் இது குறித்துப் பேசுவாரற்றுப் போயினரென்றே கூறுதல் வேண்டும். தமிழராய்ப்பிறந்தும் தமிழ்நாட்டில் வளர்ந்தும் தமிழின் இயல்பறியாத ஒரு சிலர் கூறும் வெறுங் கூற்றுக்கு மறுப்புரை கூற யாரும் முயன்றாரல்லர். அம்முயற்சி வீண் என்பது தமிழறிஞர் கண்ட உண்மை.

சென்ற திங்களில் திருநெல்வேலியில் நடைபெற்ற சென்னை மாகாணத் தமிழர் மகாநாடு, இப்

பெருநோக்கம் ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு நடைபெற்றிருக்கிறதென்பது அதிற் கலந்துகொண்ட தமிழ்ப் பெருமக்களாலும், தலைமை வகித்த தமிழ்ப் பேராசிரியர்களாலும் நிகழ்த்தப் பெற்ற சொற்பொழிவுகளாலும் பிற நடைமுறை களாலும் நன்கு விளங்குகின்றது. மகாநாட்டின் நடைமுறைகளை முற்றும் கூர்ந்து கவனித்தோர் மகாநாட்டின் உண்மைநோக்கம் இன்னதென நன்கறிவர்.

"தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தம்" என்னும் மருண்ட மனங்கொண்டு மயக்குற்றுக்கிடந்த சில ருக்கு அம்மயக்கம் அகற்றுவான்வேண்டி, திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை M.A.,M.L. அவர்கள் தமிழின் இயற்கை இயலைப்பற்றிய பல உண்மைகள், பல திறக் கருத்துப் பொதுள தெள்ளிய இனிய தமிழில் வெளியிட்டிருக்கிறார்கள். நீண்ட நாட்களாக உண் மைத் தமிழன்பர்கள் எதிர்பார்த்திருந்த உண்மை கள் பல வெளிவந்திருக்கின்றன. தமிழிடத்தும், தமிழரிடத்தும் பற்றுடையோர் பிள்ளையவர் களின் கருத்தை மறுத்தோ, குறைகூறவோ முற் படார். பிள்ளையவர்களின் வரவேற்புரையை மீண்டும் மீண்டும் படித்தேன். அதிற் குறைகூறும் பகுதி ஒன்றேனும் புலனாகவில்லை. "தமிழ்த்திறவு" எனும் கருத்து எனதுள்ளத்தில் ஊடுருவிப் பாய்வ தற்கு அது காரணமாயிருந்தது. அச்சொற்பொழிவு சிறு நூல்வடிவாகித் தமிழ்நாட்டில் பரவுதல் வேண்டு மென்பது எனதாசை.

பிள்ளையவர்களின் வரவேற்புரையின் உட்கருத்தை ஆழ்ந்துணராது மாறுபட உணர்ந்து, காட்புளங்கொண்டு "வ. ரா." என்பவர் எழுதியிருக்கும் சில கூற்றுக்களைத் தமிழன்பர்கள் கவனிக்கும்படி இதன்கீழ் வெளியிட்டு, அதற்குரிய சில உண்மைகளைப் பொறிக்க சிறியேன் எண்ணுகிறேன் :—

"வ. ரா." அவர்கள், 'தூய்மை' என்ற பதத்தைப் பிரயோகித்து, கிட்ட நெருங்காதே என்று நோட்டீஸ் போடுவதைப்போல், தமிழை அடித்து விட்டார்கள்." என்கிறார்.

தூய தனித்தமிழின் வழி என்போன்ற தமிழ் இளைஞர்களைத் தட்டி எழுப்பி, தூய தமிழன்பும், தமிழறிவும் ஊட்டி எங்களின் அறிவுக்கண்ணைத் திறந்தது. அதற்காகத் தமிழ்ப் பேராசிரியர்களுக்கு யாங்கள் என்றும் பெரு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றோம். 'தமிழை அடித்துவிட்டார்கள்' எனக் கூறுவது பெருந்தவறு ; வீண் பழிப்புமாகும்.

"கா. சுப்பிரமணியபிள்ளை தமிழ் பேசுவதும், நான் இங்கிலீஷ் பேசுவதும் ஒன்றுதான். இரண்டும் தமிழ்ப்பேசும் தமிழர்களுக்குப் புரியாது. தமிழ் எல்லோருக்கும் புரியவேண்டுமே என்ற பொறுப்பும், கவலையும் தூய தனித்தமிழ்க் கூட்டத்தாருக்கு கிடையவே கிடையாது. பொருள் விளங்காத நூலைப் பெரியநூல் என்று சொல்லுவதுபோல, அர்த்தமாகாத பாஷையை, தமிழ் என்று சொல்லிக் கொண்டு இவர்கள் காலந்தள்ள வேண்டியதுதான்"

என்கிறார் வ. ரா. தமிழ், தமிழரின் இயற்கை மொழி. தமிழர்களுக்கு விளங்காத் தமிழை திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் என்றும் எவ்விடத்தும் பேசியதே இல்லை. பிள்ளையவர்கள் பேசும் தமிழ் தமிழர்கட்கு விளங்காதெனக்கூறல் பெரு வியப்பன்றோ? "வ. ரா." அவர்கள் பேசும் இங்கிலீஷ் தமிழர்களுக்கு அவசியமில்லை.

எல்லா மக்களுக்கும் எளிதில் விளங்கும் பொருட்டு தூய இனிய செந்தமிழ் உரைநடை நூல்கள் பல வெளிவந்திருக்கின்றன. அந்நூல்களை ஆயிரக் கணக்கில் வாங்கிப் படித்துப் பயன்பெற்று வரும் மக்கள் பலர். அதில் யானும் ஒருவன். அம்மக்களின் நலத்தின்பொருட்டுப் பெரும் பொறுப்பும் உழைப்பும் எடுத்துக்கொண்ட தனித்தமிழாசிரியர்கட்கு அம்மக்கள் என்றும் நன்றியுடையராயிருப்பர். தமிழ் நூல்களுள் பொருள் விளங்காத நூல் ஒன்றேனுமில்லை. தமிழ் பொருளற்ற மொழியன்று. 'யாமறிந்த மொழிகளிலே, தமிழ்மொழிபோல் இனிதாவதெங்குங்காணோம்" என்றார் பாரதியார். ஒவ்வொரு விநாடியும் தனித்தமிழாசிரியர்களின் உழைப்பு தனித்தமிழின் நலத்திற்கே பயன்படுகின்றன. அவர்கள் வீண்காலம் போக்கவில்லை.

"தனித்தமிழ்ப் பண்டிதர்களின் ஆட்சியில் தமிழ் இருந்தகாலத்தில் இவர்கள் தமிழுக்காக என்ன செய்தார்கள்? ஒருவருக்கு அர்த்தமாகாத தமிழை சுவையும் கவர்ச்சியுமில்லாத நடையில் எழுதி, குழுஉக் குறியாக அடித்துவிட்டார்கள்." எனச் செப்புகின்றார். "வ. ரா."

தனித்தமிழாட்சி பெற்றிருந்த காலத்தில் உலக முழுமையும் தமிழர் நாகரிகம் பரவிற்று. அந்நாகரிகச் சின்னங்கள் ஒவ்வொரு நாட்டின் மொழியிலும் தனித் தமிழ்ச் சொற்கள் ஆட்சிபெற்றிருக்கின்றன. தனித்தமிழாட்சி உலகிற் பல பெரியோர்களின் உள்ளத்தைக் கவர்ந்தன. இன்னும் அறிவுடையமக்கள் ஒவ்வொருவருள்ளத்தும் தனித் தமிழாட்சி காட்சியளிக்கின்றது. நமது பிள்ளையவர்களின் சொற்பொழிவின் சாரமும் அஃதே. இது குறித்துப் பண்டிதர்களை வினவல் வீண். உலகமக்கள் எல்லோருக்கும் தமிழைப் படிக்கும் உரிமையுண்டு. தமிழ், கல்லா மக்களுக்கும் எளிதில் விளங்கக்கூடியதே. ஒருவருக்கும் விளங்காத மொழி தமிழன்று. உலகில் மொழித் தோற்றத்திற்கு மூலம் தமிழ். இனிமையும், உறுதியும் ஊட்டும் முறையில் பல உரைநடை நூல்கள் தமிழாசிரியர்கள் யாத்தளித்திருக்கின்றனர். அதனல் தமிழ் மக்கள் பெரும் பயன்பெற்று வருகிறார்கள். தமிழை மூடக்குறியாக அடித்துவிட்டார்கள் எனக் கூறல் தமிழர் இயக்கங்களிடத்துள்ள காட்புளம் போலும்!

"பண்டிதர்கள், தாங்கள் தமிழை உயிர்வதை செய்துவிட்டு சாமான்யத் தமிழனை அவமானத்துக்கும், நச்சுக்கும் ஆளாக்கி விட்டுவிட்டு இப்பொழுது அதை வளர்த்து சாமான்யத் தமிழனுடைய தன் மதிப்பைப் பாதுகாக்க முன்வரும் உழைப்பாளிகளின்பேரில் கூசாமல் பழியையும் சுமத்த முன்வந்திருக்கிறார்கள்." என இயம்புகின்றார் "வ. ரா."

தமிழை உயிர்வதை புரியும் கொடுந் தொழிலைப் பண்டிதர்கள் கனவிலும் கருதார். அவர்கள் செய்ததுமில்லை. தமிழை உயிர்வதை புரியும் கொடுந் தொழிலாளரே தமிழ் எழுத்துக்களைக் குறைத்தல் வேண்டுமென்றும், திருத்தல் வேண்டுமென்றும் கொடுங் கொலைத்துறையில் முயலுகின்றனர். ஏழைத் தமிழனை மனித உணர்ச்சியும் மான உணர்ச்சியும் பெற்று வாழுமாறு தட்டி எழுப்பிய பெருமை பண்டிதர்களுக்குண்டு. இன்று வெளிவந்திருக்கும் "புதுப் புலவர்களால்" தமிழன் தனது உண்மையை மறந்தவனாகத் தன்னை மறந்து பேசும் நிலைமைக்கு வந்துகொண்டிருக்கிறான். ஏழைத் தமிழனின் தன் மதிப்பைக் காப்பதற்கு வேடிக்கை விளையாட்டுப் பிரசாரம் நிறைந்த சாக்கடைப் பத்திரிகைகளில் ஒன்றுமில்லை. அரிதில் முயன்று உழைத்துத் திரட்டி வைத்திருக்கும் பண்டிதர்களின் தனித்தமிழ் நூல்களில் உண்டு. ஏழைத் தமிழனின் தன்மதிப்பைக்காக்க அரும்பாடுபட்டுழைக்கும் பண்டிதர்களைக் குறைகூறி, அவர்கள்பேரில் வீண்பழி சுமத்தல் பெரும்பாவம்.

"சாமான்யத் தமிழன் பாடுபட்டு வளர்த்துவரும் தமிழை இவர்கள் ஏளனம் செய்கிறார்கள். பாஷை சம்மந்தப்பட்ட வரையிலும் இது ஒரு பரம்பரை இறுமாப்பு. இளந்தமிழ் ஆசிரியர்களும், ஏனையத் தமிழர்களும் லட்சியம் செய்யவேண்டியதில்லை.' என வ. ரா. உரைக்கின்றார்.

ஏழைத் தமிழர், தமிழின் வாயிலாக வளர வேண்டுமென்பதே பண்டிதர்களின் நோக்கம்;

ஏழைத் தமிழன் தமிழை வளர்க்கப் பெருங்கவலை எடுத்துக்கொள்ள வேண்டுவதில்லை. தமிழ் என்றும் வளர்ந்துகொண் டிருக்கின்றது. தமிழ் உலக முழுமையும் பரவி, உலக மக்கள் அனைவரும் தமிழ் மயமாகித் தமிழின்பம் பருகி, உலகம் இன்பமயமாதல் வேண்டுமென்பது தமிழ்ப் பண்டிதர்களின் பெருந் தவம். இதை இளந்தமிழ்ப் புலவர்களும், மற்றும் சிலரும் அறிதல் நன்ரும். இனியும் ஏய்த்துப் பிழைத்தல் இயலாதென்க.

'அ' என்ற எழுத்து மட்டுமே போதும் என்று எனக்குத் தோன்றுகிறது' எனப் புகல்கின்றனர் வ. ரா. தமிழரின் வாழ்வைப் புதிதாய் அமைக்கக் கங்கணங் கட்டித் திரியும் இவர்கள் 'அ' என்ற எழுத்தையும் தள்ளிவிட்டுப் புது வாழ்வையும் புது மொழியையும் உண்டு பண்ணுவதை யாரும் தடுப்பாரில்லை.

"ரவுக்கு றவும் ணவுக்கு நவும் மாற்றிப் போட்டால் குழப்பம் வந்துவிடும் என்கிருர்" என்று மொழிகின்ருர். வ. ரா. உரிமை, என்பதை உறிமை என்றும், திண்ணை என்பதைத் தின்னை என்றும், எழுதும் இளந் தமிழாசிரியர்களும், பத்திராசிரியர்களும் பலர் மலிந்துவிட்டனர் என்பது எனக்குத் தெரியும். அண்ணன் என்பதை அன்னன் என்றும், அழகு என்பதை அலகு என்றும், இளமை என்பதை இலமை என்றும், கூர்ந்து என்பதைக் கூற்ந்து என்றும், மண் என்பதை மன் என்றும், தண்ணீர் என்பதைத் தன்னீர் என்றும், போனன்

என்பதை போனுண் என்றும், வந்தான் என்பதை வந்தாண் என்றும், இன்னமும் பலவாறு வரும் குழப்பங்களுக்கு இளந்தமிழாசிரியர்கள் என் சொல்லப் போகின்றனர்? என்று கேட்கிறேன்.

பிள்ளையவர்களின் உரைகள் எல்லாவற்றிற்கும் விடை பிறுத்துவிட்டமையான் சிறியேன் அது குறித்து அதிகம் கூற விரும்பவில்லை.

"உச்சரிப்பு பேதமில்லாத அபத்த வங்காளி பாஷை இலக்கியத்துக்கு 'நோபல்' பரிசாம்! பிள்ளையவர்களின் தூய்மை மனப்பான்மையில் இடிவிழும்படியாக பிறநாட்டு நோபல் பரிசுக் கூட்டத்தார் காரியம் செய்தது சுத்தத் தவறு." என மொழிகின்றார் வ. ரா.

அழுத பிள்ளைக்கு வாழைப்பழம் கொடுத்து ஏய்ப்பது, சாதாரண உலக வழக்கு. 'பரிசு' பெறல் என்னும் உண்மை எத்தகைத்து என்பது நமது காந்தியடிகள் வாயிலாக உலகறிந்த உண்மை. அதை யான் கூற வேண்டுவதில்லை.

பிள்ளையவர்கள், அருட்செல்வம், பொருட்செல்வம், அன்புச்செல்வம் எல்லாம் ஒருங்கே திரண்டு உருண்ட தூய இனிய தனித் தமிழ் மகனர். தமிழ் மகனராகிய அச்செல்வருக்கு, அழிந்துபோகும் புறப்பொருளாகிய "பரிசு" தேவையேயில்லை. பிள்ளையவர்கள் "தூய்மை" மனத்தில் 'இடிவிழும்படியாக' என்ற சொல் முற்றும் வெறுக்கத்தக்க சொல்.

நாட்டை வஞ்சித்து ஏழை மக்களை வஞ்சித்து, பொய்யுரைத்துப், புறம்பேசி வயிறுவளர்க்கும் பாவிகளின் மனத்திலன்றோ இடிவிழும்! அப்பாழு மனமன்றோ இப்படிக் கூறும். இடி விழுமிடமெங்கே! "இடி" எனும் சொல்லை ஒரு தமிழ் மகனார் பேரால் பயன்படுத்தியது குறித்து யான் பெரிதும் வருந்துகிறேன்.

"பண்டிதர்கள் கரடியாய்க் கத்திப் பார்த்தார்களே அது முடிந்ததா?" என வ. ரா. கழறுகின்றார்.

உயர்திணையுலகை அஃறிணையுலகாக அவமதித்துக்கூறும் அறிஞர் அவர்களின் அறிவுடைமையைப் பண்டித உலகம் பொருட்படுத்தப் போவதில்லை. கரடியாய்க் கத்தும் புல்லறிவும், புன்மொழியும் எழும் நெஞ்சம் பண்டிதர்கட்கில்லை. அஃறிணையுலகாகிய விலங்கியல்புள்ள மக்களை உயர்திணையுலகாகிய ஆறறிவுபெறும் மக்களாக்க வேண்டுமெனும் பெருநோக்கம் ஒன்றே பண்டிதர்கட்குண்டு. பண்டித உலகை நோக்கிக் கரடி எனக் கழறுவதன் சிறுமை நோக்கமென்னையோ?

இன்னும் விரித்துக்கூற விரும்பவில்லை. இடவிரிவஞ்சி விடுகிறேன்.

2

* தமிழ் *

பாண்டிய மன்னர்களின் சொத்து

தமிழ் எழுத்துக்களைத் திருத்த எவருக்கும் உரிமை இல்லை*

இன்று தமிழ் கூறும் நல்லுலகில் ஒரு புரட்சி; பெரும் புரட்சி. இனிய செந்தமிழின் இயற்கைக்கு மாறுபட்ட புரட்சி; இனிய தமிழின் எழுத்து முறைக்குப் பொருத்தமற்ற புரட்சி; தனித் தமிழின் தூய இனிய இயற்கை இயல்பினைக் கொலை செய்யும் புரட்சி; ஆசிரியர் தொல்காப்பியனார் வகுத்த செந்தமிழ் இலக்கண நெறிக்கு உடன்பாடற்ற புரட்சி; ஆசிரியர் திருவள்ளுவனார் இயற்றிய தமிழ்மறையின் தனித்தமிழ் நெறிக்கு வேறுபட்ட புரட்சி; பண்டைச் செந்தமிழ்ச் சான்றோர்களை அவமதிக்கும் புரட்சி.

அஃது எப்புரட்சி? எதன்பொருட்டு புரட்சி? எவர் செய்யும் புரட்சி? தமிழ் எழுத்து முறைகளைச் சீர்திருத்தும் புரட்சி; பல ஆயிரம் ஆண்டுகள் வழக்கிலுள்ள தனித்தமிழ் எழுத்து முறைகளைச் சீர்திருத்தும் புரட்சி; அரசியல் அவையிலுள்ள ஒரு சிலர் செய்யும் புரட்சி.

---

*3–10–1951-ல் சிங்கப்பூர் "தமிழ்முரசு" நாளிதழில் எழுதப்பட்டது.

இப்புரட்சி வேண்டுமா?

இப்புரட்சி வேண்டுமா? அவசியந்தானா? நன்மை பயக்குமா? பெரும் பயன் விளையுமா? தமிழ் கூறும் நல்லுலகம் இதற்கு என்ன விடையிறுக்கப் போகிறது? தமிழ்ப் புலவருலகம் இதற்கு என்ன விடையளிக்கப் போகிறது?

தமிழ்க் கொலைஞர் குழாம்

இப்புரட்சியினை எவர் செய்கிறார்? தனித் தமிழின் பிறவிப் பகைவர்; தொல்காப்பியரின் தமிழ் இலக்கண விரோதிகள்; தந்நலம் பேணும் தமிழ்க் கொலைஞர் குழுவினர் இப்புரட்சியில் முனைந்து நிற்கின்றனர். இப்புரட்சியிலே இன்னொரு வியப்பு! பெரிதும் வருந்துதற்குரிய வியப்பு! அஃதென்ன? பல ஆண்டுகள் செந்தமிழன்னைக்குத் தொண்டு செய்துவரும் ஒருசில தமிழரின் பெயரும் இதிலே இடம்பெற்றிருக்கின்றன. இதுதான் பெருவியப்பு! இது தமிழன்னையின் சோதனைக் காலமா? அன்றி இந்த அறிஞர்களின் தந்நல மயக்கமா? இதுபற்றிய விவரம் அறிய முடியவில்லை. அன்றி இந்த அறிஞர்களின் துணைகொண்டு காரியம் சாதிக்க எண்ணுவோரின் தந்நலச் சூழ்ச்சியா?

இது வீண் புரட்சி

எவ்வாறாயினுஞ்சரி, இப்புரட்சி தடுக்கப்படல் வேண்டும். தமிழ் எழுத்துமுறைகளைச் சீர்திருத்த எழுவோரின் முயற்சி தமிழுக்குப் பெருந்தீங்கு இழைக்கும். இது வீண் புரட்சி; பயனற்ற புரட்சி;

தமிழின் இயற்கை இயல்பினை யறியார் புரட்சி. இப்புரட்சியால் தனித்தமிழின் இயல்நெறி கெடும்—முரண்படும்; குழப்பம் மிகும்; மயக்கம் பெருகும்.

செந்தமிழ்ச் சான்றோர் தோன்றவேண்டும்

ஒருசிலர் கூடி தங்கள் விருப்பிற்கு தமிழ் எழுத்துக்களைச் சீர்திருத்த முயன்றிருக்கும் இவர்களை வாயடைக்கச் செய்து அடக்குதற்கு, இப்பொழுது, தொல்காப்பியனார் தோன்றவேண்டும்; திருவள்ளுவனார் தோன்றவேண்டும்; மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரனார் தோன்றவேண்டும்; இறையனார் தோன்றவேண்டும்; தமிழிற் பிழைகண்டு வருந்தி வருந்தித் தன் தலையிலே எழுத்தாணியாற் குத்திக் கொண்ட சீத்தலைச் சாத்தனார் தோன்றவேண்டும்.

தமிழன்னையின் சாகா வரம்பெற்ற பண்டைச் செந்தமிழ்ச் சான்றோர் காட்டிய தமிழ் எழுத்து முறையினை இக்காலத்தவர் திருத்த முயன்றிருத்தல் நகைப்பிற் கிடமன்றோ? இதனால் வருங்காலத் தமிழ் வளர்ச்சிக்கு இடர்ப்பாடு நேருமன்றோ?

அறிய முடியவில்லை

தமிழ் எப்பொழுது தோன்றிற்று எங்கு தோன்றிற்று, யாரால் தோற்றுவிக்கப்பெற்றது என்னும் வரலாற்றினை எவராலும் துணிந்து கணித்து அறிய முடியவில்லை. பல ஆயிரம் ஆண்டுகள் வளர்ந்து பண்பட்டுத் திருந்திய மொழி என்பதற்கு அதன் எழுத்து, சொல், பொருள், அமைப்பு முதலியன

வற்றினின்றும் அறியலாம். பழந்தமிழின் இயற்கை, இனிய செழுமை கொழிக்கும் இயல்பு, இதனை விளக்குகின்றன.

தமிழ் என்பதற்கு

தமிழ் என்பதற்கு இனிமை என்று பொருள். இஃது ஏட்டில் இருக்கிறது. இந்த இனிமை எங்குளது? எவ்வாறுளது? இதனை ஆராய்வாரில்லை; ஆராய்ந்து அதன் இனிமையைப் பருகி இன்பந் துய்த்து வாழ்வாரில்லை. மக்கள் மனம், மக்கள் மனமாயில்லை; அது பாறையாய், இரும்பாய் கல்லாய்ப் போயிற்று! இத்தகை மனத்திலே இன்பம் எங்கே காண வியலும்? எங்கே தமிழ் இனிமை ஊறும்? எங்கே வாழ்வினில் இன்ப ஊற்றெழும்?

இது விஞ்ஞான காலம்

இது விஞ்ஞானகாலம்; பகுத்தறியும் காலம்; அறிவு முதிர்ந்த காலம். இக்காலம் இத்தகைய பேச்சினை எள்ளி நகையாடும் காலம்; எல்லாம் கண் முன் நிறுவிக் காட்டினலன்றி ஏற்றுக்கொள்ளாத காலம். இப்படிப்பட்ட காலத்தில் இதனைப்பற்றிப் பேசுவதும் எழுதுவதும் பைத்தியக்காரத் தன்மை தான். இனிமை விரும்புவோர்க்கு இனிய கனியிருக்கக் காய் கவருங் காலம். தூய இனிய நற் கரும்பு தின்னக் கூலிவாங்குங் காலம். இனிமை என்று விரும்பி மனச் சான்றறிய இரும்பை விழுங்குங் காலம்-இக்காலம்.

திருமிகு. பா. வே. மாணிக்க நாயக்கர்

காலஞ்சென்ற திருமிகு. பா. வே. மாணிக்க நாயக்கரவர்கள் மிக நுண்ணுணர்வினர்; அறிவுப் பெருஞ்செல்வர்; பெருங்கலைவாணர்; தமிழைப் பற்றி ஆராய்ந்தவர். இவர் விரும்பி அன்புடன் ஆராய்ந்த தமிழ் எது? தொல்காப்பியத் தமிழ். தொல்காப்பியர் இயற்றிய இலக்கண நூலான எழுத்து, சொல், பொருள் என்ற மூன்றினுள் முதல் அதிகாரமான எழுத்ததிகாரமே இவர் முதன்முதல் ஆழ்ந்து ஆராய்ந்த நூல். இந்நூல் இவருள்ளத்தைப் பெரிதும் ஈர்த்தது; அதிலே பெரிதும் ஆழ்ந்து போனார்.

மெய்யறிவுக் காட்சி

எழுத்ததிகார நூலினை ஆழ்ந்து ஆராய்ந்த இவர், முதன்முதல் என்ன கண்டார்? மெய்யறிவுக் காட்சி கண்டார். தாம் கண்ட மெய்யறிவுக் காட்சியால் அங்கே ஒரு சிறு புள்ளிகண்டார்; வட்டம் கண்டார்; சதுரம் கண்டார்; கோடு கண்டார்; ஒலி கண்டார்; ஒலியின் அணுத்திரள் கண்டார்; உலக உயிர்களின் தோற்றங்கண்டார்; ஓங்கார ஒலிகண்டார்; ஓங்காரத்திலே தோன்றி ஓங்காரத்தில் ஒடுங்கும் உலக உயிர்களின் அமைப்பின் உண்மைத் தோற்றம் கண்டார்; இந்நிலையிலே தம் உள்ளத்தில் இனிமை கண்டார்; தமிழினிமை கண்டார்; இனிய இன்பத் தமிழ் ஊற்றிருப்பதனை உணர்ந்தார்; உணர்ந்து தான் ஆராய்ந்து கண்ட உண்மையினை உலகிற்கு அறிவிக்க முயன்றார்; அம்முயற்சியிற்

தோன்றியது, 'தமிழ்மறை விளக்கம்' என்ற ஒரு நூல்.

நூலின் உள்ளுறை

நூலின் உள்ளுறை என்ன? உள்ளுறை 'ஓ' என்னும் உயிர்நெடில். அதன் அடியில் அகர உயிர் உகர உயிர், மகரமெய், இம்மூன்றனையும் இணைத்து ஒலித்து 'ஓம்' என்று நிறுவிக் காட்டியுள்ளார். அகர உயிரின் உண்மையை விளக்கினர்.

அடுத்தபடியாக அதன் இருமருங்கிலும் தனித் தனியே எட்டு அகர உயிரின் உருவங்களிலுள்ள உறுப்புகளைப் பல பகுதிகளாகப் பிரித்து எண்ணிட்டுக் காட்டி ஒவ்வோரெழுத்தின் ஒவ்வொரு பகுதியும் தமிழ் எழுத்துக்களின் தோற்றத்திற்கு உரியது என்றும் பல பகுதிகளை எடுத்து இணைத்து அமைத்து எழுத்துக்கள்பல சொற்களாகும் வழியினையும் பல சொற்கள் தோன்றும் வழியினையும் வகுத்துக் காட்டியுள்ளனர். அச்சொற்களை இங்கே காட்ட வேண்டுவதில்லை; விரிப்பிற் பெருகும். ஆழ்ந்து நோக்கி உண்மை உணர்க.

தொல்காப்பிய நூலின் உண்மைப் பொருளுணர்ந்த திருமிகு. பா. வே. மாணிக்க நாயக்கரவர்களின் இனிமைத் தமிழன்பு எப்படிப்பட்டது என்பதனை இக்காலத்தில் தமிழ் எழுத்து முறையைச் சீர்திருத்த முயலும் இக்கால அறிஞர்களும், மற்றவர்களும் அறிந்துகொள்ளல் வேண்டும் என்பதன் பொருட்டு இதனை இங்கு குறிப்பிடும்படி காலநிலை தூண்டிற்று.

தமிழ் எழுத்துக்களின் உருவம்; அதன் உறுப்பு முதலியன எப்படி அமைந்தன என்பதற்கு மேலே கண்ட திருமிகு. பா. வே. மாணிக்க நாயக்கரவர்களின் ஆராய்ச்சி ஒரு எடுத்துக்காட்டாகும். இதனைப் பற்றிய விரிந்த விளக்கம் அறிய விருப்புவோர் திருமிகு. பா. வே. மாணிக்க நாயக்கரவர்கள் எழுதிய நூலிற்காண்க.

பா. வே. மா. மொழிந்தவை

இதுவுமன்றி தமிழ் எழுத்து ஒலிகளின் சிறப்புகளையும் செவ்விய அமைப்பினையும் பற்றி திருமிகு. பா. வே. மாணிக்க நாயக்கரவர்கள் நுணுகி ஆராய்ந்து மொழிந்தவை இங்கு வருமாறு:—

1. "கூட்டொலிகளைத் தனி எழுத்துக்களாக மற்றைய மொழிகள் எண்ணுவதுபோல தமிழ்தாள் தலை தெரியாது எண்ணுவதில்லை."

2. "மற்றைய மொழிகள்போல அது கூட்டல் குறைத்தல் இல்லாதவர்க்கு முயற்சியாலாகும் எழுத்தொலிகள் இவையென்றும், முயற்சி வேற்றுமையாலாகக்கூடிய எண்ணிறந்த எழுத்தொலிகள் இவையென்றும், தமிழ் பாகுபடுத்தி உணர்த்துகின்றது."

3. "வாக்குறுப்புகளின் கூட்டல் குறைத்தல் ஏலாத குறிப்பான முயற்சிகளால் ஒலிக்கக்கூடிய எல்லா எழுத்துக்களும் தமிழ் மொழியில் 'உயிர்கள்' என வழங்கும் பன்னிரண்டும் 'உடல்கள்' என வழங்கும் பதினெட்டுமே."

4. "தமிழ் எழுத்துக்களின் அமைப்பைவிட எளியது நினைத்தற் கெட்டாததாயினும், அதுவே எல்லா மொழிகளுக்கும் பொதுவான அமைப்பாம்."

தனித் தமிழ் இலக்கணம் தொல்காப்பியம்

ஐயாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னிலிருந்து இன்றுவரை தூய இனிய தனித்தமிழுக்கு மாறுபட்ட அயலவரால் நிகழ்ந்திருக்கும் இடர்ப்பாடும் கேடும் சிறிதளவன்று; மிகப் பெரும் அளவில் என்று கூறுதற்கு நிறைய எடுத்துக்காட்டுகள் இருக்கின்றன. மிகப் பெரும் அளவில் தனித் தமிழுக்கு வந்துள்ள அழிவினை நினைந்து நினைந்து வருந்திய தமிழ் நெஞ்சம் பல; தமிழன்பர் பலர்; தமிழ்ப் புலவர் பலர்.

அயலவர் நுழைவால் அயல்மொழிக் கலப்பால் தனித் தமிழின் இயல்பு அழிவது அறிந்த ஆசிரியர் தொல்காப்பியனார் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் ஆகிய முத்தமிழும் உலகில் என்றும் நின்று வளர்ந்தோங்குதற்பொருட்டு, எழுத்து, சொல், பொருள் என மூன்று உறுப்படங்கிய பிண்டமாகிய தொல்காப்பியம் எனுந் தனித் தமிழ் இலக்கண நூலினை இயற்றியருளினர். தொல்காப்பியம் பழந் தமிழ் மக்களின் வாழ்வின் இலக்கணம்.

ஆசிரியர் தொல்காப்பியனார் தனித் தமிழுக்கு இலக்கணம் வகுத்தனர் என்பதற்கு தமிழ் எழுத்துக்களின் தொகை வகை அவற்றின் பெயர் முதலியன பற்றி எழுத்ததிகாரம் முதற் செய்யுளில்,

'எழுத்தெனப்படுப,
அகரமுதல் னகர இறுவாய்
முப்பஃதென்ப ;
சார்ந்து வரல் மரபின் மூன்றலங் கடையே'

என்றருளியவை நன்கு தெளிவுறுத்துகின்றது.

'அகர முதல் னகர இறுவாய்' என்ற பகுதிக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் :—

'அகரம் முதலாதல் ஆரியத்திற்கும் ஒக்குமேனும் ஈண்டுத் தமிழெழுத்தே கூறுகின்றாரென்பது உணர்தற்கு னகர இறுவாய் என்றார்' என்று கூறுகின்றனர்.

சொல்லதிகாரம் கிளவி ஆக்கம் ஐம்பத்து ஒன்பதாம் செய்யுளுக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் :—

"காலம்" "உலகம்" என்பன வடசொல் அன்று, ஆசிரியர் வடசொற்களை எடுத்தோதி இலக்கணம் கூறார் ஆகலின்' என்று குறிப்பிடுகின்றனர்.

தொல்காப்பியர் இயற்றிய நூலினை அரங்கேற்று நிகழ்ச்சிபற்றிக் குறிப்பிடுகையில் நச்சினார்க்கினியர் :—

'பாண்டியன் மாகீர்த்தி இருபத்து நாலாயிரம் ஆண்டு வீற்றிருந்தான். ஆதலின் அவனும், அவன் அவையில் உள்ளோரும் அறிவு மிக்கிருத்தலின், அவர்கள் கேட்டிருப்ப அதங்கோட்டு ஆசிரியர்

கூறிய கடாவிற்கு எல்லாம் குற்றம் தீர விடை கூறு தலின்'.

'கண்டு எண்ணி ஆராய்ந்து தன்னுள்ளே தொகுத்தான். அவன் யார் எனின் அவையின் கண்ணே கூறி உலகின் கண்ணே தன் பெயரை நிறுத்திப் புகழை நிறுத்திய யடிமையோன்—' (தொல்காப்பியன்) என்று உரைத்துச் செல்லு கின்றனர்.

எழுத்து என்றது:

'எழுத்து என்றது யாதனை எனின், கட்புலன் ஆகா உருவும்' (ஒலிவடிவம்) கட்புலன் ஆகிய வடிவம் (வரிவடிவம்) உடைத்தாக வேறு வேறு வகுத்துக்கொண்டு, தன்னையே உணர்த்தியும் சொற்கு இயைந்தும் நிற்கும் ஓசையையாம்'.

'கடல் ஒலி, சங்கு ஒலி முதலிய ஓசைகள் பொருள் உணர்த்தாமை யானும், முற்கு வீளை இலதை முதலியன பொருள் உணர்த்தின வேனும் எழுத்து ஆகாமையானும் அவை ஈண்டு கொள்ளா ராயினர்.'

'ஈண்டு உரு என்றது மன உணர்வாய் நிற்கும் கருத்துப் பொருளை. அது செறிப்பச் சேரலானும் (குழலிற்போல் செலுத்தச் செல்லுதல்) செறிப்ப வருதலானும் (குடத்திற்போல் செலுத்த மீண்டும் வருதல்) இடையெறியப் படுதலானும் (வெளியிடத்தில் வீசப்படுதல்) இன்ப துன்பத்தை ஆக்கலானும் இன்ப துன்பத்தை யாக்குதல் முறையே, மென்மை

தன்மையால்) உருபும் உருபும் கூடிப் பிறத்தலானும் (உயிர் வடிவும் மெய் வடிவுங் கூடிப் பிறத்தல்) உந்தி முதலாகத் தோன்றி எண் வகை நிலத்தும் (தலை, மிடறு, நெஞ்சு, பல், இதழ், நா, மூக்கு, அண்ணம் என்பன) பிறந்து கட்புலனாந் தன்மை இன்றிச் செவிக்கண் சென்று உறும் ஊறுடைமை யானும், விசும்பிற் பிறந்து இயங்குவதோர் தன்மை உடைமையானும் காற்றின் குணமாவதோர் உருவாம்.'

'வன்மை, மென்மை, இடைமை கோடலானும் உருவே ஆயிற்று. இதனைக் காற்றின் குணமே என்றல் இவ்வாசிரியர் கருத்து. இதனை விசும்பின் குணம் என்பாரும் உளர்.'

இவ்வுரு :

'புள்ளி யில்லா எல்லா மெய்யும்
உருவுரு வாகி அகரமோ டுயிர்த்தலும்
ஏனை உயிரோடு உருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயீ ரியல உயிர்த்த லாறே'*

'இதன் பொருள்: உயிரைப் பெறுதற்குப் புள்ளியைப் போக்கின எல்லா மெய்களும், புள்ளி பெறுகின்ற காலத்து இயல்பாகிய அகரம் நீங்கிய வடிவே தமக்கு வடிவாகி நின்று பின்னர் ஏறிய அகரத்தோடு கூடி ஒலித்தலும், ஒழிந்த பதினோருயிரோடுங் கூடி அவ் வடிவு திரிந்து ஒலித்தலும், என அவ்விரண்டு இயல்பினையுடைய அவை ஒலிக்கும் முறைமை என்றவாறு.'

---

*தொல்—எழு 17.

'புள்ளி இல்லா மெய் எனவே முன் பெற்று நின்ற புள்ளியை உயிர் ஏற்றுதற்குப் போக்கினமை பெறுதும். உருவுருவாகி எனவே புள்ளி பெறுதற்காக இயல்பாகிய அகரம் நீங்கிய வடிவே பின்னர் அகரம் பெறுதற்கு வடிவு ஆம் என்பது' என்று கூறினர்.

'க—ங—ய—என வரும்'

'உருவு திரிந்து உயிர்த்தல் ஆவது, மேலும் கீழும் விலங்கு பெற்றும், கோடு பெற்றும், புள்ளி பெற்றும், புள்ளியும் கோடும் உடன்பெற்றும் உயிர்த்தல் ஆம்.

கி—கீ முதலியன மேல்விலங்கு பெற்றன.

கு—கூ முதலியன கீழ்விலங்கு பெற்றன.

கெ—கே முதலியன கோடு பெற்றன.

கா—ஙா முதலியன புள்ளி பெற்றன.

அருகே பெற்ற புள்ளியை இக்காலத்தார் காலாக எழுதினர்.

மகரம் உட்பெறு புள்ளியை வளைத்து எழுதினர். (புள்ளி முதலாவது ஒரு சிறு நட்டுக் கோடாயிருந்து பின்பு குத்தாய்க் குறுகிற்று என்பர்)

கொ கோ ஙொ ஙோ முதலியன புள்ளியும், கோடும் உடன் பெற்றன.

இங்ஙனம் திரிந்து ஒலிப்பவே உயிர்மெய் பன்னிரு, பதினெட்டு இருநூற்று ஒருபத்து ஆறு ஆயிற்று.

ஆகவே, உயிர் மெய்க்கு வடிவம் ஒருவாற்ருற் கூறினர் ஆயிற்று.

இதனனே மெய் தனக்கு இயல்பாகிய அக ரத்தை நீங்கி நிற்பதோர் தன்மையும் பிறிதோர் உயிரை ஏற்கும் தன்மையும் உடையது என்பதூஉம், உயிர் மெய்கட் புலப்படாது இயல்பாகிய அகரமாய் நிற்கும் தன்மையும்; மெய் புள்ளி பெற்று அழிந்த வழி அவற்றிற்குத் தக்க உயிராய்ப் புலப்பட்டு வரும் தன்மையும் உடையது என்பதூஉம் பெற்ரும்'

—நச்சினர்க்கினியர்.

மகரத்தின் வடிவம்

'உட்பெறு புள்ளி உருவாகும்மே' (எழு—14) இது பகரத்தோடு மகரத்திடை வரிவடிவு வேற்றுமை செய்கின்றது. மகரம் அதிகாரப்பட்டு நிற்றலின் ஈண்டுக் கூறினர்.'

'இதன் பொருள் :—புறத்துப் பெறும் புள்ளி யோடு உள்ளாற் பெறும் புள்ளி, மகரத்திற்கு வடி வாம்; என்றவாறு.

'எனவே, புறத்துப் பெறும் புள்ளியாவது மேற் செய்யுளான் மெய்கட்குக் கூறும் புள்ளி. ஈண்டு உரு என்றது காட்சிப் பொருளை உணர்த்தி நின்றது.

கப்பி (கம்மி) என வரும்'

மெய்யெழுத்தின் இயல்பு

'மெய்யின் இயற்கைப் புள்ளியோடு நிலையல்'. (எழு—15) இது தனி மெய்க்கும் உயிர்மெய்க்கும் ஒப்புமை மேல் வேற்றுமை செய்தல் கூறுகின்றது.

என்னை ? உயிர்மெய்யான ககர ஙகரங்கட்கும், தனி மெய்யான ககர ஙகரங்கட்கும் வடிவு ஒன்றாக எழுதியவற்றை ஒற்றாக்குதற்குப் பின்பு புள்ளி பெறுக என்றலின்.

இதன் பொருள் :—பதினெட்டு மெய்களின் தன்மையானது புள்ளி பெற்று நிற்றலாம்; என்றவாறு.

எனவே உயிர்மெய்கட்குப் புள்ளி இன்றா யிற்று க்—ங்—ற்—ன் என வரும்.

'இவற்றைப் புள்ளியிட்டுக் காட்டவே புள்ளி பெறுவதற்கு முன்னர் அகரம் உடன் நின்றதோர் மெய் வடிவே பெற்று நின்றனவற்றைப் பின்னர் அப்புள்ளி இட்டுத் தனி மெய் ஆக்கினர் என்பதூஉம் பெற்றாம்.'

'இதனானே ககரம் ஙகரம் முதலியன புள்ளி பெறுவதற்கு முன்னர், இயல்பாக அகரம் பெற்றே நிற்கும் என்பதூஉம், புள்ளி பெறுங்காலத்து அவ் வருகம் நீங்கும் என்பதூஉம். பின்னர் அப்புள்ளி நீங்கி உயிர் ஏறும் இடத்துத் தன்கண் அகரம் நீங்கியே போக வருகின்ற ஓர் உயிர் யாதானும் ஒன்று ஏறி நிற்கும் என்பதூஉம் பெற்றாம்'

'அது வட்டம், சதுரம் முதலிய முப்பத்து இரண் டினுள் ஒன்றை உணர்த்தும். மனத்தான் உணரும் நுண்ணுணர்வு இல்லோரும் உணர்தற்கு, எழுத்து கட்கு வேறு வேறு வடிவம் காட்டி எழுதப்பட்டு நடத்தலிற் கட்புலனாகிய வரிவடிவம் உடைவாயின.'

—நச்சினார்க்கினியர்.

இதுபற்றி ஒவ்வொரு இயலாகத் தொல்காப்பியர் ஒன்பது இயல்களைக் கூறி வைத்திருக்கின்றார். ஒவ்வொரு இயலையும் பல பகுதிகளாகப் பிரித்து எழுத்திலக்கணம் இயம்புகின்றார். இதில் முதல் இயல் நூன்மரபு. இதனை ஆறு பகுதிகளாக வகுத்திருக்கின்றார். அது முதலில் எழுத்துக்களின் வகை, அவற்றின் பெயர் முதலியன: சார்பெழுத்துக்கள். இரண்டாவது மாத்திரை: ஒரு மாத்திரையுடைய குற்றுயிர், இரண்டு மாத்திரையுடைய நெட்டுயிர், ஓரெழுத்தே மூன்று மாத்திரையாகாமை, மாத்திரை நீளுமாறு, மாத்திரைக்கு அளவு, மூன்றாவது எண்: பன்னீருயிர், பதினெண் மெய், உயிர்மெய்க்கு அளவு, தனி மெய்க்கு அளவு, சார்பெழுத்துக்கு அளவு, மகரக் குறுக்கம். நான்காவது வடிவு: மகரத்தின் வடிவம், மெய்யெழுத்தின் இயல்பு, எகர ஒகரங்களின் இயல்பு, உயிர்மெய்யெழுத்தின் இயல்பு, உயிர்மெய் ஒலிக்குமாறு, வல்லின மெய், மெல்லின மெய், இடையின மெய். ஐந்தாவது மயக்கம்: மெய் மயங்குமாறு, தனி மெய் பிற மெய்யுடன் மயங்குமாறு, தனி மெய் தன் மெய்யோடு மயங்குமாறு. ஆறாவது எழுத்துக்களின் பிற மரபுகள்: சுட்டெழுத்துக்கள், வினவெழுத்துக்கள், இசைநூன் முறையில் எழுத்தொலிகள்.

இவ்வாறு எழுத்ததிகாரத்தில்: (நூன் மரபுடன்)

(அ)

1. நூன் மரபு
2. மொழி மரபு

3. பிறப்பியல்
4. புணரியல்.
5. தொகை மரபு
6. உருபியல்
7. உயிர் மயங்கியல்
8. புள்ளி மயங்கியல்
9. குற்றியலுகரப் புணரியல்

(ஆ) சொல்லதிகாரத்தில் :

1. கிளவியாக்கம்
2. வேற்றுமை இயல்
3. வேற்றுமை மயங்கியல்
4. விளி மரபு
5. பெயரியல்
6. வினையியல்
7. இடையியல்
8. உரியியல்
9. எச்சவியல்

(இ) பொருளதிகாரத்தில் :

1. அகத்திணையியல்
2. புறத்திணையியல்
3. களவியல்
4. கற்பியல்
5. பொருளியல்
6. மெய்ப்பாட்டியல்
7. உவமவியல்
8. செய்யுளியல்
9. மரபியல்

ஆக மூன்று அதிகாரங்களிலும் அடங்கிய இருபத்தேழு இயல்களையும் தமிழ் நாட்டிலே தமிழர்களாகப் பிறந்து வளர்ந்துவரும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் அவசியமாகவும் கட்டாயமாகவும் படித்துத் தொல்காப்பியத்தின் உண்மைப் பொருளை அறிந்து உண்மைத் தமிழக மக்களாக வாழவேண்டுமென்னும் அடிப்படைக் கருத்தினை வைத்துத் தொல்காப்பியர் இந்நூலினை இயற்றியுள்ளனர். என்பதற்கு எவ்வித ஐயமுமில்லை.

தொல்காப்பியம், திருக்குறளைப் போன்று மாற்றுக் கொள்கையுடைய—தமிழர்களின் வாழ்வின் விரோதிகளானவர்களுக்கு எதிர்ப்பு நூலாகத் தோன்றிய நூல். அதன் இருபத்தேழு இயல்களையும் ஊன்றி ஆராய்பவர் இவ்வுண்மை அறிவர்.

இடைக்காலத்திலே பல ஆண்டுகள் தொல்காப்பியம் விளங்காத நூலென்றும், முறையான இலக்கண நூல் அன்று என்றும் பலர் தமது அறியாமையால் பொய்ப் பரப்புரை செய்து தமிழக மக்களின் அறிவுக் கண்ணை அடைத்து விட்டனர். இக்காலத்திலே பேராசிரியர் பட்டம் பெற்றவர்களாக கூறப்படுவோர் (அண்மையில் காலஞ் சென்ற ஒருவர்) கூட "விளங்காத நூலைத் தெய்வ முழுமுதல் நூல் என்று தனித்தமிழ் பண்டிதர்கள் கூறுவது போல" என்று இழித்துக் கூறினர் சுமார் பதினேழு ஆண்டுகளுக்கு முன்னர். இவ்வாறு தமிழ் விரோதிகள் நாட்டிலே மலிந்ததால் தொல்காப்பியத்தின் உண்மைப் பொருள் மறைந்து கிடக்கிறது. தொல்காப்பிய

அறிவு பெருகினல் தமிழ் எழுத்துச் சீர் திருத்தக் காரர் மறைந்து போவர் என்பது உண்மை. இதனை இத்துடன் நிறுத்திக்கொண்டு மேற்செல்வோம்.

தமிழைக் கொலைசெய்யும் கொடுஞ்செயல்

தமிழ் எழுத்துக்களைச் சீர்திருத்த முற்பட்டிருப்பது, பண்டைத் தமிழ் இலக்கணமான தொல்காப்பிய இலக்கண நெறிக்கு முற்றும் மாறுபட்ட தாகும்.

பழந் தமிழ்ச் சான்ருேர் வகுத்த இலக்கண அமைப்பிற்கு மாருக இன்றைய அரசியல் கொண்டு வந்திருக்கும் தமிழ் எழுத்துமுறைச் சீர்திருத்தம் தமிழைக் கொலை செய்யும் கொடுஞ் செயலாகும்.

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே தமிழ் நன்கு செம்மையாகச் சீர்திருந்திய மொழி, தமிழ் எழுத்து முறைகள் நன்கு திருத்தி இலக்கண அமைதியுடன் அமைக்கப்பட்டுள்ள மொழி. இதற்குத் தொல்காப்பிய இலக்கணம் ஒன்றே சான்று கூறுகிறது. இம் மொழியமைப்பினைப் பற்றி உலகப் பேரறிஞர் பலரும் போற்றிப் புகழ்ந் திருக்கின்றனர்.

தமிழ் எழுத்து முறைகளைச் சீர்திருத்த முற்படு முன்னர் நாட்டிலே மக்கள் திருந்திய அறிவு பெறவும், முறையோடு வாழும் வகையறியவும், முறையான ஆட்சி ஏற்படவும் வழிதேட வேண்டும். இது

தான் இன்று தேவை. அரசியல் இத்துறையில் கருத்துச் செலுத்துமா?

அறிவுப் பசி தீருமா?

நாட்டிலே மக்கள் பசியும் பிணியும் வறுமையும் நிறைந்த வாழ்க்கையில் அறிவு வளர இடமுண்டா? இந்நிலையில் எழுத்துச் சீர்திருத்தம் அவசியமா? மக்களுக்கு வேண்டுவது எது? பசிப்பிணி போக்கும் அறிவா? எழுத்துச் சீர்திருத்தத்தால் மக்களின் அறிவுப் பசி தீருமா? அறிவுப் பசிக்குப் பதில் நஞ்சையா வழங்குவது? இதனை அரசியலார் சிந்திக்க வேண்டாவா?

ஏன் முந்தவில்லை?

ஏன் மற்ற மொழிகளின் எழுத்துக்களைச் சீர் திருத்த அரசியல் முந்தவில்லை? தமிழின் மீதுமட்டும் இவ்வளவு அக்கறை காட்டுவதன் காரணம் யாதோ? இது தந்நலம் பேணுவோரின் சூழ்ச்சியா? அன்றி வேறென்ன?

என்ன ஐயம்?

இன்றைய நிலையிலே இப்பொழுது தமிழ் எழுத்து முறைகளைச் சீர்திருத்துவதாயின், பல ஆயிரம் ஆண்டுகள் வளர்ந்துவந்த தமிழின் இயற்கை நிலை கெடுமன்றோ? இச்செயலால் தமிழ் எழுத்து, சொல், பொருள் எல்லாவற்றிலும் முரண் பாடும், குழப்பமும், மயக்கமும் உண்டாகும் என்பதற்கு என்ன ஐயம்?

அவமதிக்கும் கூற்று

ஒரு சிலர் கூடிக்கொண்டு தமிழ் எழுத்துச் சீர் திருத்தம் என்று கூறுவது தமிழன்பர்களையும், தமிழ்ப் பேரறிஞர்களையும் அவமதிக்கும் கூற்றன்றோ? மொழியின் பேரால் இழைக்கும் தீங்கு பெருங் குற்றமன்றோ?

என்ன உரிமை?

மக்களுக்காக அரசியலா? அரசியலுக்காக மக்களா? மக்கள் விரும்பாத ஒன்றை—மொழியின் பேரால் செய்ய ஒரு சிலருக்கு என்ன உரிமை இருக்கிறது? இது வீண்குழப்பத்திற்கிடமாமன்றோ?

மக்கள் ஊமைகளா?

மக்கள் வாய்மூடி மௌனிகளாய் இருப்பதாக எண்ணி மக்களின் எண்ணத்திற்கு மாறான காரியங்கள் எதனையும் செய்யலாம் என்பது தமிழ் எழுத்தைச் சீர்திருத்த முயன்றிருப்போர் எண்ணமா?

முயன்றாரில்லை

தமிழகத்திற் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரேயே தமிழ் நலம்பற்றிக் கிளர்ச்சிகள் நடந்து வந்திருக்கின்றன. உரையாசிரியர் இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், தெய்வச்சிலையார், கல்லாடர் முதலிய பழந் தமிழாசிரியர் காலங்களிலுங்கூடத் தமிழ் எழுத்து முறைகளைச் சீர்திருத்தம் செய்ய முயன்றிருப்பதாக அறிய முடியவில்லை.

காலவேறுபாடு போலும்!

தனித் தமிழுக்கு விரோதிகளாகப் பலர் அக் காலங்களிலும் வேலை செய்திருக்கின்றனர். அக் காலங்களில் தோன்றிய உரையாசிரியர்கள் சமயக் கோட்பாடு முதலியவைகளில் மாறுபட்ட கொள்கை யுடையரா யிருந்தும் தமிழின்பேரால், தனிப்பட்ட அன்பும் பற்றுங் கொண்டு, தமிழிற் பிறமொழி கலப் பிற்கு இடங்கொடாது, தவமிருந்து தமிழுக்கு உரை எழுதியிருப்பதாக வரலாற்று நிகழ்ச்சிகள் கூறு கின்றன. அத்தகையத் தமிழ் எழுத்துக்கள் இன்று திருத்தப்படல் வேண்டும் என்று கூறுவது கால வேறுபாடு போலும்!

இரண்டு கூட்டங்கள்

இன்றுள்ள தமிழகத்தில் பல ஆண்டுகளாகத் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்பற்றி எழுதப்பட்டுவருகி றது; பேசப்பட்டுவருகிறது. இதில் இரு நோக்குடை யர் இருக்கின்றனர். ஓரினம் தொல்காப்பியர் காலம் முதற்கொண்டு தனித்தமிழ் இலக்கணத்திற்கு— தனித் தமிழுக்கு விரோதமாகத், தனித் தமிழின் இயல்பினைக் கொலை செய்துவரும் இனத்தைச் சேர்ந்த ஒரு கூட்டம்.

பிறிதொரு இனம், தொல்காப்பியரின் தனித் தமிழ் இலக்கண வரம்பினைப் பாதுகாத்துப் பேணித் தனித்தமிழை வளர்த்துவரும் தனித் தமிழர் கூட்டம். இன்று நேற்றில்லை இவ்விருவருள் நிகழ்ந்துவரும் தமிழ்ப்போர். இது தமிழன்னையின் தவக்குறைபோலும்!

வாழ்வில் அமைதி வேண்டாவா?

உரிமை அடைந்த நாட்டிலுள்ள மக்கள் அமைதியுடனும் மகிழ்வுடனும் வாழ வழிதேட வேண்டுவது ஆட்சிப் பீடத்தில் வீற்றிருப்போர் கடமை. தமிழக ஆட்சியிலே அப்படி நடப்பதாக எதிர்பார்க்க முடியவில்லை. குழப்பங்களே என்றும் இத் தமிழகத்தின் இயல்பாய்ப் போய்விட்டன. மக்கள் விரும்பாத மொழியை வேண்டுமென்றே கொண்டுவந்து திணித்தனர். இதனால் எத்துணை எத்துணை குழப்பங்கள், கிளர்ச்சிகள், புரட்சிகள், போராட்டங்கள். குரோத உணர்ச்சியால் ஒருசிலர் கூடிக்கொண்டு அரசியலின் பேரால் செய்யும் கொடுமைகள், கொடுஞ் செயல்கள், தமிழக மக்கள் அனைவரையும் வருந்தச் செய்கின்றன; துன்புறுத்து கின்றன; அரசியலுக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்யத் தூண்டுகின்றன. மக்கள் வாழ்வில் அமைதி வேண்டாவா? உரிமை என்பது என்ன?

தனித் தமிழ் வளர்ச்சி வேண்டும்

வீணான குழப்பத்திற்குக் காரணமான தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தில் முற்பட்டிருப்பவர்களை அரசியல் பொறுப்பினின்றும் விலக்கிவிட மக்கள் முயற்சிக்க வேண்டும். தமிழ்மக்களுக்கு இது பெருங் கேடுதரும் முயற்சியாகும்; தமிழ் நாட்டு மக்களை அவமதிக்கும் செயலுமாகும். உண்மை யாகத் தனித்தமிழ் வளர்ச்சிக்கு உழைத்துவரும் அறிஞர்களை மக்கள் அரசியலில் நுழைக்கவேண்டும்.

தமிழ் பாண்டிய மன்னர்கள் சொத்து

தமிழ் எழுத்தைச் சீர்திருத்தம் செய்ய யாருக்கும் உரிமை இல்லை. அஃது இக்கால அறிஞர்களின் கலையறிவிற்கு அப்பாற்பட்ட செய்தி. பழந் தமிழ்ப் பாண்டிய மன்னர்கள் தங்களின் அவையின் கண்ணே செந்தமிழ்ச் சான்றோர்களின் வாயிலாகவே தமிழை வளர்த்தனர். தமிழ், பாண்டிய மன்னர்கள் சொத்து; பாண்டிய மன்னர்களின் பாதுகாப்பில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் பாதுகாத்த சொத்து தமிழ். ஆகையால் தமிழைத் திருத்த எவருக்கும் உரிமையில்லை. இக்காலத்தவர் தமிழைப் பாதுகாக்கட்டும்; வளர்க்கட்டும். திருத்தவோ மாற்றவோ முயலுதல் தகுதியற்ற செயலாகும்.

பாண்டிய மன்னர்கள் தோன்றவேண்டும் போலும்!

முன்னாளில் முத்தமிழை வளர்த்த பாண்டிய மன்னர் தலைநகரான மதுரையிலுள்ள இக்காலத்தவரால் தோற்றுவிக்கப்பெற்ற தமிழ்ச் சங்கம் இன்று உறங்குகிறது. தனித் தமிழகம் இன்னும் உரிமை பெறவில்லை. அஃது உரிமை பெற்றிருப்பின் தமிழ்ச் சங்கம் தோன்றியிருக்கும். மறைந்துபோன பாண்டிய மன்னர்கள் மீண்டும் தோன்றவேண்டும் போலும்! தமிழகம் விரோதிகள் கையில் அகப்பட்டு அல்லற்படுகிறது. தனித் தமிழகம்—தனித் தமிழ் கூறும் **நல்**லுலகம்—தனித் தமிழாட்சி என்று தோன்றுமோ?

புலவர்களுக்குப் பெருமை உண்டா?

சங்ககாலப் புலவர் பிறர் பெருமையடையக் கூடிய வகையில் வாழ்ந்தனர். புலவர்கள் தமிழகத்தின் சிறந்த ஆசிரியர்களாக இருந்து மக்களுக்கும் அரசர்களுக்கும் நல்லுரை புகட்டினர். இக்காலப் புலவர்களுக்கு அப்பெருமையுண்டா? இக்காலப் புலவர்களுக்கு அரசியலார் அப்பெருமை அளிப்பரோ?

3

தொல்காப்பியர் உள்ளம்

அறிவு; அறிவு; மெய்யறிவு. மக்களுக்கு அறிவு வேண்டும்; மெய்யறிவு வேண்டும்; பொய்யற்ற மெய்யறிவு வேண்டும். அறிவு எப்படி வரும்? மெய்யறிவு எவ்வாறு வரும்? இதற்கு இடையரு முயற்சி வேண்டும்; சிந்தனை வேண்டும்; உயரிய எண்ணம் வேண்டும். முயற்சி திருவினையாக்கும்; சிந்தனை வழிகாட்டும்; எண்ணம் உயர்வளிக்கும்; உய்விக்கும்; திண்மை நல்கும். ஆசிரியர் திருவள்ளுவனார், 'எண்ணிய எண்ணியாங் கெய்துப' என்றார். எண்ணும் வழி இஃது எனக்காட்டுகின்றார் தொல்காப்பியனார்.

அறிவு

மக்கள் அறிவின்றி வாழ்தல் தீமை; பெருந்தீமை. மக்கள் உணவின்றியும் வாழலாம். உடையின்றியும் வாழலாம். அறிவின்றி வாழ்தல்—பொய்யற்ற—மெய்யறிவின்றி வாழ்தல் தீமை; பெருந்தீமை. மக்கள் அறிவுபற்றி—அறிவின் ஆற்றல் பற்றி நினைப்பதில்லை; ஆழ்ந்து நினைப்பதில்லை; நினைந்து முயலுவதில்லை. இஃது எவ்வளவு தவறு—எவ்வளவு மடமை என்பதை இவர்கள் சிந்திப்பதில்லை; உணர்வதில்லை. ஒரு நொடிப்பொழுதுகூட மக்கள் அறிவின்றி வாழலாகாது.

'மக்கள் தாமே ஆறறிவுயிரே' என்றார் தொல்காப்பியனார். இவர்கள் இதுபற்றிச் சிந்திக்க வேண்டும்; உணர்தல் வேண்டும். இது சிந்திக்க வேண்டுவதொன்று; உணர வேண்டுவதொன்று.

'அறிவுடையார் எல்லாம் உடையார், என்றருளினார் திருவள்ளுவனார். மெய்யறிவுக்கு வழி இஃது எனக்காட்டுகின்றார் தொல்காப்பியனார். தொல்காப்பியனாரின் உள்ளத்தைக் காணுதற்கு நாம் ஆழ்ந்து செல்லுதல் வேண்டும்.

ஊமை

அறிவற்ற காலம்; மிகப் பழங்காலம்; நினைப்பிற்கும் எட்டா மிக நெடுங்காலம். அக்கால மக்கள்—மிகப்பழங்கால மக்கள் பேச்சின்றி வாழ்ந்தனர்; வாய்ப்பேச்சின்றி வாழ்ந்தனர்; ஊமையாய் வாழ்ந்தனர்.

வணக்கம்

உலகில் மொழிகள் தோன்றவில்லை; கலைகள் தோன்றவில்லை; நூல்கள் தோன்றவில்லை. அப்பழங்காலத்தில்—மிகப் பழங்காலத்தில் உலகில் மொழிகள் தோன்றுமுன்னர் முதன்முதல் நமது தமிழ்மொழி—தாய்மொழி தோன்றிற்று; நமது அன்புத் தமிழ்மொழி தோன்றிற்று. உலகில் தலைமை சான்ற நமது தமிழ்மொழியை நமது தாய்மொழியை நாம் வாழ்த்துதல் வேண்டும்; போற்றுதல் வேண்டும்; உயிரெனப்பேணுதல் வேண்டும்; நமது தமிழன்னையை—தனித் தமிழன்னையை நாம் வணங்குதல் வேண்டும்.

மொழி

இடைக்காலத்திற் பல மொழிகள் தோன்றின. அம்மொழிகள் நமது தாய்மொழியுடன் கலந்தன—தமிழுடன் கலந்தன. எனினும் நமது தமிழன்னை தன் வளம் குன்றவில்லை; தன் இளமை குன்றவில்லை; தன் செழுமை குன்றவில்லை. உலகில் நமது தாய்மொழிக்கு ஒப்பாக—இணையாக வேறு எம்மொழியும் இல்லை என்று, இன்று உலகிற் பல மொழி பயின்ற பேரறிஞர் பலர் உரைக்கின்றனர். இந்த இருபதாம் நூற்றாண்டில் நம்மிடை வாழ்ந்த சி. சுப்பிரமணிய பாரதியார் 'யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்' என்று கூறி நம்மைத்தட்டி எழுப்பினார்; வீரமுழக்கம் செய்தார்; வீறுபெற்று நின்றார்.

ஒலிமலர்கள்

இன்று நமது தமிழகத்திடை வழங்கிவரும் கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம் முதலிய மொழிகள் நமது தமிழன்னை ஈன்ற அன்புக் குழவிகள்—தமிழினின்றுந் தோன்றிய—தமிழின் வழி வந்த மொழிகள். இவற்றிற்கு வரலாற்றிற் பல எடுத்துக் காட்டுகள் நிறைந்து கிடக்கின்றன. அவைகளின் ஒலியும் எழுத்தும் சொல்லும் அமைப்பும், இதனை உணர்த்துகின்றன. இஃதன்றி உலகில் வழங்கிவரும் மொழிகள் அனைத்தும் நமது தமிழன்னையின் திருவுள்ளத்தினின்றும் உதிர்ந்த ஒலிமலர்கள். என்பதுபற்றி மேற்கு நாட்டிலுள்ள அறிவு

முதிர்ந்த நன்மக்கள் பலர் மறுக்க முடியாவாறு கூறி வருகின்றனர்.

தமிழரசி

இத்தகைய மொழியரசி, தான் தோன்றிய நாட்டிலேயுள்ள மககளால் வெறுக்கப்படுகிருள்; இழித்துரைக்கப்படுகிருள். தான் தோன்றி வளர்ந்த நாவலம்பொழிலுள் இன்று அவளுக்கு இடமில்லை. நமது அன்புத் தமிழன்னை—தமிழரசி, ஒரு காலத்தில் நாவலம்பொழில் முழுமையும் ஆட்சி செலுத்தினள். அவள் வழிவந்த புதுமொழியரசி, இன்று நாட்டை ஆள முயல்கின்ருள். பழந்தமிழரசியை விரட்டியடிக்க எண்ணுகின்ருள். விரிந்து பரந்த நாவலம்பொழிலுள் ஒரு மூலையிலாதல் அவளுக்கு அவள் ஆட்சிக்கு இடம் வேண்டாவா? அதனையும் அடித்துப் பிடுங்க எண்ணுகின்ருள் நேற்றுவந்த புதுமொழியரசி! நாவலம்பொழில் முழுமையும் செந்தமிழரசி கொலு வீற்றிருக்குங் காலம் வருமோ? செந்தமிழ் மக்கள் அதற்கு முயல்வரோ? உழைப்பரோ? முயன்று உழைத்து செந்தமிழரசியை அரியணை ஏற்றுவரோ?

ஓம்பினர்

நமது அருந்தமிழ் அன்னையை மூவேந்தரும்—பாண்டிய மன்னர் வழிவழிவந்த மூவேந்தரும் தம் உயிரெனப்பேணி முறையுடன் வளர்த்தனர். தங்கள் உயிரினுமினிய நற்றமிழ் அன்னையைத் தங்கள் நாவினுற் போற்றினர்; பொன் எழுத்துக்களிற்

பொறித்தனர்! பொற்றகடுகளிற் தீட்டி வைத்தனர். செல்வப் பெருக்குடைய நன் மக்களும், மற்றவர் களும் தமிழன்னையின் வளர்ச்சியின் பொருட்டுப் பொன்னை அளித்தும், பொன்போன்ற தங்களின் உயிரினை ஈந்தும் பெருந்தகைமையுடன் ஓம்பினர்.

வளர்த்தனர்

அறிவுத் தெய்வத்தின் அருந்துணை கொண்டு நமது பழந்தமிழ் நாட்டின் பழம் பெருந் தமிழ்ப் புலவர்கள் எழுத்து, சொல், பொருள் என இவைகளை உரைகளாகவும் பாக்களாகவும் அமைத்தனர். முப் பொருள் வளமுடன் தழைத்தோங்க நமது முத்தமிழ் அன்னையை வளமுடன் வளர்த்தனர்.

தூய்மை செய்தனர்

அறிவொளி வீசும்—வாய்மை நிறைந்த அற நெறிப் புலவர் உள்ளத்தினின்றும் எழும் செழுந் தமிழ் சொற்களைப் பொன்னினைப் புடமிட்டு எடுப்பது போன்று முத்தமிழ் வளர்த்த பாண்டிய மன்னர்கள் தமிழக மன்னர்கள்—செந்தமிழ் மன்னர்கள்—புலவர் பெருமக்கள் கூடிய தமிழ்ப் பேரவையின் கண், தமிழ்த் தாயினை---அவள் மீது படிந்த மாசகற்றித்—தூய்மை செய்து செம்மையுடன் வளர்த் தனர்.

உவந்தனர்

நமது தனித்தமிழ் பெருந்தாயினை நினைக்குந் தோறும் இனிமை தரும். பாலினும் தேனினுமினிய தீஞ்சுவைத் தருங் கனியினுங் கட்டிக் கரும்பினு மினி

தாய் உள்ளமும் வாயும் உவந்தினிது பயக்கும் பான்மைதான் என்னே ! என்னே !! என்று இனிதுவந்து வளர்த்தனர் பழந்தமிழ்ப் பாண்டிய மன்னர்கள்.

மங்கல ஒலி

உலகிலுள்ள பிற மொழிகள்போன்று கடுமையான உச்சரிப்பின்றி, இடர்ப்பாடின்றி மிக எளிதில் இனிமை தரும் வழியில் ஒலிக்கும் நமது நற்றமிழ், மொழி நலந்திகழ்வதாகும். மக்களும், ஆடு மாடு முதலிய விலங்கினங்களும், பறவைமுதலிய சிற்றுயிர்களும் அம்மா என்று கூ.வி மங்கல ஒலி இசைக்கும் தமிழன்னையின் பெற்றியினை நாம் எடுத்துக் கூறுந் தகையதாமோ !

தொல்காப்பியம்

தொல்காப்பிய நூல் தோன்றிய அடிப்படை நோக்கம் என்ன ? இங்கு இதனை நாம் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும். பழங்காலத் தூய இனிய தனித் தமிழ், அதன் மரபு ; அதன் இலக்கணம், அதன் மரபு ; அதன் செய்யுள், அதன் மரபு ஆகியவற்றினை இக்காலத்தவர் பலர் நன்கு ஆழ்ந்து அறியும் பொருட்டேயாம்.

இக்காலத்தவர் பலர்-அறிஞர் என்று கூறுவோர் பலர்-தொல்காப்பிய நூலினை நன்கு முயன்று ஆழ்ந்து அறியாது இருக்கின்றனர். இதனை ஆழ்ந்து கற்றறிந்த நல்ல திறம் வாய்ந்த ஆசிரியர் வழிநின்று

கற்றுத் தெளிதற்குச் சிலர் விருப்பம் இன்றி வீண் காலம் கழிக்கின்றனர்.

உண்மைப் பொருள்

தமிழ் மொழியில் ஆக்கிய தொல்காப்பிய இலக்கண அமைப்பு, இணையற்ற ஆற்றலோடும் செவ்விய அழகுகளோடும் அமைந்திருக்கின்றது. தமிழ் கூறும் நல்லுலகில் வாழும் மக்கள் அவ்வகையில் நற்றவப் பேற்றினையுடையர் என்றே மொழிதல் வேண்டும். இனிய இயற்கை நெறிகளுடன் செந்தமிழ் இயற்கை இலக்கணத்தை மிகத் திறம்பட எடுத்து விளக்கும் முதல் நூல் நமது தாய் மொழியில்-தமிழில் தொல்காப்பியம் ஒன்றேயாம். இஃது ஒரு நூலே பழைமையும், முதன்மையும் பெற்றிலங்குவது. சிக்கலின்றி, இடர்ப்பாடின்றி- தெளிந்து ஐந்து இலக்கணமும் ஒருங்கே விளங்கும் அரும் பெரும் நூலாக விளங்குகின்றது. இந் நூலினைப் பன்முறை கற்று ஆழ்ந்து அறிவோர் தூய எண்ணமும், ஆற்றலும், விளங்காத கருத்துக்களை எளிதில் அறிந்து கொள்ளும் ஆற்றலும் மெய்யறிவும் பெற்று எளிதில் நல்லறிவுடைய சான்றோராவர் எனலாம்.

பாழ்படுத்துகின்றனர்

உயரிய நல்ல உள்ளத் தூய்மை வாய்ந்த தவ அறிவு மாண்புடைய மெய்மையாளரிடத்துச் சிலர் தனித்தமிழ் அறிவு பெறாது, இற்றை நாளில் அவரவர் தாம் தாம் அறிந்தவாறு முறை பிறழ்ந்து தூய இனிய தமிழிற் பிறமொழிச் சொற்களைக் கலந்து

பலவாறு எழுதுகின்றனர்; பேசுகின்றனர். தனித் தமிழின் தூய்மையினையும், இனிமையினையும் கெடுத்தும் பாழ்படுத்தியும் வருகின்றனர். தூய இனிய தமிழின் இயற்கையும், இனிமையுங்கெட வரம்புமீறி இழித்தும், பழித்தும் வருகின்றனர். வேறுபாடும் திரிபும் கொண்ட உள்ளத்தவராகித் தீங்கிழைக்கின்றனர். தமிழ் எழுத்து முறையினைத் திருத்தவும் முயன்றுள்ளனர்.

மயக்குகின்றனர்

தனித் தமிழின் இயற்கை வரலாற்றிக்குப் பெரிதும்—முற்றும் மாறுபட்டுப் பொய்யும் புரட்டும் கலந்த உரைகளால் எழுதித், தனித் தமிழ் மக்களை மருள—மயங்க வைக்கின்றனர். தனித் தமிழின் இனிமையும், சுவையும், அறியும் ஆற்றலற்ற—தங்களின் அறிவற்ற செயலினை உணர்ந்து திருந்தாது, தனித் தமிழின் நல்லாசிரியரின் இயற்கைப் புலமையின் மாண்பினையும், அவர் நூலுரைகளின் மாண்பினையும், உயர்வு தாழ்வு முறையினையும் பெருமை எனப் போற்றாது இக் காலத்தில் சிலர் அகத்தும் புறத்தும் இழித்தும் பழித்தும் பெருங் கேடு சூழ்ந்து வருகின்றனர்.

ஆற்றல் அற்றனர்

தனித்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் தோன்றிய கால முறையனைத்தும் முற்றும் எடுத்து முடியக் கூறுதற்குரிய தக்க சான்றுகள் இக்காலத்து அகப்படுமாறில்லை. அதன் வரலாற்றினை எவரும்

அறிந்து கூறும் ஆற்றல் அற்றுப் போயினர். பல அறிஞர் பலவாறு கூறி மயங்க வைக்கின்றனர். தொல்காப்பியத்திற்கு முதன் முதல் உரை எழுதிய உரையாசிரியரும், அதன் பின்னர் எழுதிய உரையாசிரியர்களும் தொல்காப்பியரின் வரலாறு பற்றிக் குறிப்பிட்டிருப்பதாக அறியப்படுதற்கில்லை. இறுதியில் உரை எழுதிய ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறும் தொல்காப்பியர் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள், முன்னுக்குப் பின் முரண்பாடு காணும் அளவில் இருப்பதாக ஆராய்ச்சியாளர் அறைகின்றனர்.

மயங்க வைக்கின்றன

ஆசிரியர் திருவள்ளுவனாரின் வரலாற்றினைக் கற்பனை செய்து புனைந்துரைத்து வள்ளுவனாரை மாசுபடுத்தி இழிவுபடுத்தி எழுதி வைத்திருப்பது போன்று, ஆசிரியர் தொல்காப்பியனாரையும் புனைந்துரைக்கப் படுகின்றது. அவரது உண்மை வரலாறும் அறிய முடியவில்லை. தொல்காப்பியனார் வரலாறும் முன்னுக்குப் பின் முரணாகக் கற்பனை செய்து கட்டிவிட்டிருக்கும் வரலாற்றுரைகளும்; ஆராய்ச்சி அறிவுள்ள நல்லறிஞர்களை மயங்கவைக்கின்றன. இஃது இன்னமும் நன்கு ஆராய்தற்குரியதேயாம். தொல்காப்பியர் பற்றிய வரலாற்றுக் குறிப்பின் அடிப்படையை ஆழ்ந்து நோக்கும் போது, தொல்காப்பியரும் அகத்தியரின் சாபத்திற்காளாகி அவமானப்படுத்தப்பட்டவராகவே நச்சினார்க்கினியர் குறிப்புக் கூறுகின்றது. இவற்றிற்குப் பல எடுத்துக்காட்டுகள் உள. அவை வெளிப்படையாக அறிஞர்கள் அறிந்தனவே.

இங்கு நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டுவது : தொல்காப்பியரும், திருவள்ளுவரும் வெவ்வேறு காலங்களில் வாழ்ந்தவர்களென்றும், ஜைன சமய முனிவர்கள் என்றும், ஜைன சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளே திருக்குறளிலும், தொல்காப்பியத்திலும் நிறைந்து கிடக்கின்றன வென்றும், இடைக்காலம் நாவலம் பொழிலுள் நுழைந்த அயலவர் கொள்கைகளை எதிர்த்துப் போராடியவர்களென்றும், அவர்களே தமிழைநன்கு கற்றுத் தமிழின் பழமையைக் காக்கத் தொல்காப்பியமும், திருக்குறளும் பிற நூல்களும் யாத்தனர் என்றும் நமது நாட்டுத் தமிழ்ப் பெரியார் ஒரு சிலர் கூறுகின்றனர்—என்பனவாகும்.

ஒத்த கருத்தினர்

திருவள்ளுவனாரும், தொல்காப்பியனாரும் ஒத்த கருத்துடையவர்கள் என்பதற்கு திருக்குறளின் அமைப்பும் தொல்காப்பியத்தின் அமைப்பும் அதன் கருத்துக்களும் மிக நெருங்கிய தொடர்புடையனவாய் விளங்குகின்றன. இரு நூற்களிலும் ஒன்றிய கருத்துக்கள் ஊடுருவிக் கிடக்கின்றன. திருவள்ளுவனார் ‘அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு’ என்று தோற்றுவாய் செய்து, குறளின் இறுதியில் ‘ஊடுதல் காமத்திற்கின்பம் அதற்கின்பம் கூடி முயங்கப் பெறின்,’ என்று அகர உயிர் முதலும் னகர மெய் இறுதியுமாய் அமைத்து நூல் செய்திருத்தல் தொல்காப்பியரின் தனித்தமிழ் இலக்கண

மரபினை அடிப்படையாகக் கொண்டு திருக்குறள் நூலினை இயற்றி யிருக்கின்றார் என்பது ஆழ்ந்து நோக்குதற்குரியதாம்.

அறிவொளி காட்டுகின்றனர்

தொல்காப்பியர் நூன் மரபின் முதற் செய்யுளில், 'எழுத்தெனப்படுப' அகர முதல் னகர இறுவாய் முப்பஃதென்ப......என்று தொடங்கி எழுத்திலக்கணம் உணர்த்திச் செல்கின்றார். திருக்குறள் நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களையும் திருவள்ளுவர் அறத்துப்பால், பொருட்பால் இன்பத்துப் பால் என மூன்றாக அமைத்திருக்கின்றார்.

தொல்காப்பியர் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்றாக அமைத்து இருபத்தேழு இயல்களாக வகுத்திருக்கின்றனர். இந்த இரண்டு நூல்களையும் உள் நுழைந்து ஆராய்ந்து வரும்போது ஒத்த கருத்துடைய இரு பேராசிரியர்களும் அக்காலத்து இரு நூல்களையும் இயற்றித் தமிழக மக்களுக்கு வழங்கியிருப்பது இக்கால மக்கள் செய்த தவப்பயன் என்றே உள்ளம் இன்பத்துள் மூழ்குகிறது.

இரண்டு நூற்களின் அடிப்படைக் கருத்துக்களையும் ஒன்றையொன்று பிரிக்க முடியாவாறு அமைத்து வைத்திருக்கின்றனர். இரண்டு நூற்களின் மூலக்கருத்துக்களும் ஒன்றுடன் மற்றொன்று பிணைக்கப்பட்டு அறிவொளி காட்டி இழுத்துச் செல்கின்றன. இரு பேராசிரியர்களும் வினையின் நீங்கி விளங்கிய அறிவின் உச்சியில் நின்று முதன் நூல்

கண்ட முனிவர்கள் ஆதலின் இரு நூல்களும் அறிவுக்குப் பெருவிருந்தளிக்கின்றன.

உரையாசிரியர்கள்

தனித் தமிழ் நூல்கள் பிறந்த கால அளவை அந் நூலாசிரியர்கள் குறிப்பிடவில்லை. அந்த நூல்களின் ஆசிரியர்களுள் ஒரு சிலரன்றிப் பல ஆசிரியர்கள் அந்த அந்த நூல்களுள் விளக்கமாக நாம் எளிதில் அறியுமாறு விளக்கம் கூறாது மறைந்து கழிந்தனர். பிற்காலத்து வந்த பழந் தமிழ் நூல்களுக்கு உரை எழுதிய உரையாசிரியர்கள் முற்காலத்து நூலின் சொற்பொருள்களை அவரவர் நூலுரைகளுள் ஆங்கொன்றும் ஈங்கொன்றுமாக வழி மொழிந்து கொண்டுகூட்டி உரைத்துச் சென்றனர்.

தலைமை சான்ற நூல்

சில நூல்களில் வரும் செய்யுட்களால் இவை முன்னர் தோன்றிய நூலுரைகள், இவை பின்னர் தோன்றிய நூலுரைகள் எனபன பற்றிச் சிற்சில குறிப்புகளால் மட்டும் அறியப்படுகின்றன. உரையாசிரியர்கள் பலர் எழுதிய நூலுரைகட்கு முன்னர் பின்னர் அஃது அமைந்தவாறு அதன்வழி நின்று நிலைபெற்று வருவது தொல்காப்பியம் ஒன்றேயாம். தமிழ் நூல்களுள் தனித் தமிழறிவுக்கும் நூலறிவுக்கும் நிலைக்களமான தலைமை சான்ற தனித் தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம்பற்றிய ஒரு சில குறிப்புக்கள் மட்டும் ஈண்டு இயன்றவாறு சிறிது

விளக்கிக் கூறுதல் வேண்டும் என்பது இளமை தொட்டு நீண்டநாள் என்னுள் அரும்பிய அவா.

அறிவுப் பெருங்கடல்

தொல்காப்பியம் அறிவுப்பெருங்கடல். அக் கடலிடை நீந்திக் கரைசேரும் பேறு எல்லோருக்கும் கிடைக்குமோ? எல்லோருக்கும் கிடைத்தல் அரிதே. ஏழையேன் அப்பேறு பெறவியலுமோ? ஏழையேன் எங்கே? தொல்காப்பியம் எங்கே? எல்லாம் தமிழன்னையின் பொறுப்பு! எனது அன்புக்குரிய செந்தமிழன்னை என்னைக் கைவிடமாட்டாள் என்னும் உறுதி எனக்கிருக்கிறது. யான் அவள் மைந்தன். என் பிழை பொறுத்து என்னை ஆதரிக்க வேண்டுவது அன்னையின் கடமையன்றோ? தொல்காப்பியரின் உள்ளக்கடலுள் ஏதோ இயன்றவாறு நீந்தி நீந்தி மூழ்கி மூழ்கி எழுந்து எழுந்து கரை சேர முயன்று பார்க்கிறேன்! மற்றவை திருவருட் செயல்!

போலி நூல்கள்

தொல்காப்பியம் தோன்றிய பின்னர், தொல்காப்பிய நூலின் நுண்பொருள் காண வியலாது, இடைக்காலம் தோன்றிய அயல் மொழிப் புலவர் சிலர், தொல்காப்பிய நூலின் பெருந்துணை கொண்டு தங்களின் அறிவுக்கு எட்டியவாறு போலி இலக்கண நூல்கள் பல எழுதி வைத்தனர். அவை மக்களிடை நன்கு பரவாது பெயரளவில் நிலவி மறைந்து கிடக்கின்றன. இவையனைத்தையும் ஒருங்கு வைத்து மெய்யறிவுடையார் உற்று நோக்கும்போது, தொல்

காப்பிய நூலின் மாண்பும், இடைக்காலம்தோன்றிய போலி இலக்கண நூல்களின் புன்மையும் ஆழ்ந்து நோக்கின் நன்கு அறியலாம்.

தமிழ் மாணவர்

தொன்றுதொட்டு வரும் தமிழ் நல்லாசிரியர் வழி தனித் தமிழ்க் கல்வி கற்கப் பெறாத தமிழ் மாணக்கரும், பிறரும் இவை மெய் இலக்கணம், இவை போலி இலக்கணம் என்று துணிந்து தெளிய மாட்டாராய் மெய்யும் பொய்யும் மயக்கங்கொண்டு இடர்ப் படுகின்றனர். அவர் அவ்வாறு இடர்ப்படாது, மற்று அவற்றுள் மெய் இலக்கண நூல்போன்று தோன்றி மயங்க வைக்குஞ் சிலவற்றின் பொய்ப் பெருமையினையும் இக்காலத் தனித் தமிழ் மாணவர் அறியும் பொருட்டு, இங்கு தொல்காப்பிய நூல் பற்றி ஒரு சிறிது எழுதும்படி நேர்ந்தது.

வழி காணல்

தனித் தமிழ் இலக்கண நூற் புலமை வளர்ந் தோங்கும் பொருட்டும், அதன்வழி மெய்யறிவும் மெய்யன்பும் நிரம்பும் பொருட்டும் முயன்று முப் பொருள் உண்மைகளை அறிந்து, உறுதிப் பயன் களைப் பெற்று உய்யும் வழி காணவேண்டும் எனும் பெருநோக்கம் ஒன்றே கொண்டு எழுந்தது இச்சிறு முயற்சி. ஆம்! தனித்தமிழின் பழைமை, அதன் மரபு; அதன் இலக்கணம், அதன் மரபு ; அதன் செய்யுள்,

அதன் மரபு முதலியன அனைத்தும் செய்யுளியலின் விரிவே இலக்கணமாக அமைந்திருக்கின்றன.

தொல்காப்பியர் முற்காலச் சான்றோர் வழி நின்று தொல்காப்பியம் இயற்றி நமக்கு அளித்தனர். அதன் இலக்கண மரபியலை இக்காலத்தவர் கற்றுத் தெளிவடைதல், வருங்காலத் தமிழகத்தில் தனித் தமிழ் வளர்ச்சிக்கு ஒரு வழிகாட்டியாகும். தமிழகத்திற் பிறந்தார் அனைவரும் தொல்காப்பியம் கட்டாயமாகக் கற்றல் வேண்டும். கற்று, அதன் பயன் பெற்று மெய்யறிவு பெறவேண்டுவது தனித் தமிழ் மக்களின் பெருங் கடமை ; இன்றியமையாத கடமை.

தமிழ் கூறும் நல்லுலகத்து வழக்கும் செய்யுளும்

ஆசிரியர் தொல்காப்பியனார், தொல்காப்பியம் எனும் நூல் தமிழில் இயற்றியருளினார். அவர் தொல்காப்பிய நூலினை இயற்றிய அடிப்படை எண்ணம் என்ன? அவர் ஏன் தொல்காப்பியம் இயற்றினார்? இவற்றினை ஆழ்ந்து ஆராய்ந்து அறிதல் வேண்டும் இதனைத் தமிழகமக்கள் பெரிதும் கருத்தூன்றி அறிந்து தெளிதல் வேண்டும்.

ஆசிரியர் தொல்காப்பியனார் காலத்திற் பல நூல்கள் இருந்தன. தொல்காப்பிய நூலிற்கண்ட இலக்கணங்களை ஆராயும்போது, தொல்காப்பிய நூல் தோன்று முன்னர்த் தமிழிற் பலவகையான செய்யுட்கள் மலிந்து விளங்கினவென்று தோன்றுகிறது. தொல்காப்பியர் பல நூல்களை ஆராய்ந்து தெளிந்திருந்தார். தொல்காப்பியம் அந்நூல்களின் வழிவந்த பழந் தமிழ் இலக்கணம்.

ஆசிரியர் தொல்காப்பியனாருக்கு முற்பட்ட பழந் தமிழ்ப் புலவர் பலர் இயற்றிய பழைய செந்தமிழ் இலக்கண நூல்களும், செய்யுட்களும் தொல்காப்பியனார் காலத்துப் பெரு வழக்கில் இருந்தமையால், மக்கள் வாழ்வின் இலக்கணத்தை ஓர் ஒழுங்கான அமைப்பினால் வரையறுத்து உரைக்க அவர் துணிந்தார்.

முன்னோர் வகுத்த இலக்கணங்களும், செய்யுட்களும் மிக விரிந்து பரந்து கிடந்தமையால், அதனை

மக்கள் எளிதில் அறிந்து அறிவுப்பயன் துய்க்கு மாறில்லை என்ற உண்மை ஆசிரியர் தொல்காப் பியனார் அறிவுக்கு விளங்கிற்று. இதனை ஆழ்ந்து உணர்ந்த ஆசிரியர் தொல்காப்பியனார், சில நாள் வாழ்வும் பல பிணியுஞ் சூழ்ந்த சிறிய அறிவினை யுடைய மக்களனைவரும் அப்பழந் தமிழ் இலக்கணங் களையும், செய்யுட் பொருட்களையும் எளிதில் அறிந்து கொள்ள இயலாமையால், இத்துணை வரையறுத்துப் பகுதி பகுதியாக விளக்கி உணர்த்துகின்றார்; கிடைத்தற்கரிய ஓர் அறிவுப்பெரு நூலினை நமக்கு வழங்கியிருக்கின்றார் தொல்காப்பியனார்.

பண்டைச் செந்தமிழ்ச் சான்றோர் மாசு நீங்கிய-தூய்மை பெற்ற-வடித்த சொற்களால் நன்கு ஆராய்ந்து தெளிந்த அறிவுரைகளால், பழந் தமிழ் மக்கள் வாழ்வில் வழக்கிலுள்ள இலக்கணங்களையும், அவர்கள் வாழ்விடை அறிவின் முதிர்ச்சியாலெழுந்த பாட்டுக்கள் என வழங்கும்-செய்யுட்கள் ஆகிய இரண்டினையும் முதன்மையாக வைத்துச் செந்தமிழ் நாட்டிற்கு இயைந்தவாறு, அவற்றினை முற்ற-முடிவு கண்டு முறைப்பட எண்ணித் தொகுத்திருக்கின்றார் ஆசிரியர் தொல்காப்பியனார்.

பண்டை நூல்களிற் கிடந்தவாறன்றிப் பல கூறுகளாக முறைப்படுத்தி, முறையோடு அமைதல் வேண்டும் என்று எண்ணினார் ஆசிரியர் தொல்காப் பியனார். எழுத்து முறையினையும், பொருள் முறை யினையும், சொல் முறையினையும் ஊன்றி அழுந்தி ஆராய்ந்தார்.

பத்துவகைக் குற்றமும் அகன்று, முப்பத் திரண்டுவகை அறிவோடு புணர்ந்த இந்த நூலினுள் அந்த மூன்றுவகை இலக்கணமும் மயங்காவாறு முறைப்படுத்திச் செய்திருக்கின்றமையின், எழுத்து இலக்கணத்தை முன்னர்க் காட்டினர். அதன் பின்னர் ஏனைய இலக்கணங்களையும் தொகுத்துக் கூறினர்.

அகத்திய முனிவரிடத்து இலக்கணம் பயின்ற ஆசிரியர் தொல்காப்பியனருடன் ஒருங்கு கற்ற ஒரு சாலை மாணக்கர் எனக் கூறப்படும் பனம்பாரனர், தொல்காப்பியத்திற்கு சிறப்புப்பாயிரம் உரைத் திருக்கின்றூர்; அதங்கோட்டு ஆசான் என்பவர் பாண்டிய மன்னர் அவையின் கண்ணே பல புல வர்கள் முன்னிலையில் 'தொல்காப்பிய நூலினைக் கேட்டார்' என்று பாயிரம் கூறுகின்றது. இவை யெல்லாம் ஆராய்ச்சிக் குரியனவா யிருக்கின்றன. இது பற்றித் தொல்காப்பியர் காலம் எது என்னுந் தலைப்புடன் எழுத எண்ணியுள்ளேன்.

சிறப்புப் பாயிரம்

தொல்காப்பியத்திற்குச் சிறப்புப் பாயிரம் இயற்றிய பனம்பாரனர்:—

"வட வேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ் கூறும் நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்......"

என்று கூறுகின்றூர்.

'தமிழ் கூறும் நல்லுலகத்து வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்' என்பதற்கு உரையாசிரியர் இளம்பூரண அடிகள் கூறிய உரை வருமாறு :—

'வட வேங்கடம் தென் குமரி அ இடைத் தமிழ் கூறும் நல் உலகத்து வழக்கும் செய்யுளும் அ இரு முதலின்—வடக்கின் கண்ணுளதாகிய வேங்கடமும் தெற்கின் கண்ணுளதாகிய குமரியுமாகிய அவற்றை எல்லையாக உடைய நிலத்து வழங்கும் தமிழ் மொழியினைக் கூறும் நன்மக்களான் வழங்கும் வழக்கும் செய்யுளுமாகிய இரு காரணத்தானும்.'

நச்சினார்க்கினியர் கூறிய உரை வருமாறு :—

'வடவேங்கடந் தென்குமரி ஆயிடை—வடக்கின் கண் வேங்கடமுந் தெற்கின்கண் குமரியுமாகிய அவ்விரண்டெல்லைக்குள்ளிருந்து, தமிழ் கூறும் நல் உலகத்து வழக்குஞ் செய்யுளும் ஆ இருமுதலின்—தமிழைச் சொல்லும் நல்லாசிரியரது வழக்குஞ் செய்யுளுமாகிய அவ்விரண்டையும் அடியாகக் கொள்ளுகையினாலே' என்பனவாகும்.

உரையாசிரியரென்றது தொல்காப்பியத்திற்கு முதன்முதல் உரை செய்த இளம்பூரண அடிகளை. உரைகளில் சில மாறுபாடுகள் காணப்படுகின்றன. ஆம்! அவ்வுரையாசிரியர்கள் வாழ்ந்த கால நிலை, மக்கள் அறிவு நிலைக்கொத்தவாறு அவரவரின் போக்கின்படி உரை எழுதிச் சென்றிருக்கின்றனர்.

தொல்காப்பியம் தமிழ் கூறும் நல்லுலகின் முப்பொருள் இலக்கணம் விளக்கவந்த நூல். எழுத்து எழுத்தோடு புணர்ந்து சொல்லாயிற்று; சொல், பொருளை உணர்த்திற்று; பொருளாவன: அறம் பொருள் இன்பம். இவ்வாறு எழுத்தின் பின்னர்ச் சொற்கள் தோன்றின. அஃது அறம், பொருள், இன்பம் என்று விரிந்தன. அவ்விரிவின் பொருளினை அறிவறிந்த மக்கள் வழக்கு என்றனர். வழக்கினைந்து சொற்களை ஆக்கிக் கொண்டமையால், சில சொற்கள் பிறந்த அக்காலத்து வழக்கு என்பது.

‘இஃது அறத்தை உணர்த்திற்று
இது பொருளை உணர்த்திற்று
இஃது இன்பத்தை உணர்த்திற்று’

என்று விளக்கி நிற்கின்றன.

ஆசிரியர் திருவள்ளுவனர் இயற்றிய முப்பால் நூல், தமிழ் கூறும் நல் உலகின் வழக்கினை அடிப்படையாகக்கொண்டு எழுந்த செழுந்தமிழ் நூல் என்பதற்கு மேற் காட்டிய முப் பொருள் குறிக்கும் சொற்களும் உறுதிப்படுத்துகின்றன. பழந் தமிழர் வாழ்வு, முப் பொருளினை அடிப்படையாகக் கொண்டது என்னும் உண்மை இங்கு விளங்குவதொன்ரும்.

செய்யுள் என்பது...

‘பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
யங்கத முதுசொல் (லோடு) லவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பி

ஞற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்’

—தொல்—செய்—78

இதன் பொருள் : ‘பாட்டு, உரை, நூலே, வாய் மொழி, பிசியே, அங்கதம், முது சொல்லோடு அவ் வேழ் நிலத்தும்—பாட்டுக்களும், உரைகளும், நூல் களும், மந்திரங்களும், பிசிகளும், அங்கதமும், முது சொல்லும் எனப்பட்ட அவ் ஏழு நிலத்தும் வண் புகழ் மூவர்—கொடையாற் பெற்ற புகழினை உடைய சேர சோழ பாண்டியருடைய, தண்பொழில் வரைப்பின்—குளிர்ச்சியை உடைய நாவலம் பொழிலுட் தமக்கு வரைந்துகொண்ட வட வேங் கடம் தென்குமரியிடத்து, நாற் பெயர் எல்லை யகத் தவர் வழங்கும்—மலை மண்டலம், சோழ மண்டலம், பாண்டியமண்டலம், தொண்டை மண்டலம் என்னும் நான்கு பெயரை உடைய தமிழ் நாட்டார் நடாத்தும், யாப்பின் வழியது என்மனார் புலவர்—செய்யுளின் பெயர் தனக்குப் பெயராகவும் உடைத்து ; மேற் கூறிய யாப்பு என்றவாறு.

என்றது, குறித்த பொருளை அடிக்கண் முடிய நாட்டுதலே யன்றி இப்பகுதிப்படச் செய்தலும் யாப்பு உறுப்பு என்றதாம். பாட்டுச் செய்யுள், உரைச் செய்யுள், நூற் செய்யுள் எனத் தமிழ் நாட் டார் வழங்கியவாறே பெயர் பெறும் என்றவாறு.

எனவே, அந் நாட்டார் வழங்கும் யாப்புப் பகுதி கூறினார் ஆயிற்று—நச்சினார்க்கினியர்.

'பாட்டு முதலாக முது சொல் ஈறுகச் சொல்லப் பட்ட ஏழு நிலத்தினும் வளவிய புகழை உடைய சேரன், பாண்டியன், சோழன் என்னும் மூவரது தமிழ் நாட்டகத்து அவர் வழங்கும் தொடர் வழிக் கண் வரும் மொழி யாப்பாம் என்றவாறு.' என்பது உரையாசிரியருரை.

விளக்க உரை: 'வாய் மொழி—மந்திரம். பிசி-உவமையை அடிப்படையாகக் கொண்டு தோன்றும் விடுகதைப் பாட்டுவகை. அங்கதம்—வசைப்பாட்டு வகை. முது சொல்—பழமொழி வகை. ஏழ் நிலத்தும்—ஏழுவகை அடிப்படையி னுலும். மூவ ரென்றது, சேர, சோழ, பாண்டியர். தண்பொழில் வரைப்பின் நாற்பெயர் எல்லை யகத்தவர்' என்றது, தமிழ் நாட்டவர் என்றற்கு, இனிய தமிழ் நாட்டின் இடமாகிய வடவேங்கடம் தென்குமரியாறு குணகுட கடல் என்னும் நாற்பெயர் எல்லையுட்பட்ட தமிழ் நாட்டி லுள்ளார் என்பது அதன்பொருள். யாப்பின் வழியது—முற்கூறிய யாப் பென்பது என்க. எனவே யாப்பு என்பது, பாட்டு யாப்பு, அங்கத யாப்பு, பழ மொழி யாப்பு எனத் தமிழர் வழங்கும் எழுவகை யாப்புகளாய் வரும் என்பது கருத்து.'—இளவழகனுர்.

இலக்கணம் என்றும், இலக்கியம் என்றும், இலக்கியம் கண்டதற்கே இலக்கணம் இயம்பப்படு கிறது என்றும் நாட்டிலுள்ள அறிஞர் பலர் எழு தியும், பேசியும் வருகின்றனர். தொல்காப்பியனுர் பாட்டு, யாப்பு, செய்யுள் என்று குறிப்பிடுகின்றுரே

யன்றி, இலக்கியம் என்று குறிப்பிட்டிருப்பதாக அறியமுடியவில்லை. இலக்கியம் என்பதற்கு, அகத்திய முனிவர் அருளியதாகக் கூறப்படும் ஒரு பாட்டு எடுத்துக்காட்டப்படுகிறது. இலக்கியம் என்பது தனித் தமிழ் வழக்கு அன்று என்று பேராசிரியர் சோமசுந்தர பாரதியார் மறுத்திருக்கின்றனர். இஃது அறிஞர் சிந்தனைக்கும், ஆராய்ச்சிக்கும் விருந்தளிக்கும் உரையாம். இச் செய்யுள் அமைப்புக்கள் கடைச் சங்கத் தொகுப்புக்களினின்றும் அறியலாம்.

5

" எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி..."

ஆசிரியர் பனம்பாரனார் அருளிய சிறப்புப் பாயிரத்தின் அடுத்த பகுதி, 'எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி ...' என்பதாகும். நாடி—என்பது : 'ஆராய்ந்து' என்று பொருள்படும். முதல் இரண்டு கட்டுரைகளில் தொல்காப்பிய நூலின் கருத்துக்கள் பற்றியும், 'தமிழ் கூறும் நல்லுலகு' என்பது பற்றியும், 'அதன் வழக்குஞ் செய்யுளும்' என்பது குறித்தும் சிறிது விளக்கப்பட்டன. இனி, மூன்றாவதாக 'எழுத்து' என்பது பற்றி ஆராய்தல் வேண்டும்.

'தமிழ் பாண்டிய மன்னர்களின் சொத்து' என்ற தலைப்பில், 'எழுத்து' என்பது குறித்து, 'தமிழ் முரசு' 'முரசு 17 ஒலி 90' (3—10—51) இதழில் வேறு வகையில் சிறிது விளக்கஞ் செய்யப்பட்டது. ஈண்டு 'எழுத்து' என்பது பற்றி ஆசிரியர் தொல்காப்பியனார் அருளிய நூல் மரபினை ஆராய்ந்துகூறு முன்னர், முதலில் எழுத்துக்களின் பிறப்பு இலக்கணம் பற்றிய விவரங்களைச் சிறிது விளக்கமாக அறிந்துகொள்ளல் வேண்டும். இஃது எழுத்திலக்கணம் அறிந்து தெளிதற்கு உதவி அளிக்குமென்று கருதுகிறேன். இதன் பின்னர் நூல் மரபு, மொழி மரபு, பிறப்பியலின் பிற பகுதிகளும், மற்ற இயல்களும் முறைப்படி ஆராயப்படும்.

வழி நூல்

ஆசிரியர் தொல்காப்பியனர் தொல்காப்பியஞ் செய்யு முன்னர் சிற்றகத்தியம், பேரகத்தியம், இசை நுணுக்கம், செங்கோன் றரைச்செலவு, இயனூல், பெரு நூல், முதுகுருகு, பெரு நாரை முதலிய முதல் நூலும் வழி நூலுமாகிய இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் நூல்கள் பல இருந்தனவென்றும் அம் முன்னூல்களின் இலக்கணங்களையே தொகுத்துக் கூறினரென்றும், முந்து நூல்களில் அவை முறையின்றிக் கிடத்தலை ஆராய்ந்து முறையோடு பொருந்தக் கூறினரென்றும், தாம் வழி நூல் செய்யப் புகுந்தது தலையாய அறிவினரே யன்றிக் கடைப்பட்ட-குறையுடைய வாழ்வும் பல பிணியுஞ் சூழ்ந்த சிறிய அறிவினையுடையோரும் எவ்வளவு எளிதில் உணர்தல் முடியுமோ அவ்வளவு எளிதில் விளங்குமாறு, அந்த முதல் நூல்களிலுள்ள எழுத்து, சொல், பொருள் மூன்றும் குறைவுபடக் கூறாது தொகுத்துக் கூறலே தக்கதென்றும், அந்த இயற்றமிழோடு அது ஒழிந்த பிற இலக்கணங்களும் கூற வேண்டுமென்றும் பிறவும், பலகால் ஆராய்ந்து கூறினர் என்றும், அஃது அவரது பற்று நீங்கிய ஒழுக்க வழிபாட்டின் பேரறச் செயலாமென்றும், ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளின் முன்னர்த் தமிழகத்தின் பேரறிஞர்களாக விளங்கிய சோழவந்தான் அரசஞ் சண்முகனர், பரிதிமாற் கலைஞர் என்ற வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் முதலிய ஆராய்ச்சி அறிவுடைய நல்லறிஞர் சிலர் கூறுகின்றனர்.

நூல் அமைப்பு

ஆசிரியர் தொல்காப்பியனார், எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களாக வகுத்து, எழுத்து அதிகாரத்தை முதல் இயல் நூல் மரபு, இரண்டாவது இயல் மொழி மரபு, மூன்றாவது பிறப்பு இயல் என முறைபடப் பிற இயல்களையும் அமைத்திருக்கின்றார். தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறுவது :—

"எழுத்தும் தனி மெய்யும் மொழியின் அன்றி உணர்த்தல் ஆகாமையின், அவை பிறக்கும் மொழியை, மொழி மரபிடை உணர்த்திப் பிறப்பு உணர்த்த வேண்டுதலின் நூல் மரபின் பின்னர் வையாது இதனை மொழி மரபின் பின்னர் வைத்தார்...எழுத்துக்களினது பொதுப் பிறவி இத்துணை நிலைக்களத்து நின்று புலப்படும் என்கிறது." (தொல்-பிறப்பியல் செய்யுள் 1. உரைக்குறிப்பு.)

இது நூலினை முறைப்படி கற்க விரும்புவோர் பின்பற்ற வேண்டிய முறை என்பதை நாம் உள்ளத்தில் பதிய வைத்துக்கொள்ளல் வேண்டும்.

இக்கால நிலைக்கு ஏற்ற முறையில் யான் இதில் சிறிது மாறுதலைப் பின்பற்ற நேர்ந்தது குறித்துச் செந்தமிழ்ச் சான்றோர் மன்னிப்பாராக. சிற்சில பகுதிகளையுஞ் செய்யுட்களையும் சிற்சில இடங்களில் கால நிலைக்கேற்றவாறு மாற்றிப் பொருள் அறிய வேண்டிய நிலைமையினை அறிஞர் சிலர் பின்பற்றியுள்ளனர் என்பதும் பலரும் அறிந்த உண்மையாம்,

பிறப்பியல்

தொல்காப்பிய நூலின் பிற இயல்களின் உண்மைகளை நன்கு ஆழ்ந்து அறிந்து தெளிதற்குப் பிறப்பிடம், அதன் 'பிறப்பியல்' என்று எனது சிறிய ஆராய்ச்சி அறிவிற்கு விளங்கினமையான், முதலில் பிறப்பியலின் முதற் செய்யுளையும், இரண்டாவது அதன் இறுதிச் செய்யுளையும் பற்றி ஆராய்ந்து எழுத முயல்கின்றேன். முதற் செய்யுளில் எழுத்துக்களின் பொதுப் பிறப்பியலை உணர்த்த வந்த ஆசிரியர் தொல்காப்பியனார், எழுத்துக்களின் பிறப்பியலுக்குப் புறநடையாக, அதன் இறுதிச் செய்யுளில், எழுத்திலக்கணம் உணர்த்த வந்த உண்மை வரலாற்றினையும் ஆங்கே புதை பொருளாக வைத்துள்ளனர். இக்காலத்தில், எல்லாம் இழந்து மெய்யறிவு வளர்ச்சிக்குத் தனித் தமிழில் மெய்ந்நெறி காட்டும் ஆன்றோர் அருளிய தனித் தமிழ் மறைகள் இல்லையே என்று மனங்கலங்கி மயங்கி நிற்கும் என்போன்றார்க்கும் பெரும் ஏமாற்றத்தையும் தருகின்றார். அதனை இறுதிச் செய்யுளின் உட்பொருளின் ஆராய்ச்சியிற் புகுந்து பார்ப்போம்.

எழுத்துக்களின் பிறப்புப் பற்றி இயம்பு முன்னர், அவ்வெழுத்துக்கள் என்பவை எவை? அவைகள் எவ்வாறு எழுத்துக்களாயின? அவ்வெழுத்துக்கள் எவ்வாறு தோன்றின? அவைகள் எங்கிருந்து தோன்றின? எதிலிருந்து தோன்றின? எப்படித் தோன்றின? எதனால் அவைகளுக்கு எழுத்

துக்கள் என்ற பெயர் வந்தன என்பன போன்றவைகளை முதலில் சிறிது ஆராய்ந்து அறிந்து கொள்ளல் எழுத்தறிவுக்குப் பெருந்துணை பயக்குமென்று எண்ணுகிறேன்.

மக்கள் வாய் பேசாமல் ஊமையாய் இருக்கின்றனர். வாயைத் திறந்தும் ஒலி—ஓசை தோன்றவில்லை; அதன் பின்னர் உயிரின் முயற்சி வேண்டும். அம் முயற்சி எங்கிருந்து வருகின்றது? எவ்வாறு வருகின்றது? உந்தியிலிருந்து—உந்தியின் அடியிலிருந்து வருகின்றது என்று கூறலாம். இயற்கையாக உந்தியினின்றும் முந்தி எழும் உள்காற்று—அல்லது உயிர்ப்பு—அல்லது ஆவி—அல்லது வளி என்று கூறப்படும் உயிர்ப்பு-உயிருடைய ஒருவர் வாயைத் திறந்து முயன்று அங்காந்து ஒலிக்க 'அ' என்ற முதல் உயிரொலி எழுகின்றது. இந்த முதல் அகர உயிரொலி எங்கிருந்து பிறந்தது? உந்தியினின்றுந் தோன்றிய உயிர்க் காற்றினின்று பிறந்தது; அவ்வொலி அணுத் திரள்களின் கூட்டமாக, துகளாக வாயினை இடமாகக் கொண்டு பிறர் அறிய ஒலியாய்-ஓசையாய் ஒலிக்கின்றது; பிறக்கின்றது எனலாம்.

வினையினீங்கிய விளங்கிய அறிவினையுடைய முனிவர் பலர் இந்த ஒலி பிறந்துவரும் இடத்தினை உந்தியென்றும், கொப்பூழ் என்றும், மூலாதாரம் என்றும் பலவாறு கூறுவர். இதன் உண்மை இரகசியங்களையும், பிற விவரங்களையும் உணர்ச்சி நிலையிற் பண்பட்ட ஒன்றியிருந்து நினைந்து,

நினைந்து ஊனுருகி உள்ளமுருகி உள்ளொளி பெற்றிலங்கும் உண்மைப் பெரியார் வாய்க் கேட்டுணர்ந்து தெளிதல் நன்றாம்.

உலகிலும், நமது நாட்டிலும் தோன்றிய பெரியார் பலரும் அறிவுடன் கூடிய இன்ப-அன்பு வாழ்வுப் பேற்றினை அடைய முயன்ற முயற்சியெல்லாம், அவர்கள் அமைதி நாடி ஒன்றியிருந்து உந்தியினின்றெழும் உயிர்க் காற்றினை எழுப்பி, அவ்வுயிர்க்காற்றின் துணை கொண்டு எவ்வாறு வளர்ச்சி யடைந்து இன்ப வாழ்வினை-மாறா அன்பினை அடையலாம் என்ற துறையிலேயே படிந்து கிடந்தது. அவர்களின் வாழ்வினிற் கண்ட உண்மைகளைப் பலவாறு பல நூல்களாவும் எழுதி வைத்துச் சென்றனர்.

இக் கருத்தினை நமக்கு நிறைவுடன்-குறைவின்றித் தெளிய எடுத்துரைக்கும் செழுந் தமிழ் முதல் நூல்—இணையற்ற முழுநூல் தொல்காப்பியம். ஆசிரியர் தொல்காப்பியனார் ஒரு முனிவர்; மெய்ம்மை நிலை எய்தியவர்; மெய்யறிவு பெற்ற செந்தண்மையாளர்; செந்தமிழ்ச் சான்றோர். அம் முனிவர் பெருமான் மக்கள் இன்ப-அன்பு வாழ்வினைப்பெற இனிய தமிழின் வழி, உயிர்நிலையான அன்புவழி காட்டுகின்றார். இனிமை தரும் இனிய வாழ்வினை எவ்வாறு அடைதல் வேண்டுமென்பதற்கு முதன் முதல் ஒலி கருக்கொண்டு உருவாகித் தோன்றும் இடத்தினை 'உந்தி' என்கின்றார்! 'உந்தி முதலாக' என்று முதல் வழி காட்டுகின்றார்;

‘உந்தி முதலாக முந்தி எழுங்காற்று’ என்கின்றார். அஃது உயிராய் உயிரினை ஓம்புகின்றது. ஆசிரியர் மறைமலை அடிகள் :—

“ஆசிரியர் தொல்காப்பியனார் அருந்தவத்தினர். தம் உள்ளத்தில் முளைத்து நின்று உந்திய அளவிலே அவர்க்கு அவ்வரும்பெரு நுண் பொருள்கள் விளங்கின; பின்னர் அவர் அவற்றை வழிப்படுத்தித் தொகுத்தும் விரித்துந் தொகை விரியாக்கியும் நூல் இயற்றினார்” என உரைத்தனர்.

“அவ் உயிர் வளர்ச்சியின் உட்பொருளை-இரகசியங்களை இங்கே யான் கூற வரவில்லை; அவற்றின் இரகசியங்கள் அனைத்தும் அந்தணர் மறையிலே விரிந்து பரந்து கிடக்கின்றன; அவைகளை அம் மறையிலே காணுங்கள்” என்று வழியுங் காண்பிக்கின்றார் ஆசிரியர் தொல்காப்பியனார்.

“உந்தியில் தோன்றிப் புறத்தே இசைக்கும் எழுத்தொலிகளின் காற்றின் அளவிற்கே யான் மாத்திரை கூறினேன்; அவற்றினது மாத்திரையை உணர்ந்து தெளிக” என்று முடிக்கின்றார் ஆசிரியர் தொல்காப்பியனார்.

உந்தி—உன் தீ—உள் தீ—உன்னுள்ளே இருக்குந் தீ யென்றும் பெரியோர் பொருள் கூறுவர். இதனை இராமலிங்க அடிகள்: ‘அருட் பெருஞ் சோதி’ என்றார். ஆசிரியர் திருவள்ளுவனார், ஒளவையார், திருமூலர், மெய்கண்டார் முதலிய பேரருட் பெருஞ் செல்வர்கள், இது பற்றி நிறைய ஒவ்வொரு வகையில் எடுத்துக் கூறியிருக்கின்றனர். அப் பெரியார்களின் வழியிலே நின்று அவர்களின்

நூல்களைப் பயின்ற பண்புடையார்க்கு இது பற்றி விரித்து உரைக்க வேண்டாமென நினைக்கின்றேன்.

ஆசிரியர் தொல்காப்பியனார்க்குப் பின் வந்த பெரியார் அனைவரும், ஆசிரியர் தொல்காப்பியனார் அருளிய இந்த உந்தியின் இரகசியங்களைத் தொல்காப்பிய நூலின் வழி உணர்ந்தே வளர்ச்சியடைந்து பெரியோர்களாயினர். நமது நாட்டு முனிவர்களும், சித்தர்களும் இதனைப் பற்றி ஆராய்ந்து உணர்ந்த உண்மைகளை அவர்கள் விரிவாய் எழுதிவைத்துள்ள நூல்கள் பல. அவைகளைப் பற்றி இங்கே யான் விரித்து உரைக்க விரும்பவில்லை. அதனைப்பற்றி ஆசிரியர் தொல்காப்பியனாரே நமக்குப் பதிலளித்து விட்டனர்.

அறிவு கருக்கொள்ளுதற்கு எழுவாயான இடம் 'உந்தி' என்பதை எல்லோரும் ஆழ்ந்து உணர்தல் வேண்டும். உந்தியினின் றெழுங் காற்று நல் வழியிற் பயன்படல் வேண்டும். உந்தியினின்றெழுங் காற்றுக்கு, முயற்சித் துணை வேண்டும். முயற்சி திருவினையாக்கும். முயற்சி துணை செய்யாவிடின், உயிர் விளக்கம் பெற முடியா தென்பது பெரியோர் கொள்கை. உந்திக் காற்று, முயன்றாலன்றி உயிர் விளக்கத்திற்குப் பயன்படாது. இந்த உந்தி எல்லோருக்கும் வேலை செய்வதில்லை. உந்திக்காற்றினைச் சிலர் சிறைவைத்திருக்கின்றனர். பலருக்கு முயற்சி எனுங் கதவு சாத்தப்பட்டே யிருக்கிறது. அக்கதவினைத் திறக்கும் முயற்சி செய்வாரில்லை. அக் கதவு திறக்கப்படல் வேண்டும். சிறை வைக்கப்பட்டுள்ள

உயிர்க் காற்று விடுவிக்கப்படல் வேண்டும். அச் சிறைக் கதவினை எவ்வாறு திறப்பது? அதற்குச் சிந்தனையுடன் கூடிய அறிவின் முயற்சி வேண்டும். முயற்சியின்றி எதுவுமில்லை. அம் முயற்சியின் அளவைப் பொறுத்தது அதன் விரிவு; அறிவு வளர்ச்சி; உயிர் வளர்ச்சி என்கின்றார் ஆசிரியர் தொல்காப்பியனார்.

"இந்த உந்தி வழி உயிர் விளக்கம் பெறுவதற்குப் புறத்தே புறப்பட்டு ஒலிக்கும் உண்மை தெளியுங் காற்றினது அளவிற்கே யான் மாத்திரை கூறினேன். அவற்றினது மாத்திரையை முயன்று உணர்ந்து தெளிந்து கொள்க" எனுங் கருத்தினை ஆசிரியர் தொல்காப்பியனார் எழுத்திலக்கணம் இன்னதெனக்கூறி நமக்கு விளக்கம் செய்கின்றார். அந்த இலக்கணம் உணரும் வழியினை உயிர்க் கிழவனது முயற்சியின் வழியிலே உள்ளம் திறம்பட ஆராய்ந்து உண்மை உணருமாறு அறிவுறுத்துகின்றார் ஆசிரியர் தொல்காப்பியனார்.

அம்முயற்சியுடன் ஆசிரியர் தொல்காப்பியனார் அருளிய பிறப்பியலை நாம் நன்கு ஆராய்தல் வேண்டும். பிறப்பியலே தொல்காப்பிய நூலின் மெய்ப் பொருள் காணுமிடம். இங்கே முதலில் ஆசிரியர் தொல்காப்பியனார் உள்ளத்துள் நுழைந்து பார்ப்போம். ஆசிரியர் தொல்காப்பியனார் நம்மை ஓர் இன்ப அன்பு வாழ்வின் பூம் பொழிலுக்கு இழுத்துச் செல்லுகின்றார். அவ்வழியே அவர் அருளிய எழுத்துக்களின் பிறப்பியல்.

6

தொல்-பிறப்பியல்

"உந்தி முதலா முந்துவளி தோன்றித்
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலை இப்
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்
உறுப்புற் றமைய நெறிப்பட நாடி
எல்லா எழுத்தும் சொல்லுங் காலைப்
பிறப்பின் ஆக்கம் வேறுவே றியல
திறப்படத் தெரியுங் காட்சி யான"

(செய்யுள் க.)

இதன் பொருள்:—"எல்லா எழுத்தும் பிறப்பின் ஆக்கஞ் சொல்லுங்காலை—தமிழ் எழுத்து எல்லாவற்றிற்கும் ஆசிரியன் கூறிய பிறப்பினது தோற்றரவை (வரலாற்றினை) யாங் கூறுமிடத்து.

உந்தி முதலாத் தோன்றி முந்துவளி-கொப்பூழ் அடியாகத் தோன்றி முந்துகின்ற உதானன் என்னும் காற்று.

தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇ-தலையின் கண்ணும்; மிடற்றின் கண்ணும்; நெஞ்சின் கண்ணும் நிலை பெற்று.

பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான் உறுப்புற்று-பல்லும், இதழும், நாவும், மூக்கும், அண்ணமும் என்ற ஐந்துடனே அக் காற்று, நின்ற தலையும்

மிடறும், நெஞ்சுங்கூட எட்டாகிய முறைமையை உடைய தன்மையோடு கூடிய உறுப்புக்களோடு ஒன்றுற்று (ஒன்றுபட்டு).

அமைய-இங்ஙனம் அமைதலானே.

வேறு வேறு இயல-அவ் எழுத்துக்களது தோற்றரவு (வரலாறு) வேறு வேறு புலப்பட வழங்குதலை உடைய.

காட்சியான நாடி நெறிப்பட-அதனை அறிவான் ஆராய்ந்து அவற்றின் வழியிலே மனம்பட;

திறம்படத் தெரியும்-அப் பிறப்பு வேறுபாடுகள் எல்லாம் கூறுபட விளங்கும்; என்றவாறு—நச்சினார்க்கினியர் உரை.

ஆசிரியர் தொல்காப்பியனார் அருளிய இச் செய்யுளின் சொற்களை, தனித் தனி எடுத்தெழுதி விளக்கினல் படிப்பவர்களுக்கு எளிதில் பொருள் விளங்குமென்று கருதுகிறேன்.

உந்தி-கொப்பூழ்; நடு; வயிறு; நீர்ச்சுழி; ஆறு; நீர்; கடல்; ஆற்றின் நடு; மகளிர் விளையாட்டுவகை; யாழுறுப்பு; உயர்ச்சி என நூல்களிற் பல பொருள் பட நிற்கின்றன.

உந்தி-உயிர் முயற்சியால் உந்தல்; தெறித்தல்: உயிர்க்காற்று எழுமிடம்; உயிர் தங்குமிடம்: உயிர்ப்பு எழுமிடம்; உயிரின் முயற்சி எழுமிடமென்றுங் கூறலாம்:

உந்தி-அன்பு ஊன்றெழும் இடம்; அன்பு ஊற்றெழும் வழி; இன்பம் உறைவிடம் எனவும் பொருள் உரைக்கலாம்.

உந்தி—உந்துதல்; உந்தி—உன் தீ-உள் தீ—உன்னுள்ளே இருக்குந்தீ என இவ்வாறு 'உந்தி' என்ற சொல்லுக்குப் பல பொருள் உரைப்பர் மெய்யறிவு சான்ற மூதறிவாளர்; மறைமொழி புகன்ற நிறைமொழிமாந்தர்.

உடம்பு தோன்றியது முதல் உந்தியுள்ளிருந்து உயிரினை இயக்கி வரும் காற்று, உடம்பினை விட்டகன்றதும் உடம்பினைப் பிணமென உலகோர் ஒதுக்கித் தள்ளி விடுவர். இதுபற்றி ஆசிரியர் திருவள்ளுவர்:

"குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு"

என்றனர்.

கருவுந் தானும் ஒன்றாய்ப்பிறந்து வேறாகும்வரை அதற்கு ஆதாரமாய் நின்றது உயிர். உடம்பிற்கும் உயிர்க்கும் உள்ள நட்பு இவ்வாறுளது. ஐயோ! உயிரே! உனது நிலைமை பெரிதும் இரங்கத்தக்கது! உனக்கு நிலைத்த ஒரு இடம் இல்லை போலும்! என்பது மேற் கண்ட குறளின் கருத்து.

"உடம்பா ரழியின் உயிரா ரழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கு முபாய மறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"

என்றனர்—திருமூலர்.

மூதலா—முதலாக.

முந்து-முற்பட்டு; முந்துகின்ற; முந்தி எழுகின்ற; முன்னால் எழுகின்ற; முன்னால் ஓடுகின்ற என்றுங் கூறலாம்.

வளி-காற்று; உள் காற்று; உள்வளி; உள்ளிருந்தெழுங் காற்று; ஆவி; உயிர்; உயிர்த்திறம்; உயிர்க் காற்று.

'நிலந்தீ நீர்வளி விசும் போடைந்தும்
கலந்த மயக்கம் உலகம்'

—தொல்-மரபியல் 90.

தோன்றி-பிறந்து; எழுந்து; மேலெழுந்து; மேலே தோன்றி; உயிர்மேலே தோன்றி.

1. தலையினும்-தலையின் கண்ணும்.
2. மிடற்றினும்—மிடற்றின் கண்ணும்; கண்டத்திலும்-கண்டத்தின் கண்ணும்; தொண்டையின் கண்ணும் எனவும் பொருள் கொள்ளலாம்.
3. நெஞ்சினும்-நெஞ்சின் கண்ணும்; மார்பினும்-மார்பின் கண்ணும் எனவுங் கூட்டி உரைக்கலாம்.

நிலைஇ-நிலைத்து; நிலைத்து நின்று; நிலைபெற்று; மூன்றிடங்களிலும் நிலையாக நின்று; நிலையிற்றிரியாது இடமாக நின்று; அசைவற்று நின்று எனவும் பொருள் உரைக்கலாம்.

1. பல்லும்—பல்லும்.
2. இதழும்—உதடும்.
3. நாவும்—நாக்கும்.

4. மூக்கும்—மூக்கும்.
5. அண்ணமும்—மேல் வாயும்.

உளப்பட—ஆக ஐந்தும் உட்பட.

எண்முறை—எட்டுவகை; எட்டு இடங்களில்; மேற் கூறிய எட்டு வகை நிலத்தும்.

நிலையான்—நிலையாக; அசைவின்றி; அவ்வவ் விடங் களில் நிலைத்து நின்று; முறைமையுடன் நின்று; ஒழுங்குடன் நின்று என்றுங்கூறலாம்.

உறுப்புற்று—உறுப்புக்களோடு ஒன்றுற்று; இசைத்து, ஒலித்து, பிறந்து, குவிந்து, உற, ஒற்ற, சேர, தடவ, வருட, ஒற்றவும் வருடவும், கூட, இயைய, அடைய, செறிய, யாப்புற எனவும் நீட்டிப் பொருள் கொள்ளலாம்.

அமைய—நிறைய; உண்டாக; பொருந்த; சிறக்க; அமைதலானே; அமைதியாகப் பொருந்திய அளவினுனே.

நெறிப்பட—வழிப்பட; முறைப்பட; முறையாக; ஒழுங்குபட; நெறியுடன்.

நாடி—ஆராய்ந்து; துணிவுடன் ஆராய்ந்து; குற்றமற ஆராய்ந்து; வழுவற ஆராய்ந்து; உள்ளம்ஊன்றி ஆழ்ந்து ஆராய்ந்து உணர்ந்து எனவுங் கூறலாம்.

எல்லா—எல்லா; எல்லாம்; அனைத்துமெனலாம்.

எழுத்தும்—எழுத்திற்கும்; தமிழ் எழுத்திற்கும்; தனித் தமிழ் எழுத்திற்கும்;

"எழுத் தெனப்படுப அகர முதல்
னகர இறுவாய் முப்பஃ தென்ப"
—தொல்—நூன். மரபு-க.

(உயிர் பன்னிரண்டு; உடம்பு பதினெட்டு ஆக முப்பது.)

"குற்றிய லிகரம், குற்றிய லுகரம், ஆய்தம் என்ற முப்பாற் புள்ளியும் எழுத்தோரன்ன"—தொல்—நூன் மரபு உ. குற்றியல் இகரம், குற்றியல் உகரம், ஆய்தம் (ஃ) என்ற மூன்றுடன் ஆக எழுத்துக்கள் முப்பத்து மூன்று எனவும் கூட்டி உரைக்க.

சொல்லுங்காலை—கூறுமிடத்து; நுண்ணுணர்வான் ஆராயுமிடத்து; ஆராய்ந்து உரைக்குமிடத்து; ஆசிரியர் சொல்லுமிடத்து; முந்து நூலாசிரியர் கூறுமிடத்து என்றுங் கூறலாம்.

பிறப்பின்—பிறப்பு; பிறப்பினது; பிறப்பினது இயல்பினை; உந்தியினின்றெழுந்த ஒலி பிறக்கும் வகையினை; பிறப்பின் முறையினை; ஒலி தோன்று மியல்பினை; பிறப்பின் வகையினை என்றும் உரைக்கலாம்.

ஆக்கம்—உண்டாக்குதல்; தோற்றுவித்தல்; எழுப்புதல்; பெருக்கம்; உயர்வு; மேலெய்தல்; வழி காணல்; இயற்கையாகவே வளர்தல்; தானே வழி காட்டல் எனவும் உரைக்கலாம்.

வேறு—வேறு

வேறியல—வேறாகும்; வேறு பாடாகும்; வேறுபாடு பலவாகவுஞ் சிறியவாகவும் உடையன எனவும் கூறலாம்.

திறப்பட—திறம்பட; கூறுபட; விளக்கமாக; தெளிவாக.

தெரியும்—ஆராய்ந்தறியும் அறிவான் விளங்கும்; நுண்ணுணர்வான் விளங்கும்; புலனாகும்.

காட்சி—காண்டல்.

காட்சியான—கண்ணுறலான்; அறிவுக் கண்ணாற் காணலான்; மெய்யறிவான் ஆராய்ந்து காணல்; நுண்ணுணர்வான் ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்பது ஆசிரியர் தொல்காப்பியனாரின் கருத்தாம் என்க.

இதன் திரண்ட பொருள் :—

தனித் தமிழ் எழுத்து உயிர் பன்னிரண்டு, உடம்பு பதினெட்டு, சார்பெழுத்துக்கள் மூன்று ஆக முப்பத்து மூன்று என்று கூறப்பெற்ற எல்லாவற்றிற்கும் பண்டைத் தனித் தமிழ் ஆசிரியர் பலர் கூறிய பிறப்பினது தோற்ற வரலாற்றினை யான் ஆழ்ந்து ஆராய்ந்து தெளிந்து கூறுமிடத்து : கொப்பூழ் அடியாக எழுந்து முந்தி ஓடுகின்ற காற்று என்னும் உயிர் தலையின் கண்ணும், மிடற்றின் கண்ணும், நெஞ்சின் கண்ணும் நிலைபெற்று நின்று; பல்லும், இதழும், நாவும், மூக்கும், அண்ணமும் என்ற ஐந்துடனே அந்த உயிர் நின்ற தலையும்,

மிடறும், நெஞ்சுங்கூட எட்டாகிய முறைமையை உடைய தன்மையோடு கூடிய அந்த உறுப்புக்களுடன் ஒன்று பட்டு; இவ்வாறு அமைதியாகப் பொருந்திய அளவொடு நிறைய, அந்த எழுத்துக்களின் பிறப்பின் வரலாறு வேறு வேறு விளங்கித் தோன்ற இயங்குதலையுடைய அவற்றினை மெய்யறிவான் ஆராய்ந்து துணிவுடன், அந்த எழுத்துக்களின் பிறப்பின் வழியிலே உள்ளம் ஒன்றி ஊன்றி அழுந்தி அறிய அந்தப் பிறப்பு வேறுபாடுகள் அனைத்தும் கூறுபட—விளக்கமாக-விளங்கும் என்பதாம்.

7

எழுத்துக்களின் பிறப்புக்குப் புறனடை

முன்னர் எழுதியவற்றில் 'எழுத்துக்கள் பொது வாகப் பிறக்கும்' இயல்பினைப் பற்றிக் கூறப் பெற்றது. இங்கு 'எழுத்துக்களின் பிறப்புக்குப் புறனடை'யாகவுள்ள கீழ்வரும் நூற்பாவின் பொருள் இயன்றவாறு விளக்கப்படும்.

"எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி எழுதரு வளியின்
பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்
தகத்தெழு வளியிசை அரில்தப நாடி
அளபிற் கோடல் அந்தனர் மறைத்தே
அஃதிவண் நுவலா தெழுந்துபுறத் திசைக்கும்
மெய் தெரி வளியிசை அளவுநுவன் றிசினே"

—தொல்—பிறப்பியல்—20

இதன் பொருள்: எல்லா எழுத்தும் கிளந்து வெளிப்பட—ஆசிரியன் எல்லா எழுத்துக்களும் பிறக்குமாறு முந்து நூற்கண்ணே கூறி வெளிப் படுக்கையினாலே, சொல்லிய பள்ளி பிறப்பொடு விடு வழி-யானும் அவ்வாறே கூறிய எண்வகை நிலத்தும் பிறக்கின்ற பிறப்போடே அவ் எழுத்துக்களைக் கூறுமிடத்து, எழுதரு வளியின் உறழ்ச்சி வாரத் தின் அளபு கோடல்-யான் கூறியவாறு அன்றி

உந்தியில் தோன்றும் காற்றினது திரிதருங் கூற்றின் கண்ணே மாத்திரை கூட்டிக் கோடலும், அகத்து எழு வளியிசை அரில் தப நாடிக் கோடல்-மூலாதாரத்தில் எழுகின்ற காற்றின் ஓசையைக் குற்றம் அற நாடிக் கோடலும், அந்தணர் மறைத்தே—பார்ப்பாரது வேதத்து உளதே அங்ஙிலைமை ஆண்டு உணர்க. அஃது இவண் நுவலாது-அங்ஙனம் கோடலை ஈண்டுக் கூறல் ஆகாமையின் இந்நூற்கட் கூறுதே, எழுந்து புறத்து இசைக்கும்-உந்தியில் தோன்றிப் புறத்தே புறப்பட்டு ஒலிக்கும், மெய்தெரி வளியிசை அளவு நுவன்றிசினே-பொருள் தெரியுங் காற்றினது துணிவிற்கே யான் மாத்திரை கூறினேன். அவற்றினது மாத்திரையை உணர்க; என்றவாறு. இது நச்சினார்க்கினியர் உரை.

ஆசிரியர் நச்சினார்க்கினியரின் உரைப்போக்கின்படியே விளக்க உரை உரைக்கப்படுகிறது.

எல்லா எழுத்தும் கிளந்து வெளிப்பட

எல் ஆ-எல்லா. எல்லா-எல்லா; எழுத்தும் ஆசிரியர் கூறும் தனித் தமிழ் எழுத்துக்கள் அனைத்தும். கிளந்து-'பிறக்குமாறு முந்து நூற்கண்ணே கூறி' (நச்). கிளந்து-கூறி; கிளந்த: முன்னர் எடுத்து ஓதப்பட்டன. கிளந்த: வெளிப்படையாக. கிளந்த: சொல்லப்பட்டன. கிளர்தல்-தோன்றுதல் இவ்வாறு, 'கிளந்த' என்ற சொல்லுக்குப் பழைய தமிழ் நூல்களில் பல பொருள் தருகின்றன. கிளந்து சொல்லல்: அவ்வப்பொருளைப் பெயர்

கூறிச் சொல்லுதல். இளத்தல்: ஒன்றைத் தெளி வாய்க் குறிப்பிட்டுச் சொல்லுதல். வெளிப்பட- 'வெளிப் படுக்கையினுலே' (நச்). வெளிப்பட-வெளிப் படையாக; மறைவின்றித் தெளிவாக எனவும் பொருள் கூறலாம்.

சொல்லிய பள்ளி பிறப்பொடு விடுவழி

சொல்லிய—கூறிய; யானும் அவ்வாறே கூறிய (நச்). சொல்லுதல்: இயல்பாக ஒன்றைச் சொல்லு தல். பள்ளி-'எண்வகை நிலத்து' (நச்). பள்ளி-ஒலி உறைவிடம்; உயிரொலி உறைவிடம்; எழுத்தொலி உறைவிடம்; எழுத்துக்கள் பிறக்கும் எண்வகை நிலம்; எட்டு இடம்: ஒலிபிறக்குமிடம்.

'பள்ளி என்பது, முதலாவது படுக்கையை உணர்த்தும் சொல். 'பள்ளிகொள்ளுதல்', 'பள்ளி கொண்டான்' 'பள்ளியெழுச்சி' முதலிய வழக்குகளை நோக்குக. பள்ளி என்பது, கீழிடத்தை அல்லது தாழிடத்தை உணர்த்தும் பள் என்னும் வேரினின்று பிரிந்ததாகும். பள்+அம்-பள்ளம். பள்-படு. படுத்தல் கீழே கிடத்தல்.

—ஞா. தேவநேயனர்.

பிறப்பொடு—'எண்வகை நிலத்தும் பிறக்கின்ற பிறப்போடே' (நச்). பிறப்பொடு - பிறக்கின்ற பிறப்பினெடு, பிறப்பொடு விடுவழி - பிறப்பினெடு சார்த்திக் கூறுமிடத்து. விடுவழி—'அவ் எழுத்துக் களைக் கூறுமிடத்து; இணைத்துக் கூறுமிடத்து; ஒப்பிட்டுக் கூறுமிடத்து; விரித்துக் கூறுமிடத்து;

வெளிப்படையாகக் கூறுமிடத்து எனவும் கூறலாம். விடு-விடுத்தல்; நீக்கல்; வெளிப்படையாகக் கூறுது விடுத்தல் எனவும் பொருள் தருகின்றன. வழி-இடம்; வழி: வழிப்படுத்தல்; நேர்படுத்தல் என்றுங் கூறலாம். வழி-இடம்; ஏவல்; சினை; சுற்றம்; நெறிமுறை எனவும் பல பொருள் தருகின்றன.

ஆசிரியர் தொல்காப்பியனார் 'வழி' என்ற சொல்லினை 'இடம்' என்ற பொருளில் பல செட்யுட்களில் எடுத்தாண்டிருக்கின்றார். இக்கால வழக்கில் இவைபோன்ற இன்னும் பல சொற்கள் வழக்கு மாறுபட்டு இக்கால உரை நடையிலும் பாட்டுக்களிலும் வழங்கி வருகின்றனவென்று தோன்றுகிறது. அக்கால வழக்குப்படி ஆசிரியர் தொல்காப்பியனார் அருளிய பல சொற்கள் இக்கால வழக்கிலில்லை. அச்சொற்களுக்கு இச்காலத்துக்கேற்ற பொருளுரைத்தல் பெரிதும் இடர்ப்பாடுகள் நிகழ்கின்றன. பேரறிவும் பேராற்றலும் வாய்ந்த நுண்ணறிவுடையார் ஆராய்ந்து தொல்காப்பியச் சொற்களுக்குப் புத்துரை கண்டு பொருள் கூறல் ஆசிரியர் தொல்காப்பியனாரின் கருத்துக்களை விளக்கமாக அறிதற்கு உதவி யளிக்கும் என்பது பலரது அவா.

எழுதரு வளியின் உறழ்ச்சிவாரத்தின்

எழுதரு—'யான் கூறியவாறு அன்றி உந்தியில் தோன்றும்' (நச்.) எழுதரு-உந்தியிற்றோன்றுகின்ற எழு: எழுச்சி; எழுதல். தரு: தருகின்ற. எழுதரு-எழுச்சி தருகின்ற, உந்தியினின் றெழுகின்ற; எண்

வகை நிலத்து நின்றெழுகின்ற; எட்டுவகை யிடத் துப் பிறக்கின்ற எனவும் பொருள் சொல்லலாம், வளியின்-காற்றினது; உயிரின்: உயிரினது; ஒலி யின்: ஒலியினது எனவும் உரைக்கலாம். உறழ்ச்சி வாரத்தின்-'திரிதருங் கூற்றின் கண்ணே மாத்திரை கூட்டிக்கோடலும்' (நச்). உறழ்ச்சிவாரத்து-'திரி வுறுகின்ற பகுதியில்'-இளவழகனார். உறழ்-பெருக் கம். உறழ்ச்சி-மாறுபாடு; திரிதல். திரிபு: திரிதல். திரி: திரிகை; திரிபினை; தரு: தருகின்ற; தருதல். திரிவினைத் தருகின்ற.

உறழ்ச்சிவாரத்து—என்ற சொற்களுக்கு: 'திரி தரு கூற்றின் கண்ணே' என்கின்றார் நச்சினார்க் கினியர்; 'திரிவுறுகின்ற பகுதியில்' என்றனர். இளவழகனார். உறழ்ச்சி-திரிபினைத்தருகின்ற; உறழ்ச்சி-மாறுபாடு; திரிபினைத் தருதல்.

வாரத்து-என்பதற்கு: நுண்மை இசைப்பு; நுண்ணொலி இசைப்பு என்றும் நுண்பொருள் கொள்ளலாம்.

'உந்தியில் எழுந்த காற்று முன்னர்த் தலைக்கட் சென்று, பின்னர் மிடற்றிலே வந்து, பின்னர் நெஞ் சிலே வந்து நிற்றலை உறழ்ச்சி வாரத்து' என்றார்.- இது நச்சினார்க்கினியர் குறிப்பு.

வார்தல், போகல், ஒழுகல் என்னும் மூன்று சொல்லும் நேர்மையும் நெடுமையுமாகிய பண் புணர்த்தும். தொல்: சொல்: உரி: உக: உரை.

உறழ்ச்சி வாரத்து—உந்தியில் தோன்றும் திரி பினைத்தரும் காற்றினது மாறுபாடு; திரிவுறுதல்.

வாரத்து—முறைமையை; வரிசையை எனும் பொருள் தருகின்றன. ஆழ்ந்து ஆராய்ந்து தெளிதற்குரியன.

அகத்து எழு வளியிசை அரில் தப நாடிக் கோடல்

அகத்தெழு—உள்ளிருந்தெழுகின்ற; உந்தியிலிருந்தெழுகின்ற; மூலாதாரத்திலிருந்தெழுகின்ற; உந்தியிற் பிறக்கின்ற எனவும் பொருள் கூறலாம். அகத்து—உள்ளிருந்து, எழு—எழுகின்ற வளியிசை-காற்றின் ஓசையை; உயிரின் இசையை, உயிரின் ஒலியை எனவும் சொல்லலாம். அரில்தப—குற்றம் அற; மாறுபாடு கெட. அரில்: பொருள்கள் ஒழுங்கின்றி மயங்கிக் கிடக்கும் குற்றம். நாடி—ஆராய்ந்து; நுண்ணுணர்வான் ஆழ்ந்து ஆராய்ந்து. அளபின்-மாத்திரை; ஏற்ற மாத்திரையோடு. கோடல்-நாடிக் கோடலும்; கூட்டிக் கொள்ளலும்

அந்தணர் மறைத்தே

அந்தணர் மறைத்தே—'பார்ப்பாரது வேதத்து உளதே அந் நிலைமை ஆண்டு உணர்க' (நச்). அந்-தணர்-' அழகிய தட்பமுடையார்; நல்லருளுடையார்; (அம்-தண்மை-அர்) 'அந்தணர் அறவோர். அந்-தணர் என்னுஞ் சொல்லே அருளாளர் என்னும் பொருளுடையது. அந்தணரும் அருளாளர்; அறவோரும் அருளாளர். அந்தணர் யார்? அறவோர். யார்? இருவரும் ஒருவரே. இது பற்றியே, 'அந்தணர் என்போர் அறவோர்' என்றார்.

திருவள்ளுவர் காலத்தில் எவ்வுயிர்க்குஞ் செந் தண்மை பூண்டொழுகுவோரே அந்தண ரென்றும் அறவோரென்றும் போற்றப்பட்டனர்....பின்னளில் இவ்விரண்டு சொல்லுக்கும் பொருள் வெவ்வேறு வழியில் திரிக்கப்பட்டது. காரணம் பல வகுப்பு, பல மதம் முதலியன தமிழுலகில் புகுந்தமையே யாகும்.

பொருள் படிப்படியே மாறுபட்டமை நோக்கற் பாலது.

அந்தணர்: எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண் டொழுகுவோர்—திருவள்ளுவர்.

'அந்தணர் என்பது, அஃது அவ்வருளுடையார் மேலன்றிச் செல்லாதென்பது கருத்து'-பரிமேலழகர்.

'அந்தத்தை அணவுவார் அந்தணர் என்றது, வேதாந்தத்தையே பொருளென்று மேற்கொண்டு பார்ப்பாரென்றவாறு'—(கலித்தொகை: கடவுள் வாழ்த்து: 1: உரை; திருமுருகாற்றுப்படை: 96: உரை; 'அந்தணர்-வேதாந்தத்தை எக்காலமும் பார்ப்பார்'-மதுரைக் காஞ்சி: 474: உரை)-நச் சினர்க்கினியர்.

'அந்தண்மை பூண்ட அருமறை அந்தத்துச்—
சிந்தை செய் யந்தணர்'

—திருமூலர் அந்தணர் ஒழுக்கம்.

'அந்தணரென்போர் அறவோர்'

—திருவள்ளுவர்.

'அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்-துறவோர்க் கெதிர்த்தலும்........'—சிலப்பதிகாரம்:

'அறம் புரி நெஞ்சின் அறவோர் பல்கிய'; அடைக்கலக்காதை : 115; கொலைக்களக்காதை : 71-72 ('அறவோர்-துறவாது விரதங் காத்தார்'—பழைய குறிப்புரை; 'அறவோர்-சாவக நோன்பிகள்'-அடியார்க்கு நல்லார்).—திருக்குறள், பாயிரம் விருத்தி : பக்கம் : 327-328 :

—திரு. வி. கலியாணசுந்தரனார்.

அந்தணர்-'அழகிய குளிர்ந்த அருளையுடைய முனிவர், இச் சொல் இடையிற் திரிந்து அந்தணர் போல்வாரையும், அடியாரையும், பூசாரிகளையும் படிப்படியாய்க் குறித்து இன்று ஒரு குலத்தாரையும் குறிக்கின்றது.' —ஞா. தேவநேயனார்.

மறைத்தே - மறையினிடத்து. மறை - மறை பொருள். (இரகசியம்); வேதம்.

'மறைந்த பொருளுடையது மறை. வேதம் மறைவா யிருத்தலான், அது மறை என்று வழங்கப் படுகிறது.' —திரு. வி. க.

மறை நூல் :

'புறநோக்கர்க்கு மறைந்து-அக நோக்கர்க்குப பொருளாகி, ஒலியாய், எழுத்தாய், சொல்லாய், கலையாய் உருக்கொள்வது மறை. புற நோக்கர்க்குப் பொருளாகும் நாதம் பிரகிருதி சம்பந்தம் பெற்ற தொன்றாகலின், அதன் வழி எழும் ஒலியால் எழுத்தால்-சொல்லால் ஆக்கப் பெறும் நூல் மறை யாகாது' —திரு. வி. க.

வேதம் :

'மறையை வேதம் என்பதென்னே? வேதம் 'வித்' என்னும் தாதுவை யுடையது. வித்-அறிவு. அறிவு, மெய் பொய் என்னும் இருவகைத்து. மெய் யறிவு அலையற்ற அக மனத்தில் பொலிவது. அலையும் புறமனத்தில் மெய்யறிவு பொலியாது. புற மனத்தில் தோன்றுவது பொய்யறிவு, மறைபொருள் மெய்யறிவுடைய அகமனத்தர் வாயிலாக வெளிவரு தலால் அது வேதமாகிறது. வேதமாவது (மறை) அறிவு உறையுள்'

—திரு. வி. க.

மந்திரம் :

'மறை, மறைந்து நின்ற சான்ரோர் மனத்தில் விளங்கப் பெற்று அவர் வழி மொழியா யிறங்குவது. அது புலனடங்கிய மனத்தில் நின்று வெளிவருத லால் மந்திரமெனப்படும்'

—திரு. வி. க.

'ஆணையாற் கிளக்கப்பட்டுப் புறத்தார்க்குப் புலனாகாமல் மறைத்துச் சொல்லுஞ் சொற்றொட ரெல்லாம் மந்திர மெனப்படும்' என்பது பேரா சிரியம் : (தொல்-பொருள்-490 உரை).

'(மந்திரம்-மனம்-எண்ணம்) மந்திரம் எழுத் தற்றது ; உபதேசப் பொருளாக நிலவுவது ; தெளி வுடைய குருவினல் அறிவுறுத்தப் பெறும் பெருமை வாய்ந்தது. எல்லா மொழிகட்கும் வித்தாயிருப்பது'

—திரு. வி. க.

"மறை மொழியைப் பயிலப் பயில, அதன் கண் கருத்து ஊன்ற ஊன்ற அறத்தில் நாட்டஞ் செல்லும். பிறமொழி அந் நாட்டத்தை நல்குவதில்லை. மறை மொழியல்லாத பிற, பேராசையைக் கிளப்பிப் போராட்டத்திற் செலுத்தும். இவ்வேற்றுமை மறை மொழி இன்னதென்று விளங்கச் செய்யும்.

'நிறைமொழி மாந்தராணையிற் கிளக்கும் மறை மொழிதானே மந்திர மென்ப'- இத்தொல்காப்பியச் சூத்திரமே 'நிறை மொழி மாந்தர் பெருமை நிலத்து மறை மொழி காட்டி விடும்' இக்குறளுக்குத் தாயகம் என்று கூறலாம். இதற்குப் பேராசிரியர் கண்ட உரை முன்னே காட்டப்பட்டது."

—திருக்குறள் : பாயிரம்: விருத்தி : திரு. வி. க.

அஃது இவண் நுவலாது

அஃது இவண்—அஃது ஈண்டு. நுவலாது-கூற லாகாமையின்; இந்நூற்கட் கூறுதே. நுவலுதல்-ஒன்றைச் சொல்லித் தொடங்குதல்; நூலைக் கற் பித்தல் எனவுஞ் சொல்லலாம்.

எழுந்து புறத்து-உந்தியிற் றோன்றிப் புறத்தே புலப்பட்டு இசைக்கும்-ஒலிக்கும்.

மெய்தெரி-பொருள் தெரியும்; ஆராய்ந்து பொருண்மை தெரிகின்ற. வளியிசை-உயிர்க் காற் றினது துணிவிற்கே, அளவு-எல்லை; தன்மை; மாத் திரை. நுவன்றிசின-கூறினேன்; அவற்றினது மாத்திரையை உணர்க; என்றவாறு.

இதன் திரண்ட பொருள்:

உயர் தனிச் செம்மை நலம் வாய்ந்த செந்தமிழ்ச் சான்ருேரும், நல்ல அறிவினது ஆராய்ச்சியின் வைத்து வல்லிதிற் கூறி வகுத்துரைத்த உயர் மொழிப் புலவரும், நுண்ணறிவுடைய நன்மதி நாட்டத்தினரும் நுவன்றறைந்த உயிரெழுத் தொலி பற்றித் தனித் தமிழ் ஆசிரியர்கள் எல்லா எழுத்துக் களும் பிறக்கும் முறையினைப் பலவாறு பண்டைச் செந்தமிழ் நூற்கண்ணே முறையோடு வெளிப்படை யாகத் தெளிவுடன் கூறியுள்ளனர்.

ஆகலான் யானும் அவ்வாறே முன்னோர் சென்ற வழியினைப் பின்பற்றி அவர்கள் கூறிய வாறே எட்டுவகை இடத்தும் உயிரொலி பிறக்கின்ற பிறப்பினெடு அவ் எழுத்துக்களைக் கூறுமிடத்து, யான் கூறியவாறு அன்றி, உந்தியில் எழுகின்ற திரியினைத் தருகின்ற உயிரினது நுண்ணெலியின் மாத்திரை கூட்டிக்கோடலும், உந்தியிற் பிறக்கின்ற உயிரொலியின் நுண்ணியல்பினை வழுவற ஆராய்ந்து கொள்ளலும், அழகிய குளிர்ந்த அருளினை யுடைய முனிவர்கள் அருளிய மறையிடத்துளது. அந்நிலைமை நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி உண்மைப் பொருளினை—அம் மறையில் விரிந்த முறையில் ஆண்டு ஆழ்ந்து ஆராய்ந்து அறிந்து உணர்க.

அக உணர்வு மிக்குடையார்க்குப் பெரு விருந் தாக நிறைந்து கிடக்கும் அந்த மெய்ப்பொருளின் உண்மை இரகசியங்களை யான் ஈண்டு விரித்துக்கூற

வியலாமையின், இந் நூலின்கண் கூறுது விட்டுவிடு கிறேன். அஃது ஆழ்ந்து உணர்த்தற்குரியது. அஃது இவண் வேண்டுவது மன்று.

இந்நூலின்கண் எழுத்தொலியின் பிறப்பிலக் கணம் மட்டும் கூறுகின்றேன். இங்கு உந்தியில் எழுந்து வெளியே புறப்பட்டு ஒலிக்கும் பொருள் விளங்கும் எழுத்தொலியினது துணிவிற்கே யான் மாத்திரை கூறினேன்; அம் மாத்திரையை நுண் ணுணர்வான் ஆராய்ந்து உணர்ந்து தெளிக எனும் பொருள்பட ஆசிரியர் தொல்காப்பியனுர் அருளிய இந் நூற்பாவின் கருத்தாம் என்க.

8

தொல்காப்பியரும் நச்சினார்க்கினியரும்

வட மொழிக் கலப்பால் தமிழுக்குக் கேடு வந்தது; தமிழ் மக்கள் தம் தாய் மொழியை மறந்தனர்; அதனால் மொழிக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பு அறுந்தது; மக்களுள் பிரிவினை தோன்றியது.

தமிழ் மொழியின் ஒலியும் சொற்களும் திரிந்து வழங்கின; இதனால் தூய இனிய தனித்தமிழ்ச் சொற்கள் வழக்கு ஒழிந்து மறைவுற்றன.

நாட்டின் உண்மை வரலாறுகள் மறைந்தன; மக்கள் உண்மை வரலாறு அறிய வியலாது மலைவுற்றனர்.

தமிழிற் புதுப் புதுச்சொற்கள் ஆக்குதற்குத் தடை நிகழ்ந்தது. தமிழக மக்கள் தாய் மொழியுணர்ச்சியின்மை, கலையுணர்ச்சியின்மை ஆகியவைகளால் தனித் தமிழ் மொழி மறைந்து போயிற்று.

தனித் தமிழ் மொழி மறைவால் தமிழ்ச் சொற்களா அன்றி வடசொற்களா என்ற ஐயப்பாட்டால் மக்கள் இன்று மயக்கம் உறுகின்றனர்.

இடையில் வந்து கலந்த வடமொழியைத் தெய்வ மொழியென இயம்பி தென் மொழியில்-தூய தனித் தமிழில் எண்ணற்ற வேண்டாத வடசொற்களைத்து, தனித் தமிழ் அல்லாதவற்றிற்குநுழை

வட மொழி எழுத்துக்களையும் இலக்கணத்தையும் வகுத்து வலிந்து வரலாற்றினைத் திரித்து மாற்றினர்; தனித் தமிழ் நாகரிகத்தை வட மொழி நாகரிகமாகக் காட்டி, வடமொழியே தமிழின் அன்னை யென்று எண்ணுமாறு ஆக்கிவிட்டனர்.

தமிழரும் பிறரும் வடமொழிக் கலப்பை உயம்வாகவும் தனித் தமிழ்க் கலப்பை இழிவாகவும் நினைந்து, வடமொழித் தொடர்பற்ற தமிழையுர் தமிழரையும் இழிவுரை கூறிப் பழிக்கின்றனர்.

இவ் வரலாற்றின் உண்மைப் பொருள் எவ்வாறு காட்சி யளிக்கிறதெனின்: மூக்கு அறுபட்ட ஒருவன் தன்னைப் போன்று மற்றவரையும் மூக்கை அறுத்துக் கொள்ளத் தூண்டியவாறன்றி வேறென்னை? நிலைமை தவறிய-உண்மையை மறந்த-தன்மான மற்ற மக்களின் இயல்பு இவ்வாறுளது!

தனித் தமிழ் வழக்கு மறைவு

சங்க காலத்து மக்கள் வளர்த்த தனித்தமிழ் வழக்கு மறைந்து பல ஆயிரம் ஆண்டுகள் ஓடி மறைந்துவிட்டன. அதன் அரிய பெரிய தனித் தமிழ்ச் சிறப்பு இயல்புகளான இனிமை, தெளிவு, சுருக்கம், செம்மை ஆகிய தமிழ்ப் பண்புகள் அனைத்தும் பெரும் அளவு உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் இடமற்று அகன்று பல நூற்றாண்டுகள் ஓடி ஒழிந்தன.

இடையிற் தோன்றிய வடமொழிக் கலப்பு தனித் தமிழின் இனிய தூய்மையை முற்றும் அழித்

தது. வடமொழிச் சொற்களும், வடமொழி இலக்கிய மரபுகளும் தூய இனிய தனித் தமிழில் வந்து நுழைந்தன. அஃதுடன் வேண்டுமென்றே பல தீய நீர்மையும் நுழைந்து ஒன்றிக் கலந்தன. சுருக்கம், செம்மை என்ற இரண்டு இயலும் அழிந்து ஒழிந்தன. வெளிப் பகட்டும் வீண் புகழ்ச்சிகளும் தலைமை பெற்று எழுந்தன. வட சொற்கள் பெரும் அளவு கலந்து தனித் தமிழ்ச் சொற்கள் பெரிதும் குறைந்து வரத் தோன்றின. இவ்வாறு தனித் தமிழுக்கு இயற்கையில் அமைந்த ஆற்றல் குறைந்து மறைந்து போயிற்று. நூற்பொருள் பெரும் அளவில் வடமொழி உரிமை உடையனவாய் அமைந்தன. இவ் விளைவால் தனித் தமிழ்ப் புலவர் புதிது புதிதாகச் செய்யுள் இயற்றும் ஆற்றல் அற்றுப் போயிற்று. இந்நிலையினை மாற்றி இக்கால அறிஞர் சிலர் தனித் தமிழ் வளர்ச்சிக்குத்தொண்டாற்றி வருதலால் மக்களிடைச் சிறிது விழிப்பேற்பட்டுளது.

தனித்தமிழின் இழிநிலை குறித்து வருந்தினர்

அக் காலத்து வாழ்ந்த நல்லறிஞர் சிலர் தனித் தமிழின் இழிநிலை குறித்து வருந்தினர். ஆழ்ந்து சிந்தித்தனர். தனித் தமிழின் பண்டைப் பண்பினை நினைந்து நினைந்து அந்நிலைமையை மீண்டும் அடைதல் இயலுமோ என்று எண்ணினர். பழந் தமிழர் சங்கம் நிறுவி வளர்த்த தமிழின் மீதும், அதன் நல்லியல்பினைப் பின்பற்றிய பண்டைத் தனித்தமிழ் நூல்களின் மீதும் தென் தமிழ் மக்கள் பற்றுக் கொண்டு கற்கச் செய்தல் வேண்டுமென்று எண்ணினர். இந்த

எண்ணங்களை அடிப்படையாக வைத்து அறிவிற் தலைசிறந்த பேரறிஞர் சிலர் உழைப்பினை நல்கினர்.

மறைவுற்ற கழகத் தமிழ் எழுச்சி இயக்கம் எனத் தம் உளத்திற்கொண்டு அந்நிலைவின் பயனாக சங்க இலக்கியங்களான தனித் தமிழ் நூல்களுக்கும், அதனைத் தழுவிய தலைமை சான்ற பெருமையினை யுடைய திருக்குறள் ஆகிய தனிப் பெருமாண் புடைய நூல்களுக்கும் முன்னோர் நூன் முறை தழுவி உரைகள் செய்தனர்.

இவ்வாறு தனித் தமிழ் எழுச்சி இயக்கத்தினைத் தோற்றுவித்தோருள் உரையாசிரியர்-இளம்பூரண அடிகள், சேனாவரையர், பேராசிரியர், பரிமேலழகர், நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்களை நினைவிலிறுத்திக்கொள்ளல் வேண்டும். இவர்கள் கண்ட உரைகள் யாவும் எக்காலத்திற்கும் உரியன என்று அறிவிற் கடைப்பட்ட சிறியேன் வழக்கிட எண்ணவில்லை; குறை கூறலும் எனது கருத்தன்று. இவர்கள் கண்ட உரைகளில் பல குறைபாடுகள் உளவெனினும், அப்பெருந்தகைப் பேரறிஞர்கள் செய்த உதவி,

> "பயன்றூக்கார் செய்த உதவி நயன்றூக்கின்
> நன்மை கடலிற் பெரிது.
>
> செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
> வானகமு மாற்ற லரிது.
>
> காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
> ஞாலத்தின் மாணப் பெரிது.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
செய்நன்றி கொன்ற மகற்கு.'' [உய்வில்லை

என்று ஆசிரியர் திருவள்ளுவனாரின் திருமொழியினை அடிப்படையாக வைத்து நாம் மறவாது போற்றுதல் வேண்டும். இக்கிளர்ச்சிகள் ஏறக்குறைய பதினான்கு-பதினைந்தாம் நூற்றாண்டுகளில் முறுகி எழுந்தனவென்று எண்ண இடந்தருகின்றது. இவ்வுரையாசிரியருள் இறுதியாகக் குறிக்கத் தக்கவர் பரிமேலழகரும், நச்சினார்க்கினியரும் ஆவர்.

நச்சினார்க்கினியர் உரை

தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய உரையாசிரியர் பலர், தம் தம் கால நிலைக் கேற்ற அளவில் அவர்கள் அவ்வுரையை எழுதிச் சென்றனர். அவருள் ஆசிரியர் நச்சினார்க்கினியர் இறுதி உரையாசிரியர்.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் முதன் முதல்உரை எழுதிய நூல் தொல்காப்பியம். இதன் கீழ்வரும் உரைகள் இதற்குச் சான்று பகர்கின்றன. அவை வருமாறு:—

"தொல்காப்பியத்திற்கு முதலில் இவர் உரை இயற்றினாரென்று தெரிகிறது."

"உரையாசிரியர் இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், ஆளவந்த பிள்ளையாசிரியர் முதலிய உரையாசிரியர்கள் இவருடைய உரையில் எடுத்துக் கூறப்பட்டிருத்தலின் அவர்களுக்கும், திருமுருகாற்றுப்படை யுரையில் பரிமேலழகர் கொள்கையை

மறுத்திருத்தலின் அவருக்கும் இவர் பிற்காலத்தவர் என்று தெரிகிறது" என்று பத்துப் பாட்டு நச்சினார்க்கினியர் வரலாற்றுக் குறிப்பில் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் கூறுகின்றனர்.

சீவக சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவர் காலம் கிறிஸ்துவுக்குப் பின் 900 அல்லது அதற்குப் பிந்தியதாக இருக்கலாமென அறிஞர் பலர் கருத்து.

திருத்தக்க தேவர், தமது ஆசிரியரிடத்து அறிவு பயின்று சிந்தாமணி இயற்றும் காலத்து அகத்திய மும் தொல்காப்பியமும் இலக்கணமாயிருந்தன வென்று இறையனார் அகப் பொருளுரை முதலிய வற்றானும், சிந்தாமணி கடவுள் வாழ்த்து நச்சினார்க் கினியர் உரையாலும் அறியப்படுகின்றன.

திருத்தக்க தேவர், மதுரையில் அக்காலத்து வாழ்ந்த செந்தமிழ்ப் புலவர் பெருமக்களுடன் இருந்து வாழ்ந்ததாக வரலாற்றுக் குறிப்புக்கள் கூறுகின்றன.

நச்சினார்க்கினியர் வாழ்ந்த காலம், திருக்குற ளுக்கு உரை இயற்றிய பரிமேலழகர் காலத்திற்கும் பிந்தியதாகும். திருக்குறளுக்கு உரைவரைந்த பரி மேலழகர் கிறிஸ்துவுக்குப் பின் பதினான்காம் நூற் றாண்டில் இருந்தவர் என்று தெரிகிறது.

சிந்தாமணிக்கு உரை எழுதிய ஆசிரியர் நச் சினார்க்கினியர் செந்தமிழ்ப் பாண்டியமன்னர்களின் நகரான மதுரையிற் பிறந்து வளர்ந்தவர். தமிழி

லுள்ள பல சுவடி (நூற்)களையும் நன்கு கற்றுத் தெளிந்தவர். ஏறக்குறைய அறுநூறு ஆண்டுகளின் முன்னர் இருந்தவர். இவர் வட மொழியும் நன்கு கற்றறிந்தவர். இவர் காலம் செந்தமிழ்ச் செந் நெறிக்குப் பேரிடர் நிகழ்ந்த காலம், வட மொழி ஆக்கம் பெற்றுத் திகழ்ந்த காலம், இவர் காலம்.

தொல்காப்பிய உரையினின்றும் இவர் சிந்தா மணிக்கு எழுதிய உரையால் இவருக்கு நேர்ந்த எதிர்ப்பும் இதனை நன்கு விளக்குகின்றன.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் முதன்முதல் சிந்தா மணிக்கு ஓர் உரை இயற்றினர். அக்காலத்துச் சிறப் புற்று ஓங்கித் திகழ்ந்த சைனப் புலவர் சிலருக்கு அவ்வுரையினைக் காட்டினர். பல வேறுபாட்டினை யுடைய பிற சமய நெறி முறைகளைப் போன்று சைன சமயக் கொள்கைகள் முறையே அறிந்து வரையப்படாதிருத்தல் கண்டு அஃது ஏற்க இயலா தென எதிர்த்து அவ்வுரையினை மறுத்துவிட்டனர்.

அதன் பின்னர் ஆசிரியர் நச்சினார்க்கினியர், சைன சமய நூல்கள் பலவற்றை ஆழ்ந்தகன்ற அறி வுடையாரிடத்து முறையுடன் கற்றறிந்து, தெளிந்து, வழுவற ஆராய்ந்து இரண்டாம் முறையாகச் சிந்தா மணிக்கு உரை வரைந்து அப்புலவர்களுக்கு அறி வித்தனர்.

அவர்கள் அவ்வுரையினை உற்று நோக்கி மகிழ்ச்சிப் பெருக்குடன் நன்மொழி கூறி அதனை ஏற்றுக்கொண்டனர் என்பது சைன சமயத்தவ

ருள்ளும் பிற சமயத்தவருள்ளும் கேள்வி வழியாக வந்த ஒரு வரலாறு காணப்படுகிறது.

நச்சினார்க்கினியர், தொல்காப்பியத்திற்கு உரை எழுதுமுன் சிந்தாமணிக்கு முதன் முறை உரை இயற்றியதையும், இரண்டாவது பகுதி இவர் அந் நூலுக்கு உரை இயற்றிய பின் அதற்கு இரண்டாம் முறை உரை இயற்றியதையும் ஒருவாறு தொல்காப் பியம்—சிந்தாமணி நூற் பாக்களின் உரைகளி லிருந்து தோன்றுகின்றன.

> அப்பகுதிகள் தொல் செய்-210; 211; 238; சிந்தாமணி 72; 892; 1913; 2690 ஆகியவற் றின் உரைகள் நன்கு அறிவிக்கின்றன.

இங்கு நாம் அறிந்து உணர வேண்டுவது: இதி லிருந்து ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரைக்கு அக் காலத்து வாழ்ந்த புலவர் பெரு மக்களால் பெரும் எதிர்ப்பு இருந்தன வென்பதும், சிந்தாமணிக்கு இயற்றிய உரை போன்று தூய இனிய தனித் தமிழ்க் கொள்கையுடைய தொல்காப்பியம், பத்துப் பாட்டு, கலித்தொகை முதலிய நூல்களுக்கு அவர் எழுதிய உரைகளும் ஆராய்தற்குரியனவென்பதும் 'அந்தணர் மறைத்தே' என்று தொல்காப்பியர் கூறிய கருத்துக்கு மாறாக நச்சினார்க்கினியர், 'பார்ப் பாரது வேதத்தே' என்று பொருள் கூறியிருத்தல் இடைக்கால வழக்கினை யொட்டியே நச்சினார்க் கினியர் உரை கூறியிருக்கின்றனர் என்பதும், தொல்காப்பியம் முழுமையும் பழந்தமிழ்ப் பண்பினை

அடிப்படையாக வைத்து, காலத்துக் கேற்ற உரை காண்டல் மக்களறிவிற்குப் பெரும் பயன் அளிக்கும் என்பதும் இங்கு குறித்தற் குரியனவாம்.

சீவக சிந்தாமணியிற் காண்பன

ஆசிரியர் நச்சினார்க்கினியர், முதன்முறை தொல்காப்பியத்திற்கு உரை எழுதியதாக சீவக சிந்தாமணியில் விளங்கும் பகுதி வருமாறு:—

'செலவினும் வரவினும்' (தொல்-கிளவி-28) என்னும் சூத்திரத்திற் கூறினும்-சிந்தாமணி: 72-உரை.

'நண்டுந் தும்பியு நான்கறிவனவே,
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே'

(—தொல்-மரபு-31

என்று தும்பிக்குச் செவியின்றெனவே இவற்றிற்கும் செவியின்றும் ஆதலாலே வருத்தமிகுதியான் இவற்றை நோக்கி வாளா கூறியதன்றி வேறன்று. இவை ஈண்டு வந்து கரி போதலில்; கேள்வியில்லன வருதலென்னை? என்பது கடா. அதற்கு விடை:— ஆசிரியர் 'நண்டுந் தும்பியும்' என்று துப்பியைப் பின் வைத்து, மேல் வருஞ் சூத்திரத்தின்,

'மாவு மாக்களு மையறி வென்ப'

—(தொல்-மரபு-32

என்ற ஐயறிவு இதற்கு மேறுதற் கென்றுணர்க; இதனை வாராததனல் வந்தது முடித்த லென்னுந் தந்திர வுத்தியாற் கொள்க வென்று ஆண்டு உரை கூறிப்போந்தாம்......சிந்தாமணி: 892: உரை.

அடிக்குறிப்பு: 'இங்கு கூறும் உரையாலும் 'பல்காற் பறவை' (பெரும்பாண். 183) என்பத னுரையிற் காணப்படுங் குறிப்புக்களாலும் இந்த இரண்டு நூல்களுக்கும் உரை செய்வதற்கு முன்னரே நச்சினார்க்கினியர் தொல்காப்பியத்திற்கு உரை செய் தனரென்று தெரிகிறது.'

—டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்.

'பண்பு கொள் பெயருமதனோ ரற்றே' (தொல்: விளி மரபு: 23) என்ற சூத்திரத்தில் சீவக சாமி யென்னும் இரு பெயரொட்டுப் பண்புத் தொகை, தன்னின முடித்த லென்பதனாற் சீவக சாமியாரென ஆரீறாய்ச் சீவகசாமியீரேயென ஈரோடு ஏகாரம் பெறுதல் கொள்கவெனக் கூறினும்.

—சிந்தாமணி: 1913: உரை.

'இதனால் வாடையும் தென்றலும் முன்னர் விரவித் தென்றல் பின்பு முதிர்ந்த தென்றூர். கொப் புளித்துப் பருகி யென்பனவும், வயாமர மென்பதூ உம், மாற்றருஞ் சிறப்பின் மரபன்றி, வழக்கின்கண் அடிபட்டுச் செய்யுளின்பம் படவந்த மரபென்று மரபியலிற் பாதுகாத்தாம்.' —நச்சினார்க்கினியர்.

தொல்காப்பியத்திற் காண்பன

ஆசிரியர் நச்சினார்க்கினியர் சிந்தாமணிக்கு முதன் முறை உரை எழுதியதாகத் தொல்காப்பியம் செய்யுளியலிற் கூறிய பகுதி வருமாறு:—

'அகன்று பொருள் கிடப்பினும்
அணுகிய நிலையினும்.........'

என்ற நூற்பா உரையில்: 'சிந்தாமணியுள் யாங் கூறிய வுரைகள் பலவற்றானு முணர்க' எனவும் (தொல் : செய் : 210)

'மாட்டு மெச்சமு நாட்ட லின்றி.....'

என்ற நூற்பா உரையில் : 'சிந்தாமணியுள் மாட்டும் எச்சமுமின்றி யுடனிலையா யமைந்தன பலவும் யாங் கூறிய உரையானுணர்க' எனவும், (தொல்: செய்: 211).

'இமு மென் மொழியான்
விழுமியது நுவலினும்........'

என்ற நூற்பா உரையில் (தொல் : செய் : 238).

'இவை பொருட்டொடர். அவை சிந்தாமணி முதலியன. அவை பாவிற் கினமாகிய துறையும் விருத்தமும் பற்றிச் செய்தன வென்பார்க்கு அப் புலவர் செய்யுட் செய்கின்ற காலத்திற்கு நூல் தொல் காப்பிய மாயவாறும் அவர் இனங் கொள்ளாத வாறும் அவ்வினங்கடாம் இலக்கணக் குன்ற பாடுடையவாறுங் கொச்சகம்போற் சிறப்பின்மையும் முன்னர் விளங்கக் கூறியவற்றைக் கொண்டும் பின்பு செய்த நூல்கள் முன்பு செய்த செய்யுட்கு விதியாகாதவாறுங்கொண்டு மறுக்க.

பின்னோர் தாஞ் செய்த நூல்கட்கு அவை உதா ரணமாகக் காட்டலின் அச் செய்யுள் அந்நூல்கட்கு முன்னையவாறு முணர்க.

இனித் தொல்காப்பியனுரை யொழிந்த ஆசிரியர் பதினொருவருட் சிலர் இனமுங் கொண்டார். இது

பற்றி யாப்பருங்கல முதலியவற்றினும் இனங் கொண்டா ரென்பார்க்கு அவர்கள் அகத்தியனுர்க்கு மாருக நூல் செய்தவராவர்"—எனவும் கூறியுள்ள னர் நச்சினர்க்கினியர்.

பன்னிரு மாணவரும் அகத்தியரும்

அகத்தியனுர்க்கு மாருக ஏன் நூல் செய்தனர்? அகத்தியனுர்க்கு மாருக நூல் செய்த பதினெருவர் யாவர்? இது பெரிதும் கருத்தூன்றி ஆழ்ந்து கவனிக்கத்தக்கன. அகத்தியனுரிடத்துத் தமிழ் பயின்றதாகக் கூறப்படும் மாணவர் பன்னிருவருள் ஒருவர் தொல்காப்பியர்; மற்றவர், அதங்கோட்டா சான், துராலிங்கர், செம்பூட் சேய், வையாபிகர், வாய்ப்பியர், பனம்பாரர், கழாரம்பர், அவிநயர், காக்கை பாடினியார், நற்றத்தர், வாமனர் என்பவ ராவர்.

இதுபற்றிப் பின்னர் விரிவாய்த் தனியே ஆராயப்படும். இது ஆராய்தற்குரிய முக்கிய பகுதி என்பது நன்கு விளங்கும்.

அகத்தியத்தின் வழி நூல் தொல்காப்பியம் என்று இன்றுவரை பல ஆராய்ச்சியாளர் கூறி வருகின்றனர். ஆசிரியர் தொல்காப்பியனுர் அருளிய தொல்காப்பிய நூலினுள் யாண்டாயினும் அவ்வாறு சொல்லப்பட்டுளதாவென ஆராய்ந்து பார்க்கும் போது, அகத்தியனுரைப் பற்றியோ அன்றி அவர் எழுதிய அகத்தியம் என்ற நூலினைப் பற்றியோ ஒரு சொற்கூட சொல்லப்படவில்லை.

தொல்காப்பிய நூலின்கண், அந்நூற்பாக்களின் இறுதியில் பல இடங்களில், 'உயர் மொழிப் புலவர்', 'என்மனூர் புலவர்', 'என்றிசினோரே', 'என்ப', 'எனமொழிப', 'நூல் நவில் புலவர் நுவன்றறைந்தனரே', 'உணர்ந்திசினோரே'; 'வல்லிதிற் கூறி வகுத்துரைத்தனரே', 'கடனெனஃ மொழிப' என இவ்வாறு முற்காலப் புலவர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றாரேயன்றி, 'ஆசிரியர் அகத்தியனார் இவ்வாறு சொன்னார்' என்று குறிப்பிட்டிருப்பதாக அறிய முடியவில்லை.

தொல்காப்பியம் பிறப்பியல் 'உந்தி முதலா...' என்ற முதற்செய்யுளுக்கு உரை எழுதிய ஆசிரியர் நச்சினார்க்கினியர் :

'எல்லா எழுத்தும் பிறப்பின் ஆக்கஞ் சொல்லுங்காலை' என்ற சொற்கள், அச்செய்யுளின் ஆறும் அடியின் முதலிரண்டு சொற்களும், ஏழாம் அடியின் முதலிரண்டு சொற்களும், ஆறும் அடியின் இறுதி இரண்டு சொற்களுமாகும்.

இதனை முதலிலெடுத்து இணைத்து, 'எல்லா எழுத்தும் பிறப்பின் ஆக்கஞ் சொல்லுங்காலை' என்பதற்கு மாற்றிப் பொருள் உரைக்கையில் :

தமிழ் எழுத்து எல்லாவற்றிற்கும் ஆசிரியன் கூறிய பிறப்பினது தோற்றரவையாங் கூறுமிடத்து' என்று கூறுகின்றார்.

'ஆசிரியன்' யார் ?

இவற்றில், 'ஆசிரியன்' என்ற சொல்லினைத் தொல்காப்பியர் அச்செய்யுளுள் குறிப்பிடவில்லை.

தொக்கிநிற்கும் 'ஆசிரியன்' என்ற அச் சொல் யாரைக் குறிப்பது? அகத்தியனாரைக் குறிப்பதா? அன்றி வேறு எவர்?

ஆசிரியர் தொல்காப்பியனார் எப்புலவரையும் பெயர் குறித்து ஒருமையிற் குறிப்பிடாது, பன்மையிலேயே முந்து நூலாசிரியர்களைக் குறிப்பிட்டுச் சொல்கின்றார். இதுவும் ஆராய்தற்குரியது. அகத்தியனாரிடத்துத் தொல்காப்பியனார் தமிழ் பயின்றாரென வும், அகத்தியனார் தமிழை வளர்த்தாரெனவும் கூறும் வரலாற்றுரையின் கருத்தினைத் தம்மனத்திற் கொண்டு உரையாசிரியர் நச்சினார்க்கினியர் அவ் வாறு கூறுகின்றனர் போலும்!

'அகத்தியன் பெருமை பெற்றான்'

பேராசிரியர் எஸ். சோமசுந்தர பாரதியார் எம்.ஏ., பி.எல், அவர்கள் அகத்தியனார்பற்றி ஆராய்ந்து கூறியது இங்கு வருமாறு:

தமிழை அகத்தியன் வளர்த்தான் என்று கூறுவது முழுப் பொய். தமிழைப் படித்ததால் அகத்தியன் பெருமை பெற்றான். கம்பன்கூட அகத்தியனைப் பற்றிக்கூறும்போது:

'என்றுமுள தென்றமிழ் இயம்பி
இசை கொண்டான்'

என்று கூறியுள்ளார். அகத்தியன் கடவுள் அல்ல. நம்மைப்போல் அகத்தியன் ஒரு மனிதன். அகத்தியனைப் பற்றிப் புராணங்கள் கட்டுக் கதைகளைக் கிளப்பின" என்பனவாகும்.

புரட்சிக் கவிஞர் பாரதி தாசன், "தமிழன் தமிழின் இயற்கையால் ஒவ்வொன்றிலும் இசையையும் நாடகத்தையும் கண்டான்; இன்றல்ல நேற்றல்ல; அகத்தியர் காலத்துக்கு முன்னேயே." என்று உரைக்கும் இருதனித் தமிழ்ச் செல்வர்களின் உரைகளும், நச்சினார்கினியரின் உரை மனப்பான்மையும், அகத்தியனார் பற்றி அறிஞர்களிடை நீண்டகாலமாக நிலவிவரும் தவறான வரலாறுகளுக்கும் தக்க விடையாகுமென்று கருதுகிறேன்.

அகத்தியனாரிடத்துத் தமிழ்பயின்ற மாணவர் பன்னிருவர் என்று குறிப்பிட்டிருக்கின்றனர். அம் மாணவர் பன்னிருவரும் அகத்தியனார்க்கு மாறுபட்டு நூல் இயற்றியதாகவும், வரலாற்று நிகழ்ச்சிகள் கூறுகின்றன. அகத்தியனார் முதற் கழக மிருந்து தமிழாராய்ந்ததாக அறிஞர் பலர் கூறுகின்றனர். தொல்காப்பியர் நூல்செய்த காலம் முதற் கழக இறுதியும் இடைக்கழக முதலிலும் என்று சொல்கின்றனர். நச்சினார்க்கினியர் தொல்காப்பியத்திற்கு உரை செய்த காலம் கிறிஸ்துவுக்குப் பின் ஏறக்குறைய பதினான்காம் நூற்றாண்டு என்று தெரிகின்றது.

ஆராய்ச்சி அறிவுடைய ஆசிரியர் நச்சினார்க்கினியர் தொல்காப்பியத்திற்கு உரைசெய்த காலத்துள்ள காலநிலைமையையும், தொல்காப்பியனார் தொல்காப்பியம் இயற்றிய காலத்துள்ள காலநிலைமையையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தொல்காப்

பியனார் காலத்திற்கும் நச்சினார்க்கினியர் காலத்திற்கும் இடையில் நிகழ்ந்த காலநிகழ்ச்சிகளையும், கால மாறுபாடுகளையும் நாம் உற்று நோக்குகையில், நச்சினார்க்கினியர் தொல்காப்பியத்திற்குச் செய்துள்ள உரையில், நூலாசிரியர் தொல்காப்பியனாரின் அடிப்படைக் கருத்திற்கு நேர்மாற்றமான முறையில் உரையாசிரியர் நச்சினார்க்கினியர் எழுதிய உரையின் போக்கு நன்கு தெரிவிக்கின்றது என்பதை மேலே எடுத்துக்காட்டியவைகளிலிருந்து ஒருவாறு அறியலாம்.

மாபெரியார் தொல்காப்பியர்

நாவலர் எஸ். சோமசுந்தர பாரதியார் எம்.ஏ., பி.எல்., அவர்கள் பழைய உரையாசியர் பலர் தமக்கு முன் எழுதிய உரைகளை யெல்லாம் தாக்கியும் கண்டித்தும் தமது உரைகளில் எடுத்துக்காட்டியும் உரைவரைந்து உச்சிமேற்புலவர் கொள் நச்சினார்க்கினியர் எனப் புகழ்பெற்ற உரையாசிரியர் நச்சினார்க்கினியர் தொல்காப்பியத்திற்கு எழுதியுள்ள உரையினைப் பற்றிக் கூறியுள்ளது வருமாறு:—

'ஆதியில் ஆரியர் தமிழர் பகை ஏற்பட்டதற்கு முக்கியகாரணம், தமிழின் தொன்மையையும் சிறப்பையும் பாராட்டாமல் சமஸ்கிருதம் தேவமொழி என்று கூறி தமிழ் நாட்டில் அதைக்கொண்டு வந்து புகுத்தினார்கள். அப்பொழுதே தமிழர்கள் அதை வன்மையாக எதிர்த்தார்கள்.

'மகா பெரியவர் தொல்காப்பியர் இயற்றிய நூலிலே உண்மையான கருத்துகள் பல காணக்

கிடக்கிறது. தொல்காப்பியத்திலே இயல், இசை, நாடகம் ஆக மூன்று பகுதிகளையும் காணலாம்.'

'தமிழர்கள் தொல்காப்பியத்தைப் படிக்கும் பொழுது தொல்காப்பியர் கண்கொண்டு படிக்க வேண்டும். இப்பொழுது தொல்காப்பியத்தைப் படிக்கும் தமிழர்கள் நச்சினார்க்கினியன் கண் கொண்டு தொல்காப்பியத்தைப் படிக்கிறார்கள்.

அறிவாகிய கடவுளுக்கு ஆறுமுகம் உள்ளது பன்னிரண்டு கையுள்ளது என்று கூறுவது எப்படிப் பொய்யோ அப்படிதான் நச்சினார்க்கினியர் உரையும்.

பண்டிதர்களில் சிலர் தொல்காப்பியத்தை நன்கு ஆராயாமல் இயற்றமிழ் நூல் என்று கூறுவர்.

தொல்காப்பியம் ஒரு முத்தமிழ் நூல்.

நாம் தமிழ் மொழியை மறக்க வேண்டுமென்ப தற்காகவே அன்று வடமொழியைப் புகுத்தினார்கள் போலும்! வடமொழியைத் தமிழில் புகுத்தியது மன்றி, தனித் தமிழ், தனித் தமிழ்ப் பண்பு, தனித் தமிழ் நாகரிகம், தனித் தமிழ் நூல்கள் ஆகிய அனைத்தையும் மாற்றி அமைத்து எல்லாம் வட மொழியிலிருந்தே வந்ததாகவும் தமிழர்கள் நம்பு மாறு பல கதைகளையும் கட்டிவிட்டனர். அது இன்று பொய்ம்மை நிறைந்த கூற்றுக்கள் ஆயிற்று.

9
தொல்காப்பியரும் குணவீரபண்டிதரும்

'தொல்காப்பியக் கடலிற் சொற்றீபச் சுற்றளக்கப்
பல்காற் கொண்டோடும் படகென்ப......'

—நேமிநாதம் சிறப்புப்பாயிரம்.

சமணர்

நேமிநாத ஆசிரியர் பெயர் என்ன? இவர் பெயர் குணவீர பண்டிதர். இவர் எந்நாட்டிற் பிறந்தவர்? எந்நாட்டிற் வாழ்ந்தவர்? எம் மொழி பயின்றவர்? எச்சமயத்தைச் சார்ந்தவர்? இவர் தமிழகத்திற் பிறந்தவர்; தமிழகத்தில் வாழ்ந்தவர்; தமிழ் மொழி பயின்றவர்; சமண சமயத்தினர். இதனை, இவர் இயற்றிய நேமிநாதம் எழுத்ததிகாரத்தின் முதலிலும், சொல்லதிகாரத்தின் முதலிலும், வச்சணந்தி மாலை என்னும் வெண்பாப் பாட்டியலின் முதலிலும் கூறிய கடவுள் வாழ்த்துக்களாலும், இந்நூலுக்கு இவர் வைத்த பெயராலும் நன்கு அறியலாம்.

நேமிநாதம்

நேமிநாதர் என்ற பெயர் உடையவர் எவர்? மயிலையில் முன்னே சைன சமயக் கோயில்கள் ஐந்து இருந்தன எனவும், அவற்றுள் நேமிநாதர் கோயிலும் ஒன்று எனவும், மயிலையில் இருந்த சைனக் கோயில்களைப் பற்றிய பாடல்கள் பல

உள்ளனவெனவும் வரலாற்றுக் குறிப்புக்கள் கூறு கின்றன.

'இந்நூல் என்ன பெயர்த்தோ எனின் இந் நூல் எய்திய சிறப்பின் எழுத்தையும் சொல்லையும் மெய்தெரி வகையின் விளங்க நாடித், தேனிமிர் பைம்பொழிற் தென் மயிலாபுரி நீல் நிறக் கடவுள் தம் திருப்பெயராற் செய்தமையின் நேமிநாதம் என் னும் பெயர்த்து' என நேமிநாதம் பாயிர உரையிற் காணப்படுகின்றது. நேமிநாத நூலாசிரியர் வாழ்ந்த காலத்து மயிலையில் இருந்த அக்கோயில் சைனர் களால் பெரிதும் போற்றிச் சிறப்பித்துச் சொல்லப் பட்டிருக்கிறது என்பது நன்கு விளங்குகிறது.

ஆயிரம் ஆண்டுகளின் முன்னர் தமிழ் நாட்டில் வாழ்ந்த மக்களிடை சைனம்—சமணம் முதலிய சமயங்கள் நிலைபெற்று வேரூன்றியிருந்த காலம் என்பதற்கு இந்நூலும், சிந்தாமணி போன்ற இன் னும் பல தமிழ் நூல்களும் நமக்கு எடுத்துக் காட்டு களாக விளங்குகின்றன.

குணவீர பண்டிதர்

நமது தமிழகத்திலே ஒரு காலத்திற் சமணத் திற்கும் சைவத்திற்கும் பெரும் போர் நிகழ்ந்ததாக நூல்களிற் படிக்கின்றோம். இரு சமயத்தவருள்ளும் கொள்கையளவில் அடிப்படைக் காரணங்கள் பல உள வெனினும் அவற்றை இங்கே விரித்துரைக்க விரும்பவில்லை. இரு சமயத்தவருள்ளும் பல நல்ல இயல்புகளும் தீய இயல்புகளும் அவர்களை அறியா மலே கலந்திருக்கின்றன. அந் நல்லியல்புகளுள்

தலைமை சான்ற ஒன்று இரு சமயத்தவருள்ளும் ஊடுருவிப்பாய்ந்துள்ள தமிழ்ப் பற்றுளங்கொண்ட தமிழ்த் தொண்டு எனலாம். சமய வேறுபாடுகளுள் இவர்களுள்ளம் படிந்து கிடப்பினும், இரு சமயப் புலவர்களும் தமிழுக்கு வேற்றுமையற்ற தனித் தொண்டு செய்திருக்கின்றனர். இரு சமயப் புலவர் களும் தென் மொழியும் வட மொழியும் ஒருங்கு கற்று நன்கு வளர்ச்சி யடைந்து வந்திருக்கின்றனர். எனினும் அவர்களுள் குணவீர பண்டிதர் தொல் காப்பியரின் தனித் தமிழ்க் கொள்கையிற் பற்றுளங் கொண்ட தனிச் சிறப்புடையவர் என்பதை அவர் இயற்றிய நேமிநாதம் ஒருவாறு விளக்குகிறது. அதனால் அவரைப்பற்றி இங்கு சிறிது எழுதும் வாய்ப்பு நேர்ந்தது; அவர் செய்த நேமிநாதம் என்ற நூலின் உண்மைக் கருத்துக்கள் தமிழ்ப் பற்றுடை யார்க்குப் பயன்படும் என்று கருதுகிறேன். இக் காலப்போக்கின்படி நாம் பார்க்கும்போது குணவீர பண்டிதரின் கருத்துக்களிற் சில, சிலருக்கு மாறு பாட்டை ஏற்படுத்தலாம். அவர் வாழ்ந்த காலம், மக்க ளின் நிலை, மக்களின் மனப்பான்மை முதலியன கொண்டு குணவீர பண்டிதரின் உள்ளத்தைக் காண வேண்டுவது முறையாகும்.

நேமிநாதம் முற்றும் ஒரு முழுநிறைவான நூல் என்று சொல்லுவதற்கில்லை; அதிற் பல குறைபாடுக ளும் இருக்கலாம். தாம் எடுத்துக் கொண்ட பொருளை இயன்றவாறு செய்து முடிக்கும் ஆற்றல் வாய்ந்தவர் என்பதை அவர் காலத்து வாழ்ந்த புலவர்கள்

அவரைப் பற்றி கூறியிருக்கும் கூற்றுக்களினின் றும் விளங்குகின்றன என்பதை மட்டும் நாம் உற்று நோக்குதல் வேண்டும். தொல்காப்பியர் வகுத்த உயர் தனிச் செந்தமிழ் நெறியின் உச்சியினின்றும் நாம் நோக்கும்போது நேமிநாதம், நன்னூல் முதலிய நூல்கள் பெரிதும் குறைபாடுடையனவாகவே தோன்றுகின்றன.

களந்தை குணவீர பண்டிதர்

இந் நூலாசிரியர் களந்தைப்பதி குணவீர பண்டிதர் என்பர்.

"இந்நூல் செய்தார் யாரோ எனின்
உளமலி பேரருள் உயிர் மிசை வைத்த
வளமலி களந்தை வச்சணந்தி முனிவரன்
கொள்கையின் வழாஅக் குணவீர பண்டிதன்"

என இந்நூல் பாயிர உரையினும்,

"கற்றவர் புகழும் களந்தையென் பெரும்பதி
குற்றமில் வாய்மைக் குணவீர பண்டிதன்."

என வெண்பாப் பாட்டியலின் பாயிர உரையாலும் அறியப்படுகின்றன.

'களத்தூர்' என்பது தொண்டை மண்டலத்துக் கோட்டங்கள் இருபத்து நான்கனுள் ஒன்று எனவும், காஞ்சிபுரத்திற்குத் தென்கிழக்கில் முப்பது கல் தொலைவில் இருக்கின்றது எனவும் தொண்டைமண்டல சதக உரையால் அறியப்படுகின்றன.

இந்நூலாசிரியரின் ஊராகிய களந்தைப்பதி என்பது:

'தன்னூர்ச் சனகையிற் சன்மதி மாமுனி தந்தமைந்தன்
நன்னூல் உரைத்த பவணந்தி மாமுனி நற்பதியும்
சின்னூல் உரைத்த குணவீர பண்டிதன் சேர்பதியும்
மன்னு புரத்திரு அன்னமின்னே தொண்டை மண்டலமே.'

—தொண்டை மண்டல சதகம் செய்யுள் 2.

காலம்

சோழ நாட்டினை ஆண்ட திரிபுவன தேவன் காலம் ஏறக்குறைய எண்ணூறு ஆண்டுகளின் முன்னர். திரிபுவன தேவன் குலோத்துங்கன் என்ற பெயரை உடைய சோழமன்னர்களுள் ஒருவன். இவன் காலம் எண்ணூறு ஆண்டுகளின் முற்பட்டதென்பர் அறிஞர்.

இராமநாதபுரம் அரசவை பெருமை பொருந்திய புலவர்—மொழிச் சிறப்புடைய பாவலர் உ. வே. ரா. இராகவ ஐயங்கார் அவர்கள் 1923ம் ஆண்டில் தாம் பார்வையிட்டுப் பதிப்பித்த நேமிநாதத்தின் முகவுரையில்:

"இவருடைய காலம் இற்றைக்கு 800 ஆண்டுகளின் முன் இருந்த திரிபுவன தேவன் எனப் பெயரிய குலோத்துங்க சோழன் காலம் ஆகும்" எனக் கூறியிருத்தல் கொண்டு அறிதற்குரியதாம்

"குறுத்துவா மணிமுடிக் கொற்றவர் கோமான்
திருத்தகு மணிமுடித் திரிபுவன தேவன் எனும்
அரசன் காலத்திற் செய்தது என்று உணர்க"

எனவும்,

கடவுண் முதலிய நற்சங்கத்தார் அவைக்களத்திற் கேட்கப்பட்டதெனவும் வெண்பாப் பாட்டியலின் உரைப் பாயிரத்திற் குறிக்கப்பட்டுள்ளன.

பாண்டிய மன்னர்கள் நிறுவிய தமிழ்ச் சங்கம் இருந்து தமிழ் ஆய்ந்த புலவர்கள் போன்று, அவர் வழிவழிவந்த சோழ மன்னர்களின் ஆட்சியின் திரிபுவன தேவன் என்னும் குலோத்துங்க சோழன் காலத்தில் வச்சணந்தி முனிவரின் மாணவர் குணவீர பண்டிதரின் வெண்பாப் பாட்டியலை ஆராய்ந்தோர்:

"சிங்கா வண்புகழ் செறிபொழிற் றிருமலைப்
பங்கய மலர்த்தாட் பண்டிதர் என்னும்
முனிவர் ஆய்ந்தனர் என்றுணர்க."

எனவும் கூறப்பட்டுள்ளன.

நன்னூல் சிறப்புப் பாயிரத்தில் அமராபரணன் என்ற சிறப்புப் பெயரையுடைய சீயகங்கன் என்ற அரசன் ஆணையின் மீது சன்மதி முனிவரின் மைந்தர் பவணந்தி முனிவர் நன்னூல் செய்தனர் எனவும், இச் சீயகங்கன் மூன்றாம் குலோத்துங்கவனது காலத்தவன் என்பதும் கி. பி. 13ம் நூற்றாண்டில் இருந்தவனென்றும், இவன் ஒரு சிற்றரசனென்றும், மூன்றாம் குலோத்துங்கனுடைய ஆட்சிக்கு அடங்கியொழுகிய ஓர் அரசன் என்றும், குலோத்துங்கனது மகனாகிய மூன்றாம் அரசர்க்கரசனைச் சிறைப் படுத்திய கோப்பெருஞ் சிங்கனுக்குக் கீழடங்கிய சிற்றரசன் எனவும் சீயகங்கன் வாழ்ந்ததாக வரலாற்றுரைகள் கூறுகின்றன.

சின்னூல்

தொல்காப்பியம் தோன்று முன்னரிருந்த நூல்கள் எண்ணற்றன ; கடற் கோழாற் பல நூல்கள் மறைந்தன. இருப்பும் மறைவும் சேர்ந்த கால நிலையில் தொல்காப்பியம் தோன்றிற்று. பழம் பெரும் உண்மைகளை விளக்க வந்த தொல்காப்பியம், பின்னர் தலைமை சான்ற நூலாக விளங்கிற்று. தொல்காப்பியத்தை எல்லாரும் முறையுடன் கற்றனர்; அதனின்றும் ஒரு சிறு நூல் பிறந்தது. தொல்காப்பியத்தை முதல் நூலாகக் கொண்டு, அதன் வழி நூலாக ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளின் முன்னர், குணவீர பண்டிதர் எனும் புலவர் நேமிநாதம் எனும் பெயரால் ஒரு நூலினை இயற்றினர் ; அது 'சின்னூல்' என வழங்கிற்று. அந்நூல் பலர்க்கும் பயன் படுவதாயிற்று.

தொல்காப்பியத்தின் பின்னர், எளிதில் தொல்காப்பியம் கற்பார்க்கு முதலில் வழிகாட்டியாக அமைந்திருந்தது நேமிநாதம் என்பதற்கு, அதன் வெண்பாக்களின் அமைப்புகளிலிருந்தும், நேமிநாத உரையிலிருந்தும் இவ்வுண்மையினை அறிய இடந் தருகின்றது.

பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல் தோன்று முன்னர், தொல்காப்பியம் கற்க விரும்புவோர் முதலில் நேமிநாதம் கற்றுப் பின்னரே தொல்காப்பியம் கற்று வந்தனர் என்று அறிஞர் கூறுவர். இக் கூற்று உண்மை என்பதற்கு நேமிநாதத்தின் அடிப்படைக்கருத்து வலியுறுத்துகிறது.

பாட்டியல்

வச்சணந்தி மாலை என்னும் வெண்பாப் பாட்டியலை இயற்றியவரும் குணவீர பண்டிதரே. இந்நூலாசிரியருடைய ஆசிரியர் வச்சணந்தி முனிவர் என்பவர். இவரும் சமண சமயத்தவரே என்பது இவரது பெயரினின்றும் அறியலாம். வச்சணந்தி மாலையில் தமிழ் எழுத்துக்களைப்பற்றி வரும் பல செய்திகள் இக்காலத்தவருக்கு வியப்பூட்டும் செய்திகளாயுள்ளன. பாட்டியல் என்ற வரிசையில் பன்னிரு பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், நவநீதப் பாட்டியல் எனப் பாட்டியல் மரபு கூறும் வேறு நூல்கள் உள. இவையெல்லாம் படிக்க வேண்டிய நூல்கள். திருவருட்டுணை கிடைக்குமாயின் சமயம் நேரும்போது இதுபற்றி எழுதப்படும்.

சமணர்களின் தமிழ்த் தொண்டு

ஆயிரம் ஆண்டுகளின் முன்னர் தமிழ் வளர்ச்சி எவ்வாறிருந்த தென்பதற்கு நேமிநாதம் ஓர் எடுத்துக்காட்டாகக் காட்சியளிக்கிறது. சமண சமயப் புலவர்கள் தமிழ் இலக்கண இலக்கிய வளர்ச்சிக்குச் செய்திருக்கும் நல்ல தொண்டினை நாம் மறக்கவியலாது. நேமிநாதத்திற்கு அமைந்த உரையும் தனித் தமிழ் மரபினை அடிப்படையாக வைத்து இனிய எளிய தமிழில் ஆற்றொழுக்குப் போன்றுளது.

அவ்வுரை கற்பார் உள்ளத்தை ஈர்க்கும் இயல்பாய் அமைந்துளது. தொல்காப்பியர் கண்ட தனித் தமிழ் இலக்கண அமைப்பினை அடிப்படையாக

வைத்துத் தொல்காப்பியர் வழி நின்று சுருங்கிய முறையில் யாக்கப்பெற்ற நேமிநாதத்தை அறிய முயல்வோர்க்கு நேமிநாதம் பெருவிருந்தளிக்கிறது. இப்படிப்பட்ட சுருங்கிய ஒரு சிறு இலக்கண நூல் தமிழில் இருக்கிறதென்பதை இக்காலத்தவர் சிறிதும் அறியாதிருக்கின்றனர். இதனை ஆழ்ந்து நோக்கும்போது தனித் தமிழ் இலக்கண உலகு இவ்வாறு இருண்டு போயிற்றே என்று உள்ளம் வருந்தும் நிலைமை ஏற்படுகிறது. நாட்டிலே நிகழ்ந்த சமய வெறிச் சண்டைகளால் அரும்பெருந் தமிழ் நூல்களும் படிப்பாரற்று மறைந்துபோயின. அவற்றில் நேமிநாதமும் ஒன்று எனலாம்.

நன்னூல் முறையான நூலன்று

பவணந்தி முனிவரெழுதிய நன்னூல் ஒரு முறையான இலக்கண நூலாய் அமையவில்லை. நன்னூல் என்றால் எல்லாரும் அறிவர். நன்னூலை விட எளிய முறையில், எளிய இனிய தனித் தமிழ்ச் சொற்களால் அமைந்த வெண்பாக்களையுடைய நேமிநாதம் எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் உணர்த்துகின்றது. 'நன்னூல்' என்ற சொல்லில் மயங்கித் தமிழின் உண்மை இலக்கணமான தொல்காப்பியத்தை மக்கள் மறந்தனர்; அதன் வழி நூலான நேமிநாதத்தையும் மறந்தனர்.

பவணந்தி முனிவர்

நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவர் கொள்கை என்ன? பவணந்தி முனிவர் எந்நோக்

குடன் நன்னூல் செய்தனர்? பவணந்தி முனிவர் தொல்காப்பியர் வகுத்த தனித் தமிழ் இலக்கண நெறிக்கு முற்றும் மாறுனவர். இவர் எவ்வாறு தொல்காப்பியர் வகுத்த இலக்கண நெறிக்கு மாருக நன்னூல் செய்தனர், என்பதைத் ‘தொல்காப்பியரும் பவணந்தி முனிவரும்’ என்ற அடுத்த கட்டுரையில் விளக்கப்படும். பின்வந்த முனிவரால் முன்வந்த தொல்காப்பியர் மறைக்கப்பட்டனர். வடமொழியும் தென் மொழியும் கலந்த இடைக் காலத் தமிழின் இயல்பை உணர்த்த வந்தது நன்னூல். பழந் தமிழரின் வாழ்வின் இலக்கணத்தை முறையுடன் எடுத்தியம்பி பண்டைக் காலத் தமிழின் இயல்பை உணர்த்த வந்தது தொல்காப்பியம். நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவர், தொல்காப்பியத்தினின்றும் பல பகுதிகளைக் கையாண்டு நன்னூல் செய்தனர். நன்னூலுக்கு உரை எழுதிய உரையாசிரியர் பலரும், தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய பல உரையாசிரியர்களின் கருத்துக்களைக் கையாண்டு ஆங்காங்கு எடுத்தும் தொடுத்தும் தொகுத்தும் இணைத்தும் பவணந்தி முனிவரின் நன்னூலை அழகு செய்தனர். தனித் தமிழ் மலர்களால் பவணந்தி முனிவரை அழகு செய்ய முயன்ற இடைக்காலப் புலவர்கள், பழந் தமிழரின் வாழ்வின் இலக்கணமான ஆசிரியர் தொல்காப்பியனரின் தனித் தமிழ்க் கொள்கைக்குப் பேரிடர் விளைத்தனர். அதனல் இடையிற்றோன்றிய நன்னூலின் சிறப்பும் பெருமையும் உயர்ந்தது. தொல்காப்பியத்தின் சிறப்பும் பெருமையும் குறைந்தது; மறைந்தது

எனவுங் கூறலாம். இது வடமொழியே தமிழினும் சிறந்தது ; உயர்ந்தது என்ற கொள்கையுடையார் தனித் தமிழ் நெறிக்குத்தேடிய பெருந்தீங்காகும்.

உரையாசிரியர் பெயரில்லை

நேமிநாதத்திற்கு உரை எழுதிய உரையாசிரியர் பெயர் தெரியவில்லை. இவர் வாழ்ந்த காலமும் அறிய முடியவில்லை. இந்நூல் உரையாசிரியர் தொல்காப்பிய நூற்பாக்களை மேற்கோளாய் நிறைய எடுத்தாண்டிருக்கின்றார். இவ்வுரையாசிரியர் பண்டை இலக்கணங்களையும், செய்யுட்களையும் நன்குபயின்ற புலமையுடையவர் என்பது இவரது உரையிலிருந்து இனிது விளங்குகிறது.

இவ்வுரை முழுமையும் பெரிதும் தொல்காப்பிய நூற் பாக்களையும், உரைகளையுமே தழுவி எழுதியுள்ளனர். இவ்வுரையாசிரியர் இளம்பூரணர், சேனாவரையர் முதலிய பழைய உரையாசிரியர்களின் கருத்துக்களைத் தழுவி எழுதியுள்ளார். இவ்வுரைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இவ்வுண்மை விளங்குகிறது. தொல்காப்பியம் கற்க விரும்புவோர் நலன் குறித்து எழுந்த நேமிநாதம் என்ற இந்நூல் ஒரு பால பாடம் போன்று காட்சியளிக்கிறது.

நேமிநாதம் உரை

நேமிநாதத்தின் உரை, கருத்துரை, பொழிப்புரை, எடுத்துக்காட்டு, வினா விடை, நூற்பாவின் பொருள் நன்கு விளங்குதற்கு உரிய உரைகளும மேற்கோள்களும் உடையனவாயிருக்கின்றன.

இஃது ஒரு விருத்தியுரை போன்றிருக்கின்றது. பிறப்பு என்னுந் தலைப்பின் கீழ்வரும் வெண்பா வுரையின் மேற்கோளாக தொல்காப்பியம் பிறப் பியலின் நூற்பாவிலுள்ள ஒன்றுமுதல் பத்தொன் பது நூற்பாக்கள் வரை நேமிநாத உரையாசிரியர் உரையின் மேற்கோளாக எடுத்தாண்டிருக்கின்றார் எனின் இதுபற்றி அதிகம் கூற விரும்பவில்லை.

நேமிநாதம் என்னும் இந்நூல் எழுத்து இலக் கணத்தையும் சொல் இலக்கணத்தையும் சுருங்க உரைக்கும் ஒரு சிறு நூல் ஆகும். அதனால் இதனைச் 'சின்னூல்' என்றனர். இதனையே குணவீரபண்டி தரின் பின்வந்த பவணந்தி முனிவர், 'சின்னூல்' என்றதன் சிகரத்தை நகரமாக்கி தமது நூலுக்கு 'நன்னூல்' எனப்பெயர் சூட்டினர் போலும்! நேமி நாதம் எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் என இரண்டு அதிகாரங்களைக் கொண்டது. இது தொல்காப்பிய நூலினை முதல் நூலாக வைத்து ஆக்கப் பெற்ற நூலாகும். அதனை இந்நூலின் இரண்டாம் அதிகார மான சொல்லதிகாரம், தொல்காப்பியச் சொல்லதி காரம் போன்று ஒன்பது இயல்களாக அமைக்கப் பட்டிருக்கின்றன. எழுத்ததிகாரமும் தொல்காப்பிய எழுத்ததிகார அமைப்பின் அடிப்படையினின்றும் எழுந்ததாகும். 'ஆவி அகர முதல்' என்ற முதல் வெண்பாவினால் இதனை அறியலாம். தொல்காப் பியத்தின் இயல்களின் பெயர்களே சிறிது சிறிது மாற்றி நேமிநாதச் சொல்லதிகார இயல்களின் பெயர்களாக அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதி லிருந்து இதனை அறியலாம்.

சிறப்புப் பாயிரம்

நூல் செய்தான் பாயிரஞ் செய்தானயின் தன்னைப் புகழ்ந்தானும். 'தோன்ரு தோற்றித் துறை பல முடிப்பினுந் தான் தற்புகழ்தல் தகுதி யன்றே' என்பவாகலின் என ஆன்ருேர் கூறிப் போந்தனர்.

தொல்காப்பியத்திற்கு ஆசிரியர் பனம்பாரனர் சிறப்புப் பாயிரம் கூறினர். இச் சிறப்புப் பாயிரம் கூறினர் இன்னரென்று அறியுமாறில்லை. நேமி நாதம் சிறப்புப் பாயிரம் எழுத்ததிகாரம் பற்றி கூறும் ஒரு வெண்பா வருமாறு.

"எண்ணும் பெயரு முறையும் இயன்தற்பின்
நண்ணிவரு மாத்திரையு நற்பிறப்பும்—கண்ணு
வடிவும் புணர்ச்சியும் ஆயவோர் ஏழும்
கடியமரும் கூந்தலாய் காண்"

என்பனவாகும்.

இங்கு பெண்மையை முன்னிலைப்படுத்திக் கூறு கின்ருர். நூலினுட் பல வெண்பாக்களில் இவ்வாறு வந்துள்ளன.

இதனையே தழுவி பிற்காலத்து வந்த நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவர் எழுத்தியல் என்ற தலைப்பின் கீழ் கூறியது வருமாறு:

"எண்பெயர் முறைபிறப் புருவ மாத்திரை
முதலீ றிடை நிலை போலி யென்ரு—
பதம்புணர் பெனப்பன் னிருபாற் றதுவே"

என்றனர்.

அவை தொல்காப்பிய எழுத்ததிகார இயல் களுள் இன்னம் விரிவா யுள்ளன.

இதன் பொருள்: எண்-எழுத்தின் எண்ணும், பெயர்-பெயரும், முறை-முறையும், பிறப்பு-பிறப்பும், உருவும்-வடிவமும், மாத்திரை-அளவும், முதல் (நிலை)-முதநிலையும், ஈறு (நிலை)-கடை நிலையும், இடை நிலை-இடை நிலையும், போலி-போலியும், பதம்-பதமும், புணர்வு-புணர்ச்சியும், என-என்று, பன்னிரு பாற்று-பன்னிரு பகுதியினை யுடைத்தாகும்; அவ் வெழுத்திலக்கணம்-என்றவாறு.

எனவே நேமிநாத வெண்பாவுக்கு இங்கே தனி யுரை வேண்டா வென நினைக்கின்றேன்.

சிறப்புப் பாயிர ஆசிரியர் எழுத்தின் இலக் கணத்தை ஏழு என்று கூறுகின்றார். பவணந்தி முனிவர் பன்னிரு பகுதியினை உடைத்து அவ் வெழுத்திலக்கணம் என்று சொல்லுகின்றார். இரு வரும் இதனிற் கருத்து வேறுபடுகின்றனர்.

ஆசிரியர் தொல்காப்பியனார் எழுத்ததிகாரம் ஒன்பது இயல்களுடன் எழுத்திலக்கணம் பற்றி தெளிவாகவும், விளக்கமாகவும், தனித்தனி தொகை யாகவும், வகையாகவும், விரிவாகவும் எடுத்தியம்பிச் செல்கின்றார். அதனைச் சுருக்கி உரைக்க முயன்ற குணவீர பண்டிதரும், பவணந்தி முனிவரும் தொல் காப்பியத்தினின்று எவ்வளவு நூற்பாக்களையும், கருத்துக்களையும் தாங்கள் எந்தெந்த இடங்களிற் கையாண்டிருக்கின்றனர் என்பதை விளக்கமாய் அறிய வேண்டுமாயின், நேமிநாதம், நன்னூல்,

தொல்காப்பியம் ஆகிய மூன்று நூல்களையும் ஒருங்கு வைத்து முறையுடன் கூர்ந்து ஆராய்வார்க்கு இவ்வுண்மை நன்கு விளங்கும்.

ஆசிரியர் தொல்காப்பியனார் எளிய முறையில் மிகத் தெளிவாகவும் விளக்கமாகவும், உயர்வாகவும் ஆக்கியதைக் குணவீர பண்டிதரும், பவணந்தி முனிவரும் ஆழ்ந்தறிந்து உரைக்கும் ஆற்றலற்று நூல் செய்து தமிழ் இலக்கண உலகை மயங்க வைத்தனர் என்றுதான் சொல்லுதல் வேண்டும்.

சொல்லதிகாரம் பற்றி நேமிநாதம் சிறப்புப் பாயிரம் கூறுவது வருமாறு:

> 'தொல்காப் பியக் கடலிற் சொற்றீபச் சுற்றளக்கப்
> பல்காற் கொண் டோடும் படகெனப—பல்கோட்டுக்
> கோமிகா மற்புலனை வெல்லுங் குணவீர
> நேமிநா தத்தி னெறி'

என்பனவாகும்.

இங்கே தொல்காப்பியத்தை முன்னிலைப் படுத்திக் கூறுகின்றார். தொல்காப்பியக் கடல் என்கின்றார். சொல் தீபம்-அறிவொளி நிறைந்த சொற்கள் என்கின்றார் தொல்காப்பியச் சொற்களை. அந்த ஒளி பரவியுள்ள சுற்றளவு அளக்கப் பல தடவை கொண்டு செல்லும் படகு எனக் கூறுகின்றார். நேமிநாதம் என்ற நூலினை. இங்கு அகத்தியத்தைப் பற்றியோ அன்றி வேறு நூல்களைப் பற்றியோ குறிப்பிடவில்லை. சிறிதும் மறைவின்றி உண்மையை உரைக்கின்றார் சிறப்புப் பாயிரம் கூறிய ஆசிரியர்.

பவணந்தி முனிவர் இவ்வாறு கூறவில்லை. பவணந்தி முனிவர் பல இடங்களில் தொல்காப்பிய நூற்பாக்களை அப்படி அப்படியே எடுத்து மாற்றியும், திரித்தும், புதுக்கியும் நன்னூல் செய்தனர். தொல் காப்பியர் பெயரை மறைத்தனர்.

பாயிரம்

குணவீர பண்டிதர் தமது நேமிநாதம் பாயி ரத்தில்:

‘பூவின்மேல் வந்தருளும் புங்கவன்றன் பொற்பாதம்
நாவினல் நாளும் நவின்றேத்தி - மேவு முடி
பெல்லா ஞுணர எழுத்தின் இலக்கணத்தைச்
சொல்லான் உரைப்பன் தொகுத்து’ —1

என்றனர்.

இதன் பொருள்: ஆயிரத்தெட்டு இதழுடைய அரவிந்த நாண் மலர் மேல் எழுந்தருளியிருக்கும் ஆதிநாதன் அடிதுதித்து, யாவரும் உணர எப் பெற்றிப்பட்ட எழுத்து முடிபுகளும் சுருங்கும் வகை யாற் சொல்லுவன் - என்றவாறு.

அவையடக்கம்

அவையடக்கம் கூறும் குணவீர பண்டிதர்:

‘உண்ண முடியாத ஓதநீர் வான்வாய்ப்பட்
டெண்ண அமுதான தில்லையோ—மண்ணின்மேல்
நல்லாரைச் சேர்தலால் நான்சொன்ன புன்சொல்லும்
எல்லாருக் கைக்கொள்வர் ஈங்கு’

என்றனர்.

இதன் பொருள்: உலகத்து யாவர்க்கும் உண்ண முடியாத ஓதநீர், மேகத்தின் வாய்ப்படுதலான் அமுதானாற் போல, என்னால் உரைக்கப்பட்ட புன் சொல்லும் நல்லோர் செவிப்படுதலால் யாவருங் கைக்கொள்வர்—என்றவாறு.

1. எழுத்ததிகாரம்

நேமிநாதம் எழுத்ததிகாரம் முதல் வைப்பாகிய முதல் எழுத்துக்களின் பெயரும், முறையும், தொகையும் வருமாறு :

'ஆவி அகரமுதல் ஆறிரண்டாம் ஆய்தமிடை
மேவுங் ககரமுதன் மெய்களாம்—மூவாறுங்
கண்ணு முறைமையாற் காட்டிய முப்பத்தொன்று
நண்ணுமுதல் வைப்பாகு நன்கு.' —1

இங்கு தொல்காப்பியர் எழுத்துக்களின் வகை அவற்றின் பெயர் முதலியன பற்றிக் கூறியது வருமாறு :

1. 'எழுத்தெனப் படுப,
அகர முதல் னகர இறுவாய்
முப்பஃ தென்ப ;
சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே'

எனவும்,

சார்பெழுத்துக்கள் பற்றிக் கூறியது வருமாறு :

2. 'அவைதாம், குற்றியலிகரம், குற்றியலுகரம்
ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோரன்ன'

எனவும்,

எழுத்தின் எண்பற்றித் தொல்காப்பியர்:

8. 'ஔகார இறுவாய்ப் பன்னீ ரெழுத்தும்
உயிரென மொழிப'

எனவும்,

9. 'னகார இறுவாய்ப் பதினெண் எழுத்தும்
மெய்யென மொழிப'

எனவும் கூறியிருத்தல் கொண்டு ஆழ்ந்து உணர்ந்து உண்மை தெளிக.

நேமிநாத வெண்பாவின் பொருள்:

அகர முதல் ஔகார மீறுய்க் கிடந்த பன்னிரண்டும் உயிர் எனப்படும்; அதன் இடையிற் கிடந்த எழுத்து ஆய்தம் எனப்படும்; ககர முதல் னகர மீறுய்க் கிடந்த பதினெட்டும் மெய் எனப்படும்—என்றவாறு.

குணவீர பண்டிதர் ஆய்த எழுத்தைச் சேர்த்து முப்பத்தொன்று என்றனர். தொல்காப்பியர் ஆய்த எழுத்தைத் தனியாக்கி முப்பதென்றனர். விரிப்பிற் பெருகும் என்றஞ்சிவிடுகின்றேன்.

நேமிநாதம் முழுதும் அதன் நூற்பாக்கள்

சிறப்புப் பாயிரம் 2; பாயிரம் 1; அவையடக்கம் 1; எழுத்ததிகாரம் 24; அவை: முதல் எழுத்துக்களின் வகை; இரண்டாம் வைப்பாகிய சார்பெழுத்துக்களின் பெயரும், முறையும், தொகையும் வகையும், குற்றியலிகரமும், குற்றியலுகரமும், ஐகாரக் குறுக்கமும், ஔகாரக் குறுக்கமும், நிலை

மொழியீற்று மெய்யின்பின் உயிர் வரின் ஏறி முடியும் என்பதும்; மாத்திரை; பிறப்பு; முதனிலை; இறுதிநிலை; எழுத்துப் போலியும், உருவமும்; வட மொழி தமிழில் ஆகும் வகை; சில வடமொழிகளின் முடிபு; புணர்ச்சியின் பொது இலக்கணம், உடம்படு மெய்கள், சில ஒன்று ஈற்றுப் புணர்ச்சியும், இயல்புப் புணர்ச்சியும்; சில உயிரீற்றுச் சந்திகளும், சில ஒற்றீற்றுச் சந்திகளும்; ள, ண, ல, ன மெய்களின் முடிபு; மகர வீற்று முடிபு; சில அளவுப் பெயர் களின் முடிபு; சில எண்ணுப் பெயர்களின் முடிபு; சில தொடர்மொழிகளின் முடிபு; சில உயிரீறும் மெய்யீறுமாகிய சொற்களின் முடிபு; சில ஒற்றுக் களின் புணர்ச்சி முடிபும்; புணர்ச்சிக்குப் புறனடை யும் என்பனவாகும்.

2. சொல்லதிகாரம்

சொல்லதிகாரம் நூற்பாக்கள் 71. மொழி ஆக்க மரபு, வேற்றுமை மரபு, உருபு மயங்கியல், விளி மரபு, பெயர் மரபு, வினை மரபு, இசைச் சொல் மரபு, உரிச்சொல் மரபு, எச்ச மரபு என்பன. ஆக நேமி நாத வெண்பாக்கள் 99.

இங்கே தொல்காப்பியர் 'கிளவி' என்ற சொல் லினை, குணவீரபண்டிதர் 'மொழி' என்றனர். தொல்காப்பியர் 'இயல்' என்ற சொல்லினை குண வீர பண்டிதர் 'மரபு' என்றனர். அனைத்தும் ஒரு பொருளையே குறிப்பனவாம். இதுதான் இரு வருள்ளும் நிகழ்ந்துள்ள வேறுபாடு.

நேமிநாதர் சொல்லதிகாரம் தற்சிறப்புப் பாயிரம் வருமாறு :—

" தாதார் மலர்ப்பிண்டித் தத்துவனை வந்தித்துப்
போதார் நறுந்தெரியற் போர் வேற்கட்—பேதாய்
விரித்துரைத்த நூல்களினும் வேண்டுவன கொண்டு
தெரிந்துரைப்பன் சொல்லின் திறம்."

இதன் பொருள் : பழையவாய்ப் பரந்து கிடந்த நூல்களினும், புதியவாய் நல்லோராற் சொல்லப்பட்டு நடை பெற்றுவருஞ் சொற்களினும் வேண்டுவன கொண்டு சொல்லினை ஆராய்ந்து கூறுபடுத்துச் சொல்லுவன்—என்றவாறு.

இத்துணை வகையாற் சொல் ஆராயப்படும் என்பது

"ஏற்ற திணையிரண்டும் பாலைந்தும் ஏழ்வழுவும்
வேற்றுமை எட்டும் தொகையாறும்— மாற்றரிய
மூன்றிடமும் காலங்கண் மூன்றும் இரண்டிடத்தாற்
றேன்ற உரைப்பதாஞ் சொல். "

"இதன் பொருள்: இரண்டு திணை வகுத்தும், அத்திணைக்கண் ஐந்து பால் வகுத்தும், ஏழு வழு வகுத்தும், எட்டு வகைப்பட்ட வேற்றுமை வகுத்தும், ஆறு தொகை வகுத்தும், மூன்று காலம் வகுத்தும், இரண் டிடத்தான் ஆராயப்பட்டது சொல்," என்றவாறு.

இரண்டு திணையாவன: உயர் திணை, அஃறிணை என்பன.

ஐந்து பாலாவன: ஒருவன். ஒருத்தி, பலர், ஒன்று, பல என்பன.

ஏழு வழுவாவன: திணை வழு, பால் வழு, மரபு வழு, வினு வழு, செப்பு வழு, கால வழு, இட வழு என்பன.

வேற்றுமை எட்டாவன: பெயர், ஐ, சுடு, கு, இன், அது, கண், விளி என்பன.

தொகை ஆறுவன: வேற்றுமைத் தொகை, உம்மைத் தொகை, வினைத் தொகை, பண்புத் தொகை, உவமத் தொகை, அன்மொழித் தொகை என்பன.

மூன்றிடமாவன: தன்மை, முன்னிலை, படர்க்கை என்பன.

முக்காலமாவன: இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்பன.

இரண்டிட மாவன: வழக்கு, செய்யுள் என்பன. இவ்வெட்டு முகத்தானும் ஆராயப்பட்டது சொல் என்றவாறு.

—நேமிநாதம் சொல். 2

உயர் திணை

ஆசிரியர் தொல்காப்பியனுர்:

"உயர்திணை என்மனுர் மக்கட் சுட்டே;
அஃறிணை என்மனுர் அவரல பிறவே;
ஆயிரு திணையின் இசைக்குமன் சொல்லே"

—தொல். சொல். 1.

என்றருளினர்.

ஆசிரியர் தொல்காப்பியனார் 'உயர் திணை' பற்றிக் கூறிய கருத்து பெரிதும் ஆராய்தற் குரியது. அதுபற்றி உரையாசிரியர் பலர் உரைத் துள்ள கருத்துக்களும், குணவீர பண்டிதரும், பவ ணந்தி முனிவரும் உயர்திணை பற்றி நூற்பா இயற்றி யுள்ளமையும், அதற்கு உரை வரைந்துள்ள பல புலவர்களின் உள்ளப் போக்கும், அதன் கருத்துக் களும்; இடைக் காலத்தில் தமது உள்ளத்தில் எவ் வாறு சாதி எண்ணங்கொண்டு மாறுபட்டு இடர்ப்படு கின்றனர் என்பதும்; உயர் திணையின் பேரால் அறிவுலகில் சாதி கற்பித்து பரப்புரை வழங்கி மாண வர் உலகினை மயங்க வைத்துப் பாடங் கற்பிக்கும் இழிவும் இங்கு கருத்தூன்றி ஆராய்ந்து உணர்தற் குரியனவாம்.

மாணுக்கர் உய்த்துணர்தல்

"உயர் திணை என்மனார். மக்கட் சுட்டு என்பது-உயர் திணை யென்று சொல்லுவர் ஆசிரியர் மக்க ளென்று சுட்டப்படும் பொருளை என்றவாறு; அஃறிணை யென்மனார் அவரல பிற வென்பது-அஃறிணை யென்று சொல்லுவர் ஆசிரியர் மக்களல் லாத பிற பொருளை யென்றவாறு; ஆயிரு திணை யின் இசைக்குமன் சொல்லே என்பது—அவ்விரு திணையையும் இசைக்குஞ் சொல் என்றவாறு."

"உலகத்து மக்கள் என்ற பொருளை உயர்திணை யென்றது கூறுபாடின்மையின் அஃறிணை கூறு பாடுடைமையின், அஃறிணை யென்மனார் அவரல என்னது, பிற என்ருன்; அவை உயிருடையனவும்

உயிரில்லனவும் என இரண்டு கூற்றன என்றற்கு அவற்றது கூறுபா டெல்லாம் அறிந்து கொள்க"- இஃது இளம்பூரண அடிகள் கொண்ட உரை.

"மக்களென்று கருதப்படும் பொருளை ஆசிரியர். உயர் திணை யென்று சொல்லுவர்; மக்களென்று கருதப்படாத பிற பொருளை அஃறிணை யென்று சொல்லுவர்; அவ்விரு திணை மேலும் சொற்கள் நிகழும் என்றவாறு."

"மக்கட் சாதி சிறந்தமையான் உயர் திணை யென்றார்"

"ஈண்டு மக்கள் என்றது மக்கள் என்னும் உணர்வை"

"மாணாக்கர்க்கு உணர்வு பெருகல் வேண்டி வெளிப்படக் கூறாது. உய்த்துணர வைத்தல் அவர்க்கு இயல்பாகலான்"

"உயர் திணை மக்கள் அஃறிணை பிற எனல் வேண்டும் என்பது"

—இது சேனாவரையர் கண்ட பொருள்.

உயர்ந்த ஒழுக்கம்

'உயர் திணை' என்பது, 'உயர்ந்த ஒழுக்கம்' என இறந்த கால வினைத்தொகை. அஃது ஆகு பெயரால் அப் பொருளை உணர்த்தி நின்றது. இதனைப் பண்புத் தொகை என்பாரும் உளர். அது பொருந்தாது. என்னை? இது காலம் தோன்றி நிற்றலின்.

'மக்கட் சுட்டு' என்பது, 'மக்களாகிய சுட்டு' என இரு பெயரொட்டுப் பண்புத் தொகை. சுட்டு-நன்கு மதிப்பு. 'அஃது ஆகு பெயராய் மக்கட் பொருளை உணர்த்தி நின்றது.

சேனவரையர் இதனைப் பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன் மொழித் தொகை என்றா ராலோ எனின்; இரு பெயரொட்டு ஆகு பெயர்க்கும் அன் மொழித் தொகைக்கும் வேறுபாடு உணராமல் கூறினமையின், அது பொருந்தாது.

'என்னை வேறுபாடு?' எனின், ஈண்டு ஆகு பெயராய் நின்ற நன்கு மதிக்கும் பொருளும் மக்களையே உணர்த்தி நிற்கும். அன் மொழித் தொகை அவ்வாறன்றி, 'வெள்ளாடை' என்றால் வெண்மையும் ஆடையும் அன்றி உடுத்தாளையே உணர்த்தி நிற்கும். இது தம்முள் வேற்றுமை.

'இனிச் சேனவரையர், 'மக்கட் சுட்டு' என் பதற்கு மக்களாகிய சுட்டு யாதன்கண் நிகழும்? அது மக்கட் சுட்டு,' என்றும்,...........அன்றியும், ஆசிரியர் ஈண்டு ஒரு பொருள் நின்று தன்னை ஒரு வற்கு உணர்த்துமாறும் ஒருவன் அதனை உணரு மாறும் ஆராய்கின்றார் அல்லர்;

'உயர்ந்த ஒழுக்கம்' என்று முதனூலாசிரியர் கூறிய குறி உலகத்தார்க்கு விளங்கப் பொருள் கூறக் கருதி, அதன் பலன் எய்துவிப்பத் தாமும் 'மக்களாகிய நன்கு மதிக்கும் பொருள்' என்று அச் சொற்குப் பொருள் கூறினர் என்று உணர்க. அவர் கூறிய உயர்ச்சி தோன்றத் தாமும் 'நன்கு

மதிப்பு' என்று பொருள் கூறினர், தாமும் 'உயர் திணை' என்றே ஆளுதல்பற்றி.

"மக்கட் சுட்டே-மக்களாகிய நன்கு மதிக்கப் படும் பொருளை, உயர் திணை என்மனர்-உயர் திணை என்று கூறுவர் தொல்லாசிரியர்; அவர் அல பிறவே-அம் மக்கள் அல்லாத பிற பொருளை, அஃறிணை என்மனர்-அஃறிணை என்று கூறுவர் தொல்லாசிரியர்; ஆயிரு திணையின் இசைக்குமன் சொல்லே-அவ் விரு திணைப் பொருள்களையும் உணர்த்தும் சொற்கள்-என்றவாறு."

—இது நச்சினர்க்கினியர் கண்ட பொருள்.

அகத்திணை, புறத்திணை

அறிவுத் துறையினில் நுண்ணுணர்வும் நுண் பொருட் பொலிவும் திருவருட் பெருமையும் பிறங்கி யவர் ஆசிரியர் தொல்காப்பியனர். பண்டு மக்களின் வாழ்வின் இலக்கணமாய் எழுந்த பண்டைப் பனுவல்களினின்று தமது நுண்ணறிவுத் திறங் கொண்டு வடித்தெடுத்து நுண் பொருட் செறிவுடன் தொல்காப்பியம் எனும் நுண்ணிய நூலினை இயற்றி னர். அதனுள் அகத்திணை புறத்திணை எனுந் தலைப்பின் கீழ், மக்கள் உள்ளத்து நிகழும் அக உணர்ச்சி புற உணர்ச்சிகளைப் பல கூறுபடுத்தி யுள்ளனர். இன்ப உணர்ச்சி, பொருள் உணர்ச்சி, அற உணர்ச்சி ஆகியவற்றினைப் பலதுறைகளாக வகுத்திருக்கின்றனர். திணை எனும் பெயரால் ஒழுக்க உணர்ச்சிகளை இனிது எடுத்துத் தெளிவு படுத்தி விளக்கியுள்ளனர்.

திணை

திணை என்ற சொல், பல பொருள் நிறைந்த சொல், அறிவு விளக்கந்தருஞ் சொல். இச்சொல், வாழ்வின் எல்லாத் துறைகட்கும் நம்மை அறிவு வழி நடாத்திச் செல்லுகின்றது; நமக்கு ஒரு வழி காட்டியாய் அமைந்துள்ளது. மக்கள் அக வாழ்வு புற வாழ்வு பற்றிய இலக்கணங்களை ஒருங்கு திரட்டிப் பொருட்களைக் குறிப்பிடும் இடங்கள் தோறும் ஆசிரியர் தொல்காப்பியனர் திணை திணை என்றே எடுத்து இயம்பிச் செல்கின்றனர்.

நுண் பொருள்

திணை என்ற சொல்லினைத் தொடர் மொழியாகக் கொண்ட ஒவ்வொரு சொல்லின் உட்பொருளும் ஆழ்ந்து ஆராய்தற்கு உரியன. திணை என்ற சொல்லினை ஆசிரியர் தொல்காப்பியனர் அவ்வாறு அமைத்திருக்கின்றனர். இது போன்ற ஆராய்தற்கு உரிய நுண்பொருட் செறிவுடன் சிறந்து விளங்கும் தனித் தமிழ்ச் சொற்கள் தொல்காப்பிய நூலினுட் பல மலிந்து கிடக்கின்றன. அவைகளுட் தலைசிறந்த ஒன்ருன திணை என்ற தனித் தமிழ்ச் சொல் இக்கால உலக வழக்கில் இடமற்றுப் போயிற்று. இக்கால மக்களின் அறிவிற்கு விளங்காது தமிழிற் புதையுண்டு மறைந்து கிடக்கின்றது திணை என்ற சொல்.

அறிவுக்கு விருந்து

திணை என்ற சொல் பல பொருள் குறிக்கும் ஒரு சொலலாய் மிளிர்கின்றது. திணை என்ற

சொல்லினை ஆழ்ந்து ஆராயும் போது உள்ளம் பல கருத்துக்களிற் சுழல்கின்றது; சுழன்று சுழன்று படிகின்றது; படிந்து மேலுமேலும் ஆராய்ச்சி அறிவு எழுச்சிக்குப் பெருந்துணை செய்கின்றது; அறிவுக்குப் பெரு விருந்தளிக்கின்றது.

இயற்கை இனிமை அமைந்த தனித் தமிழின் உண்மை இயல் நெறியின் அடியினின்று ஆசிரியர் தொல்காப்பியனார் அருளிய தொல்காப்பியம் சொல்லதிகாரம் முதல் இயல் கிளவியாக்கம் முதற்பாவின் முதல் வைப்பாயுள்ள 'உயர்திணை' என்ற சொல் விளங்குகின்றது. இச் சொல்லின்மீது உள்ளத்தை ஊன்றி ஆராயும்போது, பழந்தமிழ்ச் சொற்களின் மீது மாசுபடிந்து மறைப்புண்டு கிடக்கும் பல உண்மைப் பொருட்களிடத்து உள்ளுணர்ச்சி ஒளி வீசி அறிவின்பம் அளிக்கின்றது.

"உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே" என்று உலகிற்கு விளங்கப் பொருள் கருதித் தொடங்குகின்றார், ஆசிரியர் தொல்காப்பியனார்.

'உயர்திணை'' என்பது, மக்கள் வாழ்வின் இலக்கணங்கள் அனைத்தையும் திரட்டிக் கூறும் பலபொருள் நிறைந்த ஒரு சொல். இச்சொல், தனிப் பொருளும் சிறப்புப் பொருளும் பொதுப் பொருளும் தருகின்றது. 'உயர் திணை' என்ற சொல்லின் திரண்ட பொருள் 'உயர்ந்த ஒழுக்கம்' என்பது. மக்களைச் சுட்டும் 'உயர்ந்த ஒழுக்கம்' என்ற உட்பொருளினைத் தன்னகத்துட் கொண்டு தெளிவுற விளக்கவைப்பது 'உயர்திணை' என்ற

சொல். இச்சொல் நுண்பொருள் நிறைந்த செம்பொருள் ஊற்றெனத் திகழ்கின்றது. இது மக்களின் உயர்ந்த அறிவினைக் குறிப்பிடும் உயர் பண்பினைச் சுட்டுகின்றதே யன்றி, மக்களுள் வேறுபாட்டுணர்ச்சியினைக் கற்பிக்கும் கருத்துடன் முதனூல் ஆசிரியர் தொல்காப்பியனார் குறித்தாரல்லர். ஆசிரியர் கருத்தும் அஃது அன்று.

மக்கள், நரகர், வானோர், தேவர்

பின் வந்த குணவீர பண்டிதரும், பவணந்தி முனிவரும் உயர் திணையின் பெயரால் ஆசிரியர் தொல்காப்பியனாரின் கருத்திற்கு மாறாக மக்கள் நரகர் வானோர் எனவும், மக்கள் தேவர் நரகர் எனவும் நூற்பா செய்து இலக்கண உலகில் மக்களை மயங்க வைத்தனர். இதனால் மக்களுலகில் விளையும் தீங்கினை இரு நூலாசிரியரும் மறந்தனர்; அக்கால நிலை அவர்களை அவ்வாறு நூற்பா இயற்றுமாறு தூண்டிற்றுப் போலும்! இந் நூற்பாக்களுக்கு உரை எழுதியுள்ள பிற்காலப் புலவர்களும் இதற்குத் தகுந்தவாறு உரை எழுதி, மக்களின் அறிவை மாசு படுத்தினர்; மக்களின் வேறுபாட்டுக்கு வித்தூன்றி நீர்விட்டு வளர்த்து வந்திருக்கின்றனர் என்பதை, இக்கட்டுரையின் இறுதியில்வரும் குறிப்புக்கள் நமக்கு எடுத்துக்காட்டுகளாக அமைந்துள்ளன.

குணவீர பண்டிதர் :

"மக்கள் நரகரே வானோர் எனும் பொருள்கள்
தொக்க உயர் திணையாம்"

என்றனர்.

பவணந்தி முனிவர் :

"மக்கள் தேவர் நரகர் உயர்திணை"

என்றனர்.

இதனை இத்துடன் நிறுத்திவிட்டு, ஆசிரியர் தொல்காப்பியனாரின் கருத்தினை முதலில் அறிய முயல்வோம்.

'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே'

உயர் - உயர்ந்த ; திணை - ஒழுக்கம் ; உயர்திணை - உயர்ந்த ஒழுக்கம்.

'ஒழுக்கம் விழுப்பந்தருவது; ஆகலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்பது திருவள்ளுவனார் கருத்து.

ஒழுக்கம், மக்களுள் சிறந்த—நன்கு—மதிப்பளிக்கும் பொருள். அதனால் உயர்திணை என்றனர்.

என்மனார்–என்று சொல்லுவர் ஆசிரியர்; என்று சொல்லுவர் முந்து நூலாசிரியர்; என்று சொல்லுவர் புலவர் ; என்று சொல்லுவர் அறிஞர் ; என்று சொல்லுவர் சான்றோர் எனவும் பொருள் உரைக்கலாம்.

"மக்கள் தாமே ஆறறி உயிரே"

இங்கே மக்களின் அறிவைக் குறித்தனர் ஆசிரியர் தொல்காப்பியனார்.

மக்கட் சுட்டே—மக்களைக் குறித்தே சுட்டு-நன்கு மதிப்பு

மக்களைக் குறித்தே உயர்ந்த ஒழுக்கம் என்று சொல்லுவர் பழந்தமிழ்ச் சான்றோர் என்பது இதன் கருத்து.

திணை - திண்மை ; கலங்கா நிலைமை ; ஒழுக்கம் ; உணர்ச்சி ; குலம் ; நிலம் எனப் பல பொருள் தருகின்றது.

" பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை யுண்டாகப் பெறின்."

என்றனர் ஆசிரியர் திருவள்ளுவனார்.

உயர்ந்த ஒழுக்கத்தினின்று அறிவு, அன்பு, அருள், அறம், இன்பம் எனப் பல நல்லியல்பு உணர்விற் காட்சியளிக்கும் என்பர் சான்றோர். இக் கருத்தினை அடிப்படையாக வைத்தே ஆசிரியர் தொல்காப்பியனார் நூல் செய்துள்ளனர்.

" ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்."

" ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்."
குடிமை—ஒழுக்கத்தில் உயர்ந்த குடி.

" குடிபிறந்து தன்கண் பழிநாணுவானைக்
கொடுத்தும் கொளல் வேண்டும் நட்பு."

" எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்."

திண்ணியர்—திண்மை யுடையார்.

இவ்வாறு பல கருத்துக்களை ஆசிரியர் திருவள்ளுவனார், ஆசிரியர் தொல்காப்பியனார் வகுத்த இலக்கண நெறிக்கு வழங்கி அரண் செய்கின்றனர்.

இவ்வாறு ஒவ்வொன்றினையும் தனித்தனி எடுத்து ஆராயும் போது, ஆசிரியர் தொல்காப்

பியனார் கண்ட நுண்பொருள் விளக்கமாகத் திருவள்ளுவனார் அருளிய திருக்குறளில் காட்சியளிக்கிறது.

இனி, ஆசிரியர் தொல்காப்பியனார் திணை என்ற சொல்லினை எந்த எந்தத் துறைகளிற் பயன்படுத்துகின்றனர் என்பனவற்றை ஈண்டு சிறிது காண்போம்.

பொதுமை பற்றி மக்களைச் சுட்டும்போது உயர் திணை என்றனர்.

மக்களல்லாத பிறவற்றினைப்பற்றிக் கூறும் போது அஃறிணை என்றனர்.

மக்களுள்ளத்து எழும் அக உணர்ச்சி புற உணர்ச்சிகளைக் குறிப்பிடும் போது அகத்திணை புறத்திணை என்றனர்.

அகத்திணை

அகத்திணை எனக் கூறப்படும் அகப்பொருட் குரிய திணைகளை, மக்கள் உள்ளத்து நிகழும் ஒழுக்க உணர்ச்சி பலவற்றைக் கூறுபடுத்தி உரைக்குமிடத்து எழுதிணை என்றனர். அது :

“ கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப.”

—தொல்-அகத். 1.

என்பது.

எழுதிணை : கைக்கிளைத் திணை ; முல்லைத் திணை ; குறிஞ்சித் திணை ; பாலைத் திணை ; நெய்தல் திணை ; மருதத் திணை ; பெருந்திணை என்பன.

எழுதிணையுள், தமக்கென நிலம் பெறுவன வற்றை நடுவண் ஐந்திணை என ஒரு பகுதியை உட் படுத்தினர். அது :

" அவற்றுள்,
நடுவண் ஐந்திணை நடுவண தொழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே "

—தொல். அகத் 2.

எனபது.

அவை : முல்லைத் திணை ; குறிஞ்சித் திணை ; பாலைத் திணை ; நெய்தல் திணை ; மருதத் திணை என்பன.

இவ்வாறு, நுண்ணறிவு சான்ற ஆசிரியர் தொல் காப்பியனர் அகத்திணை உணர்ச்சியைக் கைக்கிளை முதலாகப் பெருந்திணையிறுவாக எழுவகையாக்கி, கைக்கிளையையும் பெருந்திணையையும் அகற்றி, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை எனும் நடு வண் ஐந்திணைகளையும் அக ஒழுக்கத்திற்கு எடுத்துக் கொண்டனர்.

" இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை "

—தொல். களவு. 1.

எனக் காதல் ஒழுக்க உணர்ச்சி பற்றிக் கூறினர்.

புறத்திணை

மக்களுள்ளம் புறப்பொருள் உணர்ச்சிபற்றி எழும் ஒழுக்க உணர்ச்சிகளைப் புறத்திணை என்றனர். அகத்திணைக்கு நேர் புறத்திணை வகுத்தனர்.

அவை : வெட்சித் திணை; வஞ்சித் திணை; உழிஞைத்திணை; தும்பைத் திணை; வாகைத் திணை; காஞ்சித் திணை; பாடாண்டிணை என்பன.

"அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்
புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்
வெட்சிதானே குறிஞ்சியது புறனே."—தொல் புறத். 1
"வஞ்சி தானே முல்லையது புறனே" ,, ,, 6
"உழிஞை தானே மருதத்துப் புறனே" ,, ,, 9
"தும்பை தானே நெய்தலது புறனே" ,, ,, 14
"வாகை தானே பாலையது புறனே" ,, ,, 18
"காஞ்சி தானே பெருந்திணைப் புறனே" ,, ,, 22
"பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே" ,, ,, 25

ஆசிரியர் தொல்காப்பியனாரின் உள்ளத்தின் உண்மைக் கருத்தினை அறிய வேண்டுமாயின் ஒவ்வொரு திணையையும் தனித்தனி ஆராய்ந்து தெளிதல் வேண்டும்.

இவ்வாறு வரும் மேற்கண்ட திணை எனுஞ் சொற்களை அடுத்து வரும் தொடர்மொழி ஒவ்வொன்றின் உட்பொருளையும் ஆசிரியர் தொல்காப்பியனார் முறைப்படுத்தி நூல் செய்திருக்கும் அரிய செயலை இதற்கு முன்னும் பின்னும் உலகில் வேறு எந்த நாட்டிலும் எந்த மொழியிலும் எந்த அறிஞரும் செய்யவுமில்லை; இனிச் செய்யவும் இயலாத அளவு ஆசிரியர் தொல்காப்பியனார் நூல் செய்திருக்கின்றனர் என்பதும், பல பேரறிஞர் கருத்தும் இதுவேயாகும்.

10

தொல்காப்பியரும் குணவீர பண்டிதரும் பவணந்தி முனிவரும்

பேடியும் தெய்வமும் திணை பால்களுள் அமையுமாறு

"பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவியும்
தெய்வம் சுட்டிய பெயர் நிலைக் கிளவியும்
இவ்வென அறியும் அந்தந்தமக் கிலவே;
உயர்திணை மருங்கின் பால்பிரிந் திசைக்கும்"

—தொல். கிளவி. 4.

இளம்பூரண அடிகள் உரை: "பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின் என்பதனை மொழிமாற்றி, உயர் திணை மருங்கின் பெண்மை சுட்டிய எனக் கொள்க.

தெய்வஞ் சுட்டிய பெயர் நிலைக் கிளவியும் என்பது—தெய்வத்தைச் சுட்டிய பெயர்ப்பொருளும் என்றவாறு;

இனிப் பெயர் நிலைக் கிளவி யென்பதற்கு ஒருவன் சொல்லுவது: பெயர் என்பதனை ஆகு பெயராற் பொருளாக்கி, பொருண்மேல் நிலைபெற்ற கிளவி என்னும்;

இவ்வென அறியும் அந்தந் தமக்கிலவே என்பது—தம்மை வேறு பாலறிய நிற்கும் ஈற் றெழுத்தினை யில என்றவாறு;

உயர்திணை மருங்கில் பால் பிரிந்து இசைக்கும் என்பது—உயர்திணை மருங்கின் முப்பாலினையும் புலப்படுக்கும் எழுத்தினைத் தமக்கு ஈறாக இசைக்கும் என்றவாறு.

வரலாறு : பேடி வந்தான், பேடி வந்தாள், பேடியர் வந்தார் எனவும் ; வாசுதேவன் வந்தான், திருவனுள் வந்தாள் எனவும்; முப்பத்து மூவரும் வந்தார் எனவும் வரும்.

'இவ்வென அறியும் அந்தம் தமக்கிலவே" என்னும் இலேசினால், நரகன் வந்தான், நரகி வந்தாள், நரகர் வந்தார் எனக் கொள்க."

சேனாவரையர் கண்ட பொருள் :

"உயர்திணை யிடத்தும் பெண்மைத் தன்மை குறித்த ஆண்மை திரிந்த பெயர்ச் சொல்லும், தெய்வத்தைக் குறித்த பெயர்ச்சொல்லும், இவையெனத் தம் பொருளை வேறு அறியநிற்கும் ஈற்றெழுத்தினைத் தமக்குடைய அல்ல, உயர்திணையிடத்து அதற்குரிய பாலாய் வேறுபட்டு இசைக்கும் ; என்றவாறு.

எடுத்துக் காட்டு : பேடி வந்தாள், பேடர் வந்தார், பேடியர் வந்தார் எனவும் ; தேவன் வந்தான், தேவி வந்தாள், தேவர் வந்தார் எனவும் வரும்.

அலிப் பெயரின் நீக்குதற்குப் 'பெண்மை சுட்டிய' என்றும் ; மகடூஉப் பெயரின் நீக்குதற்கு 'ஆண்மைதிரிந்த' என்றுங் கூறினார்.

பால் வேறுபட்டு இசைத்தலாவது தாம் உயர்திணைப் பெயராய் ஆடூஉ அறி சொல் முதலாயின

வற்றிற்குரிய ஈற்றெழுத்தே தம் வினைக்கு ஈறாக இசைத்தல்.

உயர்திணை மருங்கிற் பால் பிரிந்திசைக்கும் எனவே தமக்கென வேறு ஈறு இன்மை பெறப் படுதலின், 'இவ்வென அறியும் அந்தம் தமக்கிலவே' எனல் வேண்டா எனின் தமக்கென வேறு ஈறு உடையவாய் ஆடூஉ வறி சொல் முதலாயின வற்றிற் குரிய ஈற்றானும் இசைக்குங் கொல் என்னும் ஐயம் நீக்குதற்கு, 'அந்தம் தமக்கிலவே' எனல் வேண்டும் என்பது.

பாலுள் அடங்காத பேடியையும் திணையுள் அடங்காத தெய்வத்தையும் பாலுள்ளும் திணையுள் ளும் அடக்கியவாறு."

நச்சினார்க்கினியர் கண்ட பொருள் :

"உயர்திணை மருங்கின் பெண்மை சுட்டிய— ஒருவன் உயர்திணை யிடத்துப் பெண்பாற்கு உரிய அமைதி தன்மையைக் கருதுதற்குக் காரணமான,

ஆண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவியும்— ஆண்பாற்கு உரிய ஆளும் தன்மை திரிந்த பெயர்ப் பொருளும்.

தெய்வம் சுட்டிய பெயர் நிலைக் கிளவியும்— தெய்வத் தன்மையைக் குறித்த பெயர்ப் பொருளும்,

இவ்வென அறியும் அந்தம் தமக்கு இலவே— இவை யெனத் தம் பெயர்ப் பொருளினை வேறு அறிய நிற்கும் ஈற்று எழுத்தினையுடைய சொற்களைத் தமக்கு உடைய அல்ல ;

உயர்திணை மருங்கின் பால் பிரிந்து இசைக்கும்— உயர்திணை இடத்திற்கு உரிய பாலாய் வேறுபட்டு இசைக்கும் என்றவாறு.

பால்பிரிந்து இசைத்தலாவது, தாம் உயர்திணைப் பொருளாய் அவற்றின் ஈற்றினால் இசைத்தலாம்.

பேடியைப் பாலுள்ளும் தெய்வத்தைத் திணையுள்ளும் அடக்கினார்.

எடுத்துக்காட்டு : பேடி வந்தாள். பேடியர் வந்தார். தேவன் வந்தான். தேவி வந்தாள். தேவர் வந்தார். என வரும்.

நரகன் வந்தான். நரகி வந்தாள். நரகர் வந்தார். அலி வந்தான். அலியர் வந்தார். மகண்மா வந்தாள் எனவரும்."

ஆசிரியர் தொல்காப்பியனார் அருளிய நூற்பாவின் கருத்தினை விளக்க எழுந்த இளம்பூரண அடிகளும், சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் பேடி, பேடர், பேடியர்; தேவன், தேவி, தேவர்; நரகன், நரகி, நரகர்; அலி அலியர், மகண்மா ஆகிய சொற்களை எடுத்துக் காட்டாக ஆண்டிருக்கின்றனர் என்பது, அவர்கள் வரைந்துள்ள உரைகளினின்றும் தெரிகின்றன. எடுத்துக் காட்டாக ஆண்ட சொற்களையே குணவீர பண்டிதரும், பவணந்தி முனிவரும் மக்கள், தேவர், நரகர், வானோர் என அமைத்து, உயர்திணையின் பெயரால் நூற்பா செய்துள்ளனர் என்பதும், ஆசிரியர் தொல்காப்பியனார் செய்த நூற்பாவின் அடிப்படைக் கருத்தும், பழைய உரையாசிரியர் மூவரும் தமது கருத்துக்களை எடுத்து விளக்கி ஐயம் அகற்றியுள்ள விளக்கங்

களும், நன்னூற் பாவிற்கு இடைக்காலத்தில் எழுதிய உரையாசிரியர்களின் உள்ளப் போக்கும், அதன் உரைகளும் அமைதியுடன் ஆழ்ந்து அறிந்து உண்மை தெளிதல் வேண்டும் என்பது சிறியேனது வேண்டுகோள்.

உயர்ந்த ஒழுக்கத்தினைக் குறிக்கும் மக்களிற் தன்மை திரிந்த பேடி, பேடன், பேடியர் என்ற பெயர்கள் தமக்கு எனப் பால் உணர்த்தும் ஈறு-முடிவு இல்லனவாய் மக்கட் பெயர்க்கு உரிய முடிவு களையே கொண்டு தாம் உயர்திணைப் பொருளாய் பால் பிரிந்து வரும் எனவும்; பாலுள் அடங்காத பேடியையும் திணையுள் அடங்காத தெய்வத்தையும் பாலுள்ளும் திணையுள்ளும் தமக்கு என வேறு முடிவு இன்மையால், இவை யெனத் தம் பெயர்ப் பொருளினை வேறு அறிய நிற்கும் ஈற்று எழுத்தினை யுடைய சொற்களைத் தமக்கு உடைய அல்ல. ஆக லான் உயர்திணை இடத்திற்கு உரிய பாலாய் வேறு பட்டு இசைக்கும் எனவும் பொருள்பட இளம்பூரண அடிகளும், சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் ஐயம் அகற்றுகின்றனர்.

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூலாகும்."—தொல். மரபு 95

"வழக்கு எனப்படுவது உயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கட் டாகலான." 93

"மரபு நிலை திரிதல் செய்யுட் கில்லை
மரபு வழிப்பட்ட சொல்லினான." 91

"மரபு நிலை திரியின் பிறிது பிறிதாகும்." 92

எனவும் ஆசிரியர் தொல்காப்பியனார் உணர்த்து கின்றனர்.

உரைக்கப்படுகின்ற சொற்கள் உண்மையினல் இயல்பாகத் தானே அறிந்து, முன்னேராற் கருதிச் சுட்டப்பட்ட உயர்ந்தோர் வழக்கிலிருந்து தோன்று வது எனும் கருத்துடன் ஆசிரியர் தொல்காப்பியனுர் நூல் செய்துள்ளனர்.

நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவர் தமது நூலுக்குப் புறனடையாக,

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினனே"

என்று நூற்பா இயற்றியுள்ளனர்.

பழையன கழிதலின் பேரால் புதுமை யெனப் புகழ்ந்து மடமையை வலிந்து புகுத்தலும், புதியன புகுதலின் பேரால் பழைமையான உண்மையை மடமையால் அறிய ஆற்றலிழந்து இகழ்ந்து அகற்ற லும் அறிவு நூன் முறைமைக்குச் சிறிதும் ஒத்தன வாகத் தோன்றுமாறில்லை.

பழைமை எனினும் உண்மை உளதாயின் அஃது உலகில் உயர்ந்தோர் உள்ளத்து எஞ்ஞான்றும் முதல் இடம் பெறும்.

ஆசிரியர் தொல்காப்பியனரின் நூல் உண்மை யின் உறைவிடம். நன்னூலாரின் புதியன புகுதல் எனும் விதிக்கு மாறுபட்டது தொல்காப்பியம். பண்டை மக்களின் வாழ்வின் பழைமையைக் காக்க வந்த நூல் தொல்காப்பியம். பழைமைக்கும் புது மைக்கும் என்றும் எக்காலத்தும் அறிவுடை யுலகில் முதலிடம் பெற்றுத் திகழும் நூல் தொல்காப்பியம்.

நன்னூலாரின் புறனடைச் செய்யுளை, நுண்ணறிவின் ஆழமறியார், தங்கோள் நிறுவுதற்கு அடிக்கடி எடுத்தியம்பி அறிவுடைய உலகினை மயங்க வைப்பதற்கு ஓர் எடுத்துக் காட்டாக வழங்கி வருவர். இஃது உண்மையை ஊன்றி அறிய இயலாதார் வழங்கும் எடுத்துக் காட்டாகும். இவ்வழக்கு விரைவில் மறைதல் மாணவர் உலகில் நலன் விளையும் என்பது தனித் தமிழின் இயல்நெறி கண்ட உண்மையாளர் துணிபு.

பழங்காலத் தனித் தமிழர் பண்பாட்டை விளக்கப் புகுந்தவர் ஆசிரியர் திருவள்ளுவர். திருவள்ளுவர் திருவுள்ளக் கருத்தினைத் தமிழ் மக்கள் ஆழ்ந்து கற்றல் வேண்டும். திருவள்ளுவர் காலத்துக்கு முன் தனித் தமிழ்க் கொள்கையில் பெரிதும் மாசு படிந்து விட்டது. அம் மாசினை அகற்றத் திருக்குறள் இயற்றினர் ஆசிரியர் திருவள்ளுவர். அயலவர் கொள்கை பல, தமிழரிடைப் பரவி யிருந்தன. அயலவர் கட்டி விட்ட அறிவற்ற கற்பனைகளை நம் தமிழக மக்கள் நாளடைவில் நம்பி ஏமாற்றம் அடைந்தனர். மாறுபட்ட பிறவிப்பிணி, மாறுபாடறியாத தமிழ் மக்களைக் கவ்விற்று. அதனால் ஒன்றுபட்ட தமிழ் மக்களின் உயர் வாழ்வு சிதைவுற்றது. 'தமிழர் இயல்நெறிப் பண்பினை அயலவர் நுழைவும் அயலவர் கொள்கையும் விழுங்கிற்று'. இடையில்வந்து நுழைந்த அயலவர், தங்களைச் சார்ந்தார் மேலவரென்றும், உயர்ந்தவரென்றும், வானோரென்றும், தேவரென்றும்; தங்கள் தலைவன் வலிமிக்குடையன் எனவும்; தங்கள் நாடு இன்ப வடிவானதென்றும் பழந் தமிழ்

மக்கள் நம்புமாறு ஆக்கிவைத்தனர். இக் கொள் கையில் ஊறிய இடைக் காலத்தவர் நூல்களிலும், நூலுரைகளிலும் அவ் அயல் மொழிக் கொள்கை யைப் புகுத்தித், தூய தனித் தமிழின் இலக்கண நெறிக்கு இழுக்குண்டாக்கினர். இவை யனைத்தும் இக்கால ஆராய்ச்சியாளர் அறிந்தனவேயாம். இக்கட்டுரையின் இறுதியில் திருவள்ளுவர் கருத் தினையும், வானோர், தேவர், நரகர் யாவர் என்பது பற்றியும் ஆராயப்படும்.

நேமிநாத ஆசிரியர் குணவீர பண்டிதர் 'உயர் திணை' என்பதுபற்றிக் கூறிய வெண்பா வருமாறு:

"மக்கள் நரகரே வானோர் எனும் பொருள்கள்
தொக்க உயர்திணையாம் தூமொழியாய் - மிக்க
உயிருள்ளனவும் உயிரில்லனவும்
செயிரில் அஃறிணையாம் சென்று" 3

இதன் பொருள்: மக்கள் என்றும், நரகர் என் றும், தேவர் என்றும் சொல்லப்பட்டன உயர்திணை யாம். இம் மூன்றினையுஞ் சொல்லுஞ் சொல் உயர் திணைச் சொல்லாம். இவர்கள் ஒழியக் கிடந்த உயி ருள்ளனவும், உயிரில்லனவும் அஃறிணைப் பொரு ளாம். இவ்விரண்டனையுஞ் சொல்லுஞ் சொல் அஃறிணைச் சொல்லாம் என்றவாறு.—இது நேமி நாதத்திற் கண்ட உரை.

நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவர் 'உயர் திணை' பற்றிக் கூறிய நூற்பா வருமாறு:

"மக்கள் தேவர் நரகர் உயர்திணை
மற்றுயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை"

இதன் பதவுரை: மக்கள் - மக்களும், தேவர் - தேவரும், நரகர் - நரகரும், உயர் திணை - உயர் திணையாம்; மற்று உயிர் உள்ளஉம் - அவரொழிந்த விலங்கு முதலாகிய உயிருள்ளவையும், இல்ல உம் - நிலம் நீர் முதலாகிய உயிரில்லாதவையும், அல்திணை - அஃறிணை யாகும் என்றவாறு.—இது திருத்தணிகை விசாகப் பெருமாளையர் இயற்றிய காண்டிகையுரை.

விசாகப் பெருமாளையர் தான் ஆசிரியர் திருவள்ளுவனார் இயற்றிய திருக்குறள் பரிமேலழகர் உரையின் இறுதியில் காணப்படும் திருவள்ளுவ மாலைக்கு உரை எழுதியவரென்றும், அது சமயம் திருவள்ளுவனாரின் வரலாற்றினையும் இவரும், இவர் சகோதரர் சரவணப் பெருமாளையரும் கூடி எழுதித் திருவள்ளுவரை மாசு படுத்தினர் என்றும் நமது நாட்டு நல்லறிவுடைய பெரியார் சிலர் கூறியிருப்பது இங்கு நினைவிற்கு வருகிறது.

இவர்களின் தந்தையார் பெயர் திருத்தணிகை கந்தப்பையர். பெருந்தமிழ்ப் புலவர். தந்தையார் வழி வந்த இருவரும் நல்ல தமிழ்ப் புலமை வாய்ந்தவர்களெனவும், இலக்கண இலக்கியத் துறையில் தமிழுக்கு நல்ல தொண்டு செய்தவர்களெனவும் வரலாற்றுரைகள் குறிப்பிடுகின்றன. இவர்கள் வாழ்ந்த காலம் பத்தொன்பதாம் நூற்றண்டின் தொடக்கமென்பர்.

மக்கள், தேவர், நரகர் எனப்படுதல் அவ்வவ் யாக்கையும் உயிரும் கூடி நின்ற வழி ஆதலின் அவை பிரிந்த வழியும் அவருயிரையும் உடம்பையும் உயிரில்லனவாகிய அஃறிணை யாகக் கொள்ளப்படுமென்க. விலங்கு முதலியவற்றின் உயிருடம்புகளும் அன்ன.

மக்களாய்ப் பிறந்து புண்ணிய பாவம் இயற்றிப் புண்ணிய மிகுதியால் தேவராயும், பாவ மிகுதியால் நரகராயும் பிறத்தலின், மக்கள் தேவர் நரகர் எனச் சாதன சாத்திய முறையே வைத்தாரென்க.

"திணை நிலங் குலனொழுக்கம்" என்பவாகலின் திணை என்னும் பல பொருளொரு சொல் ஈண்டு குலத்தினை யுணர்த்தி நின்றது.

உயர்திணை அல்லாத திணை அஃறிணை எனப் பட்டது. இவ்விரண்டும் பண்புத் தொகை; உயர்வாய குலம், அஃதன்மையவாய குலம் என விரியும்.

அடை யடுத்த இவ்விரண்டு சாதிப் பண்புகளும் ஆகு பெயராய்ப், பண்பிகளை உணர்த்தி நின்றன. திணை என்பது ஒழுக்கம். அஃது ஆகு பெயராய் ஒழுக்கத்தையுடைய பொருள்களை உணர்த்தி நின்ற தெனவும், உயர்திணை என்பது வினைத் தொகை எனவுங் கூறுவாருமுளர்.

சாதி வேற்றுமை கருதி, உலகப் பொருள்களை எல்லாம் உயர்திணை, அஃறிணை என இரண்டு சாதியாக வகுத்து, அவ்வேற்றுமை கருதி அவற்றை ஐம்பாலாகப் பகுத்தலே எல்லா ஆசிரியர்க்கும் கருத்தாவதன்றி, ஈண்டு ஒழுக்கம் கருத வேண்டு வது இன்மையானும், அவ்வொழுக்கமும் உயிரில்லன வற்றிற்குப் பொருந்தாமையானும், ஈண்டு திணை என்பதற்கு அது பொருளன்று எனவும்; உயர் திணையை உயர் திணையென இறந்தகால வினைத் தொகையாக விரிக்கின், மரம் நாடோறும் உயர்ந் தமை கருதி உயர் மரம் எனவும்; கல்வி அறிவு

நாடோறும் உயர்ந்தமை கருதி அதனையுடையார் மேலேற்றி, உயர் மக்கள் எனவும் கூறும் வினைத் தொகை போல, உயர்திணை என்பதற்கு உயரும் புடை பெயர்ச்சி வினை காட்சி வகையானும், கருத்து வகையானும் இன்மையின். அது வினைத்தொகை அன்று எனவும் கொள்க." இது நெல்லை சங்கர நமச்சிவாயப் புலவர் இயற்றி திருவாவடுதுறை ஆதீனம் சிவஞான சுவாமிகள் திருத்திய விருத்தி யுரையாகும்.

"மக்கள் - மனிதர்களும், தேவர் - தேவர்களும், நரகர் - நரகர்களும், உயர்திணை - உயர்திணைப் பொருள்களாம். மற்று உயிர் உள்ளவும் - மற்றை (மிருகம் பறவை முதலாகிய) உயிருள்ளவையும், இல்லவும் - (நிலம் நீர் முதலாகிய) உயிரில்லாதவையும், அஃறிணை - அஃறிணைப் பொருள்களாம்.

இம் மூவகையுடையோருடைய உடம்பையும் உயிரையும் தனித்தனி குறிக்கும்போது, அவ் விரண்டும் அஃறிணையாம். (உதாரணம்) உடம்பு பருத்தது, உயிர் நீங்கிற்று.

உயர்திணை - உயர்ந்த பகுப்பு; அஃறிணை - அல்திணை; அது வல்லாத (தாழ்வாகிய) பகுப்பு அஃறிணை யெனினும், இழிதிணை யெனினும் ஒக்கும். உயர்திணை - வினைத்தொகை. அஃறிணை பண்புத் தொகை.

மக்கள் - பூலோக வாசிகள், தேவர் - சுவர்க்க லோக வாசிகள், நரகர் - பூமியின் கீழுள்ள நரக லோகத்தில் வாசஞ் செய்பவர்கள். மனிதராய்ப் பிறந்து புண்ணிய பாவங்களைச் செய்து புண்ணிய

மிகுதியால் தேவராகவும் பாவ மிகுதியால் நரகராக வும் தோன்றுவதனல் மக்கள் தேவர் நரகர் என முறைப்படுத்திக் கூறினர்.

இனி, 'சூரியன் உதித்தான்', 'சூரியன் உதித் தது', சந்திரன் மறைந்தான்', 'சந்திரன் மறைந் தது'; 'கலி நீங்கினன்', 'கலி நீங்கிற்று'; 'வந்தான் கூற்றுவன்', 'வந்ததுகூற்று' எனத் தேவர்களை யும்; 'சேடன் எழுந்தான்' 'சேடன் எழுந்தது'; 'கார்க்கோடன் தீண்டினன்'; 'கார்க்கோடன் தீண்டிற்று' எனத் தேவகணத்தாரையும் உயர் திணையாக சொல்லுவதுமல்லாமல் அஃறிணையாகச் சொல்லுவதும் உண்டு.

கடவுளை உயர்திணையாகவும், அஃறிணையாகவும் சொல்லலாம். (உதாரணம்) கடவுள் இருக்கிறார், தெய்வம் இருக்கிறது.

இந்த உரை திருவல்லிக்கேணி வை. மு. சடகோப ராமாநுஜாசாரியாராலும், சே. கிருஷ்ணமாசாரியா ராலும் நன்கு விளக்கியும் பல விஷயங்கள் சேர்த் தும் அரிய உதாரணங்கட்குப் பொருளெழுதியும் பதிப்பித்த நன்னூல் காண்டிகையுரை. 13-ம் பதிப் பாக 1932-ல் வெளிவந்த ஒரு பிரதியிலிருந்து எடுக் கப்பட்டது.

ஆசிரியர் தொல்காப்பியனர் ஆண்பால் ஈறுபற் றிக் கூறுகையில்:

"னஃகான் ஒற்றே ஆடூஉ அறி சொல்"

எனவும்,

பெண்பால் ஈறுபற்றி உரைக்கையில்:

"ளஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல்"

னவும்,

பலர்பால் ஈறுபற்றிச் சொல்லுகையில் :

"ரஃகான் ஒற்றும் பகர இறுதியும்
மாரைக் கிளவி உளப்பட மூன்றும்
நேரத் தோன்றும் பலரறி சொல்லே"

எனவும் முறைப்படுத்தி ஓதியுள்ளனர்.

குணவீர பண்டிதரும், பவணந்தி முனிவரும் நூற்பாவாக உரைத்த நரகர், வானோர், தேவர் என்ற உரைகள்,

'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே' எனத் தொல்காப்பியனார் வகுத்த இலக்கணத்தின் உயர் நெறிக்கு ஒத்தனவன்று என்பதும்,

'தெய்வம் சுட்டிய பெயர் நிலைக்கிளவும்' என்ற கருத்தின் உண்மையை ஆழ்ந்து ஆராயுமிடத்து, அது வானோர், தேவர் என்பதைக் குறிப்பனவாகா வென்பதும்,

'இவ்வென அறியும் அந்தந் தமக்கிலவே' என்பதை நோக்குமிடத்து, மக்களிற் றிரிந்த பெயர்கள் தமக்கெனப் பாலுணர்த்தும் ஈறில்லனவாய் மக்கட் பெயர்க்குரிய ஈறுகளையே கொண்டு பால் பிரிந் திசைக்கும் எனவும் பொருள்படுமென்க.

திணைக்குப் புறனடையாக ஆசிரியர் தொல் காப்பியனார் யாத்த நூற்பா வருமாறு :

"குடிமை ஆண்மை இளமை மூப்பே
அடிமை வன்மை விருந்தே குழுவே
பெண்மை அரசே மகவே குழவி
தன்மை திரிபெயர் உறுப்பின் கிளவி
காதல் சிறப்பே செறற் சொல் விறற் சொல் என்று
ஆஅறு மூன்றும் உளப்படத் தொகைஇ

அன்ன பிறவும் அவற்றொடு சிவணி
முன்னத்தி னுணருங் கிளவி யெல்லாம்
உயர்திணை மருங்கின் நிலையின வாயினும்
அஃறிணை மருங்கின் கிளந்தாங் கியலும்"

—தொல். கிளவி. 57

என்பனவாகும்.

பாலுக்குப் புறனடை, இடத்துக்குப் புறனடை எண்ணுக்குப் புறனடை எனவும் இறுதியில் அமைத்துள்ளனர் ஆசிரியர். இவைபற்றி ஆராய்தல் விரியுமென்றஞ்சி இத்துடன் நின்றனன்.

இதற்குமுன் மக்கள், நரகர், வானோர், தேவர் என்ற கருத்துக்களைப்பற்றி நூலாசிரியர்களும், உரையாசிரியர்களும் தனித் தனிக் கூறியவைகளைக் கண்ணுற்றோம். இனி மக்கள், நரகர், வானோர், தேவர் இவர்கள் யாவர்? என்பதுபற்றிச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

விஞ்ஞான ஆராய்ச்சி மிகுந்த இக்காலத்தில் நமது கண்ணுக்குத் தெரியாத பல மண்டலங்கள் உள வெனவும், அம்மண்டலங்களில் உயிரினங்கள் வாழ்கின்றன வெனவும், சிலர் கூறுகின்றனர். இவையெல்லாம் எவ்வளவு தூரம் உண்மை யென்பதற்கு தக்க சான்றுகள் கொண்டு நிறுவிக் காட்டல் வேண்டும். இதுபற்றி இங்கு அதிகம் கூற வேண்டா. தமிழில் உள்ள நரகர், வானோர், தேவர் என்ற சொற்கள் என்ன என்ன பொருள் தருகின்றன; அவை யார் யாரைக் குறிப்பிடுகின்றன என்பதை மட்டும் பார்ப்போம்.

ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்துப்படி நாம் ஊன்றி நோக்குவோமாயின், உலக மக்கள் உள்

ளத்து நிகழும் இன்ப துன்ப நிகழ்ச்சிகளையே உலக வாழ்வில் பெருந் துன்பச் சேற்றில் அழுந்தல் நரக உலக மென்றும், நல்லொழுக்கத்தான் வருவதே இன்ப உலக மென்றும் பொருள் படுமென்பர் அறிஞர். பிறப்பு, இறப்பு, துன்பம், இன்பம் என்பன குறித்துப் பழந் தமிழ்க் கொள்கை பற்றிக் கூறிய திருவள்ளுவர்

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

என்றும்,

"அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்தே புகழு மில"

எனவும் அறிவுறுத்தினர். பழந் தமிழ்க் கொள்கை யுடைய பல சான்றோரும் பல இடங்களில் இவ்வாறு குறிப்பிடுகின்றனர்.

நோய் கொண்ட உடம்பும் தீய எண்ணமும் தீய செயலும் கவலை நிறைந்த வாழ்வும் நரக மென்றும், இன்பம் துன்பம் இரண்டினும் விருப்பு வெறுப்பற்று உள்ளமைதியுடன் இன்பமாக வாழ்வதே வீட்டு நிலை யெனவும் ஆன்றோர் கூறுவர்.

நன்னூலுக்கு உரை வரைந்த சிலர் தங்களறி வுக்கு எட்டாத ஒன்றைக்-காணாத ஒன்றைக் கற்பனை செய்து நரகர் உலகம் கீழ் உலக மென்றும், வானோர்-தேவர் உலகம் மேல் உலக மென்றும், மக்கள் வாழும் உலகம் பூவுலக மென்றும் பொருள் விரித்துள்ளனர். மக்கள் வாழும் உலகம் இம் மண்ணுலக மென்பது எவரும் அறிந்த உண்மை. நரக உலக மென்றும், மேல் உலகம் என்றும் கூறும் இவர்கள் இவ்விரண்டுலகங்களையும் கண்டனரா

எனுங் கேள்விக்கு இவர்கள் என்ன விடை யிறுப்பரோ! இக்கருத்து தெளிவிலா அறிவினரை - அறிவற்ற மக்களை மயங்க வைப்பனவாகும். இவ்வுலகில் வாழும் மக்களின் நன்மை குறித்தே நூல்கள் யாக்கப்படுகின்றன. ஒரு மாணவரை நோக்கி நரக உலகில் வாழும் நரகர் எவர்? வானுலகில் வாழும் தேவர் எவர்? என வினவின் அம்மாணவர் என்ன விடையிறுப்பர்? இஃது ஆசிரியர் தொல்காப்பியனுர் வகுத்த தனித் தமிழ் இலக்கண நெறிக்கும், பழந் தமிழ் மக்களின் இன்ப வாழ்வின் இலக்கண நெறிக்கும் பெரிதும் மாறுபட்ட கருத்தாகும் என்பனவற்றை இங்கு நாம் அறியலாம்.

“ சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு ”

—திருவள்ளுவர்.

இதன் பொருள்: வானம் வறக்குமேல் - மழை பெய்யாதாயின், ஈண்டு வானோர்க்கும் சிறப்பொடு பூசனை செல்லாது - இங்கு வரும் தேவர்களுக்கும் சிறப்பாக வழிபாடு நடவாது.

வழிபாடு - முகமன். அன்போடு வரவேற்றுப் போற்றுதல் ஈண்டு என்றது தமிழகத்தை. வானோர் இன்னார் என்பதைக் குறள் முகவுரையில் காண்க. மழை பெய்யாதாயின் அன்போடு அயலாரைப் போற்றும் தமிழர் பண்பாடாகிய அச் செயலும் நடைபெறு தென்பதாம்.—புலவர் குழந்தை.

“ தேவ ரனையர் கயவ ரவருந்தா
மேவன செய் தொழுகலான் ”

—திருவள்ளுவர்.

இதன் பொருள்: அவரும் தாம் மேவன செய்து ஒழுகலான்—கயவரைப் போன்றே தேவரும் தாம் விரும்புவனவற்றையே செய்து வருவதால், தேவர் அனையர் கயவர் - தேவரும் கயவரும் ஒரு தன்மைய ராவர்.

விரும்புவனவற்றையே செய்தல் - செய்வன தவிர் வன என்னும் மக்கட் பண்புச் சட்டத்தை அறிந்து, செய்வன செய்து, தவிர்வன தவிர்த்து நடக்காமல் மனம் போனபடியே செய்து நடத்தல். அதாவது நல்லொழுக்க மின்மை, தேவரும் செய்வன தவிர் வனவின்றி மனம் போனபடி விரும்பியதை யெல் லாம் செய்தொழுகலான் அத்தன்மையுடைய கய வர்களை அத் தேவருக்கு ஒப்பிட்டார். (1071 குறள்) கயவர்களுக்கு மக்களுக்குரிய யாதொரு நற் குணமும் இன்மையால் கயவர்கள் மக்களல்லர் என்றார். பின் யாரோடொப்பர் கயவர் என்னும் வினவிற்கு விடையாக, அவரைப் போலவே ஒழுக்கம் சிறிதுமில்லாத தேவரோடொப்பர் எனக் கயவர்க்கு இனங் கூறினர். இதனால் மக்களிலும் தேவர்கள் தாழ்ந்தவரென்பது வள்ளுவர் கருத்தாகும்—புலவர் குழந்தை.

ஆசிரியர் தொல்காப்பியனார் 'மக்கள்' என் றனர். இங்கு 'மக்கள்' என்றது மக்களின் ஆறாவது அறிவையே சுட்டினர். குணவீர பண்டிதர் மக் களுடன் நரகர், வானோர் என இரண்டினைக் கூட்டி யுரைத்து நூற்பா செய்தனர்.

"மக்கள் தாமே ஆறறி வுயிரே"

"மாவும் மாக்களும் ஐயறி வினவே"

என ஆறறிவுடைய மக்களினத்தையே சுட்டுகின்றார்

ஆசிரியர் தொல்காப்பியனுர். இங்கு உலக வாழ்வி லுள்ள மக்களையே குறித்தனர். பிற அவர்க்கு உடன்பாடன்று; பொதுவாக மக்களின் உயர்ந்த பண்பினைப்பற்றியே அவர் இலக்கணம் கூறியுள் ளனர்.

குணவீர பண்டிதர் குறிப்பிடும் நரகர், வானேர் யாவர்? இஃது ஆராய்தற்குரியன.

இங்கே நரகர் எவர்? வானேர் எவர்? ஆசிரியர் திருவள்ளுவர் அருளிய

"அருள்சேர்ந்த நெஞ்சினர்க்கில்லை யிருள்சேர்ந்த
இன்னு வுலகம் புகல்"

என்ற குறட்பாவுக்கு உரை வரைந்த பரிமேலழகர்:

"இருள் செறிந்த துன்ப உலக மென்றது திணிந்த இருளை யுடைத்தாய்த் தன்கட் புக்கார்க்குத் துன்பஞ் செய்வதோர் நரகத்தை. அது கீழுலகத்துள் ஓரிடமாகலின் 'உலக' மெனப்பட்டது. என்று பொருள் உரைக்கின்றுர். அறியாமை பொருந்திய துன்ப உலகத்தில் புகுதல்—புலவர் குழந்தை.

நரகர் - பூமியின் கீழுள்ள நரக லோகத்தில் வாசஞ் செய்பவர்கள். நரகம் - பாதாளம். எனவரும் குறிப்புக்கள் மக்களை மயங்க வைக்கின்றன. இதனைக் கண்டவர் யாவர்? இந்த உலகில் மக்களறிவு பற்றியே நாம் கருத்தூன்றல் வேண்டும். இந்த உலகில் நரக உலகம் யாண்டுளது? வானுலகம் யாண்டுளது? தேவருலகம் யாண்டுளது? வானேர் - தேவர் என்பன இரண்டும் ஒரு பொருளையே குறிப் பனவாம்.

நமது பழந் தமிழகத்தை ஆண்ட மூவேந்தருள் ஒருவரான சேர மன்னனைப்பற்றிப் புறநானூறு

126-ஆம் பாட்டில் மலையமான் திருமுடிக்காரி என்ற பழந் தமிழ்ப் புலவர்,

"சினமிகு தானை வானவன்"

என்றனர்.

சினமிக்க சேனையை யுடைய சேரன் என்பது இதன் பொருள்.

புறநானூறு 2-ஆம் பாட்டில் முரஞ்சியூர் முடிநாகராயர் என்ற புலவர்,

"யாணர் வைப்பின் நன்னாட்டுப் பொருந"

எனவும்,

"வான வரம்பனை"

எனவும் கூறுகின்றார்.

வான் - பெருமை; வானவன் - பெருமை யுடையோன் எனவுங் கூறலாம்.

இதன் பொருள்: புது வருவாய் இடையறாத வூர்களையுடைய நல்ல நாட்டுக்கு வேந்தே; வான வரம்ப; என்பனவாகும்.

இவ்வாறு மக்களைச் சுட்டும் ஒரே பொருளைக் குறிப்பிடும் சொற்கள் இடைக்கால வழக்கில் வேற்றுப் பொருள் குறிக்கும் மயக்க மனப்பான்மை கொண்டு நூலியற்றுதலும் உரை வரைதலும் இடைக் காலத்தவரின் பெரு வழக்காயிருந்து வந்திருக்கின்றன. ஒவ்வொரு சொல்லையும் தனித்தனி எடுத்து அதன் உண்மைப் பொருளை ஆராயும் போது பல சொற்கள் நமக்குப் பல உண்மைகளை விளக்குகின்றன. இதுபற்றிப் புலவர் குழந்தை திருக்குறள் முகவுரைப் பகுதியில்:

"மலையில் மூங்கில் ஒன்றோ டொன்று தேய்வதனால் தீயுண்டாகிறது. கல்லைச் செதுக்கும்போது

தீப்பொறி தோன்றுகிறது. இவற்றிலிருந்தே முதன் மாந்தர் தீக்கடை கோலும், சக்கி முக்கிக் கல்லும் கண்டு பிடித்திருக்க வேண்டும். பொருள்கள் ஒன்ருேடொன்று தேய்வதனுல் தீயுண்டாவதால் பழங் காலத் தமிழ் மக்கள் அதைத் 'தேய்' என்றனர். தேயு-வடமொழி. தேய் என்பதே தேய்-தே-தீ எனத்திரிந்தது. உணவு சமைத்தல், குளிர் நீக்கம் முதலிய நன்மை குறித்துத் தீயை மேலானது எனப் போற்றி வந்தனர். தேய் என்னும் சொல்லினடியாகப் பிறந்தவையே தேவன், தேவி, தேவர், தெய்வம் என்னும் சொற்கள். தேவன் - ஆண்பால். தேவி - பெண்பால். தேவர் - பலர்பால். தெய்வம் - பண்புப் பெயர் (தேய்உ - தேய்வு - தேவு. தேவு அன் - தேவன். தேவுஇ - தேவி. தேவுஅர் - தேவர். தேய்வு - தெய்வு. தெய்வுஅம் - தெய்வம்.) (ஒப்பியல் மொழிநூல் பக்கம் 237.) அரசனைத் தேவன் என்றதும் முதன்மையும் மேன்மையும் பற்றியே யாகும். தெய்வம் என்னும் சொல் (43, 55, 702 குறள்) ஆகிய மூன்றிடத்தும் மேன்மையே குறித்தல் காண்க." என ஆராய்ந்துள்ளனர்.

புலவர் குழந்தை அவர்கள் ஒரு பெரும் புரட்சியாளர். இராவண காவியம் என ஓர் அரிய நூலினை இயற்றித் தமிழகத்திற் களித்தனர். அந்நூல் தமிழகத்தில் தடைசெய்யப்பட்டுள்ளது. கம்பன் இயற்றிய இராம காவியம் போற்றப்படுகிறது. இரண்டும் தமிழில் தோன்றியவைகளே. இராவண காவியம், பல ஆயிரம் ஆண்டுகளாக மறைக்கப்பட்ட பல உண்மைகளைத் தமிழக மக்களுக்கு எடுத்து விளக்க வந்த இக்கால இலக்கிய நூல்களில் தலை சிறந்த

ஒன்று. இத்தகைய நூல் பல வெவ்வேறு வகையில் தோன்றியுள தெனினும், அவைகளுக்குத் தடை யிருப்பதாகத் தெரியவில்லை. இராவண காவியம் மட்டும் தடை செய்யப்பட்டுளது. இது தமிழின் தற் கால இழிநிலை குறித்து இரங்க வேண்டுவதன்றி, வேறொன்றும் கூறுதற்கில்லை. காலம் வரும். இத் தடைகள் தமிழகத்தில் உடைத்தெறியப்படுமென்று உறுதி கூறலாம்.

புலவர் குழந்தை அவர்கள் எழுதிய திருக்குறள் புதிய உரை எல்லோரும் படிக்க வேண்டிய உரை. சிலர் குறை கூறுவர். எதற்கும் குறை கூறுவோர் தமிழரிற் பலர் உளர் என்பதை யான் அறிவேன். 'பரிமேலழகர் உரையிலுள்ள சில மயக்கங்களைப் புலவர் குழந்தை அவர்கள் அகற்றியுள்ளனர்; இக் காலத்திற் கேற்றவாறு விளக்கியுள்ளனர்.' ஆசிரியர் திருவள்ளுவனர் கருத்தினை எளிய முறையில் அறிய விரும்புவோர் அவசியம் படிக்க வேண்டிய உரை புலவர் குழந்தை உரையாகும். திருக்குறள் முக வுரையில் குறிப்பிட்டுள்ள சில முக்கிய பகுதிகள் மேற்கண்ட வானோர், தேவர் என்ற மயக்க உரை களுக்கு விடையளிப்பனவா யுள்ளன. அவை பயன்படுமென்று எண்ணுகிறேன். புலவர் குழந்தை அவர்கள் கூறுவது வருமாறு:

1. "வடபுல மக்கள் தங்கள் பழைய தாயகத் தில் வாழும் தம்மவர் மேலானவர்; இந்நாட்டு மக்களி னும் உயர்ந்தவர் என்பன போன்ற தம் இனப்பெரு மையைத் தமிழ் மக்கள் நம்பும்படி செய்திருந்தனர்."

2. "தமிழ் மக்கள் அவ்வடவரின் பழந் தாயகத்தினரான அவ்வட புலத்தாரை வானோர், விசும்

புளார், தேவர், தெய்வம், புத்தேளிர், இமையார், புலவர் எனவும்; அவ்வட புலத்தார் வாழ்ந்த இடத்தை வானகம், மேலுலகம், புத்தேளுலகம், புத்தேள் நாடு, தாமரைக் கண்ணனுலகு எனவும் அழைத்து வந்தனர்.''

3. "மேற்குத் தொடர்ச்சி மலைச்சாரலின் உயர்ந்த மேட்டு நிலத்திலிருந்து சேர நாட்டை ஆண்டுவந்த சேர மன்னரை வானவர், வானவரம்பர் என அழைத்து வந்தது போலவே, பனி மலையின் வடபால் உயர்ந்த மேட்டு நிலத்தில் வாழ்ந்து வந்த தால் தமிழ்மக்கள் அவர்களை வானோர் என அழைத் தனர். வான் - உயர்வு. வானகம் - உயர்ந்த இடம். வானோர் - உயர்ந்த இடத்தில் வாழ்வோர். இது பற்றியே 'உயர்ந்தவர்' என்றதும், விசும்பு வான், மேலுலகம் என்றதும் அப்பொருளதே. திசைபற்றி ஐரோப்பா மேனாடு எனவும், மலேயா முதலியன கீழ்நாடு எனவும் வழங்குதல் போல இடம்பற்றி அது மேலுலகம் எனப்பட்டது.''

4. "தேவர் - மேலானவர், போற்றற்குரியவர். முன்னது மேலானவர் என்னும் வடவர் கூற்றினைக் கொண்டு கூறியது. மேலிடத்தினர் என்பது பொருள். பின்னது-புதிதாக வரும். அயல் நாடரை அன்புடன் வரவேற்றுப் போற்றும் தமிழப் பண் பாட்டினால் வந்தது.''

5. "தேவர் என்னும் பெயர் திருவள்ளுவர் பெயர்களுள் ஒன்றாக இருப்பதும், வேளாண் குடி மக்களுக்குத் தேவர் என்னும் பட்டப் பெயர் வழங்கி வருவதும்; மறக்குடி மக்களாகிய மறவர் குலம் தேவர் குலம் என்னும் பெயராலேயே இன்றும்

அழைக்கப்படுவதும், வட மொழியைத் (சமஸ்கிருதம்) தேவ மொழி என்பதும், கிழக்கு நாட்டு மக்கள் நாகர் எனும் பட்டப் பெயர் இருப்பதும், இந்நாட்டில் இருந்த அசுரர், அரக்கர் என்போர்களுக்கும், தேவர்களுக்கும் போர் நடந்தது; அசுரரும், அரக்கரும் தேவர்களைச் சிறையிட்டனர் என்பதும், தேவர் என்போர் மக்களில் ஒருவகையினரே என்பதற்குச் சான்றாகும்."

6. "சீனர் முதலிய வெளி நாட்டினர் யாத்திரையாய் இங்கு வந்து போனது போலவே, அவ்வட புலத்தாரும் இங்கு வரப்போக இருந்தனர். தமிழ் மக்கள் அவர்களை அன்புடன் வரவேற்றுப் போற்றி வந்தனர்; தமிழர் பெருமை அவ்வானுல கெங்கும் பரவியிருந்தது. வானோர், வானகம், தேவர், மேலுலகம் என்னும் இவ்வரலாற்றுண்மையே காலக் கடப்பால், தமிழ் மக்களின் கருத்திலாப் போக்கால், கற்பனை மயக்கால், உட்பகைப் பெருக்கால், சமயச் சார்பால், தன்னுணர் விழப்பால் இன்றையத் தமிழ் மக்கள் என்னும் இப்புதிய நிலையை அடைந்து விட்டது. வானோரும் நம்போன்ற மக்களே யாவர் என்பதைச் சிறிதும் ஐயப்பாடின்றித் தெளிக."

இவ்வாறு புலவர் குழந்தை அவர்கள், ஆசிரியர் திருவள்ளுவனார் அருளிய திருக்குறளுக்கு எழுதிய புதிய உரையிற் பலபாக்களின் கருத்துக்களுக்குப் புதிய முறையிற் பொருள் கூறிச் செல்கின்றார். புலவர் குழந்தை அவர்கள் கூறும் உரைகள் சிந்தனைக்கு விருந்தளிப்பதாயுள்ளன. இதுபற்றிய இன்னும் பல உண்மைகளை அறிய விரும்புவோர் புலவர் குழந்தை உரையிற் கண்டு தெளிக.

SB
5-63

ஆசிரியரின் பிற நூல்கள் :

1. காந்தி அடிகளும் நாகரிகமும் (அல்லது) உலக அமைதிக்கு வழி.
2. தொல்காப்பியர் பொருளுக்கு இலக்கணம் வகுத்த தமிழ்ப் பெரியார்.
3. தமிழ் முரசின் சிறந்த தமிழ்த் தொண்டு.
4. தாயின் திருவடியில் தலை சாய்ந்தார் பண்டிதர்.
5. இளைஞர் வாழ்வு (அச்சில்)
6. தொல்காப்பியரின் தொன்மைத் தமிழ்நெறி (முதற் பதிப்பு)

கிடைக்குமிடம் :

தொல்காப்பியர் தமிழ் நிலையம்,
126, பெரிய தெரு,
கோலாலம்பூர், மலாயா.